ACA AVADI MINISTRY PUBLISHING

ஆவியினாலேயே ஆகும்

போதகர். A. தாமஸ்ராஜ்

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை ஆவடி ஊழியம், சென்னை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆவியினாலே ஆகும்

போதகர். A. தாமஸ்ராஜ்

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை ஆவடி ஊழியம், சென்னை

ஆவியினாலேயே ஆகும்

ஆசிரியர் : போதகர். A. தாமஸ்ராஜ்

முதல் பதிப்பு : நவம்பர் 2015

பிரதிகள் : 5000

தொகுப்பு : பாஸ்டர். **J. இஸ்ரேல் வித்ய பிரகாஷ்,** மதுரை

Designing & Printing: Abi Art Printers, Chennai

காணிக்கை : ரூ.50/

வெளியிடுவோர்:

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை ஆவடி ஊழியம்

8, பிரகாசம் தெரு, பக்தவத்சலபுரம்

ஆவடி, சென்னை - 600 054.

தமிழ்நாடு, இந்தியா

For copies, contact:

ACA Avadi Ministry,

#8, Prakasam Street, B V Puram, Avadi,

Chennai - 600 054.Tamilnadu, India.

Tel: +91 44 3297 5774 / Mob: +91 93822 17774

e-mail: acaavadi@gmail.com

Website: www.acachurch.org

பொருளடக்கம்

1. செயல்படும் ஆவியானவர் 13

2. சகலத்தையும் செய்யும் ஆவியானவர் 47

3. வல்லமையின் ஆவியானவர் 81

4. ஆவியினாலே உண்டான இரத்தம் 103

தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக

"தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்"
(யோபு 26:13)

"ஆவியின்படி நடக்கிறவர்கள்
ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்"
(ரோமர் 8:5)

"அவருடைய (இயேசு கிறிஸ்துவின்)
கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில்
நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்;
அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை
அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்"
(1 யோவான் 3:24)

"கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்;
அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற
பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்"
(வெளி 1:10)

ஆவியினால் நிறைந்த வாழ்விற்கு வழிநடத்தும்
வல்லமையான வார்த்தைகள் இதில் உண்டு.

ஆவியானவரின் அசாதாரண வல்லமையினால்
ஆகும் காரியங்களை
இன்றைய சபைகள் கண்டிடவேண்டும் என்பதே எமது நோக்கம்.

1

செயல்படும் ஆவியானவர்

"செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."

(சகரியா 4:6).

1. செயல்படும் ஆவியானவர்

இந்த உலகத்திலே தேவனுடைய வல்லமை செயல்படுவதைப்போல இன்னொரு சக்தியும் செயல்படுகிறது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. மனிதர்கள் தங்கள் பலத்தையும் பராக்கிரமத்தையும் வைத்து எத்தனையோ காரியங்களைச் செய்கிறதை ஆதாமின் நாட்களிலிருந்து இன்று வரை பார்த்துக்கொண்டிருக்கிறோம். பாபேல் கோபுரத்தைக் கட்டிவிட்டு வானளாவப் பேசியதற்குப் பின் நடந்ததை நாம் அறிவோம்.

அதுபோலத் தங்களுடைய பராக்கிரமத்தினாலே, ஞானத்தினாலே, எந்திர தந்திரங்களினாலே எத்தனையோ காரியங்களை இன்றைக்கும்

மனிதர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு பெரிய பலத்துக்கும் பராக்கிரமத்திற்கும் ஒரு எல்லை இருக்கிறது என்பதை அறியாதிருக்கிறார்கள். மனித பலத்திற்கும், பராக்கிரமத்திற்கும் தேவன் ஒரு எல்லையை நியமித்திருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேவன் நியமித்த அந்த எல்லையைத் தாண்டி அவர்களால் ஒன்றையும் சாதிக்க முடியாது. ஆம், மனிதனுடைய பலமும் பராக்கிரமமும் செய்து முடிக்க முடியாததை, கர்த்தருடைய ஆவியானவர் செய்வதற்கு வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

மாட்டைப் போலான மன்னன்

நேபுகாத்நேச்சார் அரசன், "*இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா*" (தானியேல் 4:30) என்று சொன்னான்.

உண்மையாகவே அவன் கட்டிய பாபிலோன் இன்றைக்கும் ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது.

இது ஒரு சாதாரண காரியம் அல்ல. மாபெரும் சாதனை! ஆனால் அதுவே அவனுக்கு மாபெரும் சோதனை! "என் வல்லமையினாலே பராக்கிரமத்தினாலே செய்தேன்" என்று அவன் சொன்னது வெறும் வாய்ப் பேச்சு அல்ல. உண்மையாகவே அவன் மகா பெரிய பராக்கிரமசாலிதான்.

பல முறை பார்வோன் கண்டதுபோல தேவ வல்லமையின் வெளிப்பாட்டைக் கண்ட இந்த ராஜா, அடிக்கடி அவைகளைக் கனவாக நினைத்து மறந்துவிடுவான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை அக்கினிச் சூளைக்குள்ளே போடச் சொன்னவன் இவன்தான். தேவ வல்லமையைக் கண்டவுடன் அடியோடு மாறி அறிக்கை விடுவான். இந்தச் சம்பவத்திற்குப் பின் 12 மாதங்கள் சென்றபின் இவன் ஒருநாள் தன் ஜீவனத்தின் பெருமையில் நிறைந்து, மகா மேட்டிமையான

நினைவுகளுடன், தான் கட்டிய மகா பாபிலோனைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தான்.

பெருமையின் வார்த்தை வாயில் இருக்கும்போதே, "வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று, மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய் என்று சொல்லப்பட்டது." (தானியேல் 4: 31,32).

பூமியெங்கும் உலாவுகிற கர்த்தரின் கண்கள் இந்த மேட்டிமைக் கண்ணனைக் கண்டன. சுப்ரீம் கோர்ட் கூட இதுபோன்ற தீர்ப்புகளைக் கொடுப்பதற்குப் பல மாதங்கள் அல்லது பல வருடங்கள் எடுத்துக்கொள்ளும். ஆனால் பெருமையின் வார்த்தை வாயில் இருக்கும்போதே அரமனை வாயிலில் தீர்ப்பும் வெளியாகிவிட்டது. உடனே அந்தத் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. அவன் மனிதன் என்ற நிலவரத்திலிருந்து தள்ளப்பட்டான். மாட்டைப்போல மாறிவிட்டான். கழுதையைப் பேசவைத்து பிலேயாமுக்குப் பிரசங்கம் பண்ணவைத்தவருக்கு (எண்.22:28-30) இது ஒரு பெரிய காரியமல்ல.

ஹவுஸ் (நிறைய) புல்

இப்போதெல்லாம் மேட்டிமைக் கண்ணன்களை இப்படி உருமாற்றம் செய்தால் கால்நடைகளின் எண்ணிக்கை உலகமெங்கிலும் பெருகிப்போகும். இந்த நேபுகாத்நேச்சாரின் **நேச்சர்** (இயல்பு நிலை) மாற்றப்பட்டு, நான்கு கால் ஜீவராசிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டது- இது ஓர் இன மாற்றம் மட்டுமே!

ரேஷன் கார்டு எதுவும் தேவையில்லை, வீட்டு வரியும், மாட்டு வரியும் கட்ட வேண்டிய அவசியமில்லை. புல்லை மேய்ந்துகொண்டு மாட்டுக் கொட்டத்தில் படுத்துக்கொண்டு அசைபோட்டுக் கொண்டிருந்தால் போதும்.

எஜமானைப் பற்றி மட்டுமல்ல, எதைப்பற்றியும் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை. எப்படியும் புல் மற்றும் புண்ணாக்கு எல்லாம் கிடைத்துவிடும்.

நேபுகாத்நேச்சார் ராஜாவின் அரண்மனையில் சாப்பாட்டு மேசை காலியாகிவிட்டது. அங்கே வேலைக்காரர்கள் இடைக்கால முதல் மந்திரிகள் போல மேஜையில் உட்கார்ந்து சாப்பிட்டிருப்பார்கள். அவர்களுக்குப் பூர்த்தியான சாப்பாடு கிடைத்திருக்கும். பல வருடங்கள் கொடுமைகளையும் அடக்குமுறைகளையும் சகித்துக்கொண்டிருந்த பணியாளர்களுக்கு ராஜாவின் இந்த இடைக்கால **இன** மாற்றத்தினால் ஒரு பெரிய **மன** மாற்றம் ஏற்பட்டது என்றுகூடச் சொல்லலாம்.

கனம்பொருந்திய 'நேச்சார்' அவர்கள் மனித இனத்திலிருந்து மாட்டு இனத்திற்குத் தற்காலிகமாகத் தள்ளப்பட்டபோதுதான் வானத்தை அண்ணாந்து பார்த்திருப்பார். அப்பொழுதுதான் தனக்கும் மேலாக ஒரு வல்லமை இருப்பதை அறிந்திருப்பார்.

வானத்தையே பார்க்காமல் பூமியையே பார்த்து வாழும் பன்றிகள் ஏராளம். ஒரு நாள் கம்பி வலை வைத்து கண்ணியில் பிடிக்கப்பட்டு, நான்கு கால்களும் கட்டப்பட்டு, கறிக்காகக் கொல்லப்படும்போது உலக்கையால் அடிப்பார்கள். அது வரை பூமிக்குரியவைகளையே பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பன்றிகள் முதல் முறையாக வானத்தைப் பார்க்குமாம்.

அதுபோல இந்த ராஜா ஒருநாள் தேவனுடைய சத்தத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும், பராக்கிரமத்தையும் பார்த்தான். அவன் மாட்டைப் போலப் புல்லை மேய்ந்துகொண்டிருந்தான்.

ஹவுஸ் புல் என்பார்களே! ராஜாவின் வீடு முழுவதும் **புல்லுக்கும்** வைக்கோலுக்கும் மாட்டுத் தீவனங்களுக்கும் பஞ்சமே **இருந்திருக்காது!** இப்படியும் சில அதிரடி மாற்றங்கள் மனிதர்களின் வாழ்விலே வந்துபோகத்தான் செய்கின்றன. அப்போதெல்லாம் மெய்யான மனந் திரும்புதல் உண்டாகத்தான் செய்கிறது.

அகாஸ்வேருவின் ஆர்ப்பாட்டங்கள்

எஸ்தர் 10:1,2-ல் "ராஜாவாகிய அகாஸ்வேரு தேசத்தின் மேலும், சமுத்திரத்திலுள்ள தீவுகளின் மேலும், பகுதி ஏற்படுத்தினான். வல்லமையும் பராக்கிரமமுமான அவனுடைய எல்லாச் செய்கைகளும், ராஜா பெரியவனாக்கிய மொர்தெகாயினுடைய மேன்மையின் விர்த்தாந்தமும், மேதியா பெர்சியா ராஜாக்களின் நடபடி புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது" என்று வாசிக்கிறோம்.

இவனது வல்லமையைக் காண்பிக்க, பராக்கிரமத்தைப் பறைசாற்ற, கண்காட்சி மற்றும் விருந்து 180 நாட்களுக்கு நடந்ததென்றால், இவனது பலத்தைப் பாருங்கள். இந்த ராஜா 127 தேசங்களை அடக்கி ஆண்ட ராஜா.

இன்றைய பெற்றோர் இரண்டு பிள்ளைகளை அடக்கி ஆள முடியாமல் தவிக்கிறார்கள். சிறு குடும்பம் சீரான குடும்பம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எத்தனைபேர் தங்கள் குடும்பத்தைச் சீராய் நடத்துகிறார்கள்?

ஒரு சிறு குடும்பத்தைச் சீராய் நடத்திச் செல்ல முடிகிறதில்லை. சொல்லப்போனால் அது ஒரு குட்டிப் பார்லிமெண்ட்டைப் போலிருக்கிறது.

நம்முடைய முற்பிதாவாகிய யாக்கோபை எடுத்துக்கொண்டால் அவருடைய 12 பிள்ளைகளில் யோசேப்பைத் தவிர மீதமுள்ள 11 ஆண் மக்களும் அட்டகாசப் பேர்வழிகள். ஒரேயொரு பெண் பிள்ளை தீனாள். அவளும் தீட்டுப்பட்டுப்போனாள்.

பெரும்பாலும் இன்றைய வீடுகளில் இருக்கிற 2 பிள்ளைகள், யாக்கோபின் 11 ஆண் பிள்ளைகளுக்குச் சமம் என்று சொல்லுமளவுக்குப் பெற்றோரைப் பாடாய்ப் படுத்துகிறதைப் பார்க்க முடிகிறது.

இப்படிப்பட்ட அடங்காத பிள்ளைகளினால் மூர்ச்சித்துப்போன பெற்றோர்கள் ஏராளம். நடைப்பிணங்களாக்கப்பட்டவர்கள் ஏராளம். ஒரு விசுவாசியின் வீடு நற்சீர் பொருந்திய சாட்சியின் கூடாரமாக இருக்கவேண்டும்.

அகாஸ்வேரு ராஜா 127 நாடுகளை ஆண்ட மாபெரும் மன்னன். அங்கே ஆயிரக்கணக்கில் குறுநில மன்னர்கள், தேசங்களின் பிரதானிகள், மந்திரிமார், பிரபுக்கள் என்று ஒரு மாபெரும் ஐ.நா. சபையைப் போல ஆட்சியாளர்கள் இருந்திருப்பார்கள். இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்கும் உள்ள 127 நாடுகளை அவன் அரசாண்டான். **நம் நாடு** உட்பட அவனே ஆட்சிசெய்திருக்கிறான். நம் நாட்டின் பெயர் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கிறது.

ஒரு தேசத்தை ஆளுகை செய்வதற்குள் நம்முடைய தலைவர்கள் பெரும்பாடுபடுகிறார்கள். தனியொரு மனிதன் 127 நாடுகளைச் சிறப்பாக ஆட்சி செய்த வரலாறு வேதத்தில் இடம்பெற்றுள்ளது. அப்படிப்பட்டவனின் மனைவியாக ஜெப வீராங்கனை எஸ்தர் என்ற பெண்மணி யூத ஜனத்திற்கு மகா மேன்மையாக இருந்துள்ளார்கள். அகாஸ்வேரு ராஜா 180 நாட்கள் விருந்து பண்ணி, தன் ஜனங்களுக்கும் உலகத்தின் மற்ற நாடுகளுக்கும் தனது வல்லமையைக் காண்பித்துக்கொண்டிருந்தான்.

கரகோஷமா? கர்த்தரின் வல்லமையா?

ஒரு ராஜா தனது வல்லமையைக் காண்பிக்க 180 நாட்கள் மட்டுமே செலவிட்டான். பரலோக ராஜாவின் வல்லமையைக் காண்பிக்க நமக்கு வருடத்திற்கு 52 நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உலகம் உள்ள வரை, டுனாமிஸ் (வல்லமை) பெருவிழாக்கள் வாரந்தோறும் சபைகளில் நடைபெறும்.

ஆனால் ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடந்ததுபோல வல்லமையான அற்புதங்கள், கிரியைகள் வெளிப்படுகிறதா என்று உற்றுப் பார்த்தால், அந்த அளவுக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏதோ நாம் நினைப்பது போல, பெந்தெகோஸ்தே சபையில் கைதட்டிக் களிகூருவதும், ஆரவாரிப்பதும், உணர்ச்சி வசப்பட்டுக் கூச்சல் போடுவதும் தேவ வல்லமையின் வெளிப்பாடு என்று சொல்லிவிடமுடியாது.

இவற்றிற்கும் மேலாக வல்லமையும் பராக்கிரமமுமான காரியங்களைச் செய்கிற தேவன் நம் சபையில் இருக்கிறார் என்பதை தேவ ஜனங்களும் இந்த உலக மக்களும் உணர வேண்டும். அதற்காக 5 வகை ஊழியர்களும் (எபே. 4:11-13) அரும்பாடு படவேண்டும்.

ஆழத்தை அறிய ஆவியின் வெளிப்பாடு தேவை

இந்த உலகத்திலே மனிதர்களால் செய்யமுடியாத, அதே வேளையில் ஆவியானவர் மட்டுமே செய்யக்கூடிய ஏழு காரியங்களை வேதத்தின் வெளிச்சத்தில் தொடர்ந்து தியானிக்கப்போகிறோம்.

ராஜாக்களாலும், பராக்கிரமசாலிகளாலும் செய்யமுடியாத காரியங்களைத் தனி மனிதனின் வாழ்க்கையில் ஆவியானவர் எப்படிச் செய்து முடிக்கிறார் என்பதை ஆவியானவர் தருகிற வெளிச்சத்தில் காணப்போகிறோம்.

"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணின வைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரி. 2:9,10) என்று பவுல் மூலம் பரிசுத்த ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார்.

இயேசுவில் அன்புகூருகிறவர்களுக்கு தேவன் என்னவெல்லாம் ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டுமானால் **ஒரு வெளிப்பாடு தேவை.**

ஆழத்தில் இருப்பதையும் ஆகாயத்தில் இருப்பதையும் கண்டுபிடிக்க எத்தனையோ கருவிகள் வெளிவந்துவிட்டன. ஆனால் வேதத்தில் உள்ள அதிசயங்களைக் காண மனக்கண்கள் திறக்கப்பட வேண்டும், அதோடு ஆவியானவரின் வெளிப்பாடு கிடைக்கவேண்டும்.

இன்றைக்கு இயேசுவில் அன்புகூருகிறவர்களில் ஒரு சிலர் தவிர அநேகர் கொஞ்சக் காலத்தில் விசுவாசத்தை மறுதலித்து இயேசுவின் மீதிருந்த தங்கள் அன்பை விட்டுவிடுகிறார்கள். காரணம் என்னவென்றால், ஆவியில் வெளிப்பாடு இல்லை என்றே நான் கூறுவேன். **தரிசனம் இல்லாத இடத்திலே ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்** என்று எழுதப்பட்டுள்ளது.

ஒரு காலத்திலே ஆண்டவராகிய இயேசுவை மிகவும் நேசித்தவர்களில் சிலர் திடீரென்று பின்மாற்றம் அடைந்துவிடுகிறார்கள். ஏதோ அவர்கள் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை, பிள்ளைகளுக்குத் திருமணம் நடக்கவில்லை, வேலை கிடைக்கவில்லை என்பது போன்ற காரணங்களால் விசுவாச ஜீவியத்தை விட்டுவிட்டு, அவிசுவாசிகளின் கூட்டத்தில் அல்லது கூட்டணியில் இணைந்து விடுகிறார்கள். அப்படியல்ல.

ஆண்டவரிடத்தில் நீங்கள் அன்புகூருகிறது உண்மையானால், தேவன் உங்களை அழைத்தது உண்மையானால் அவர் நமக்காக ஆயத்தம்பண்ணிவைத்திருக்கிற நன்மை என்பது உண்மையிலும் உண்மையே! அது ஒரு கானல் நீர் அல்ல.

உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! (சங்.31:19) என்கிறார் சங்கீதக்காரர்.

பிறந்த உடனே பிளாட் ரெடி

இந்நாட்களில் குழந்தை பிறந்தவுடனே அதற்கு ஒரு நிலத்தை வாங்கிப்போட்டுவிடுகிறார்கள். அந்தப் பிள்ளை வளர்ந்து திருமண வயதை எட்டுவதற்குள் எத்தனையோ விதங்களில் சொத்துக்களை அந்தப் பிள்ளைக்காகச் சவதரித்து வைக்கிறார்கள்.

ஆனால் பிறந்த பிள்ளையானது, தனக்காக அப்பாவும் அம்மாவும் ஆயத்தம்பண்ணிவைத்திருக்கிற காரியங்களை அறிந்துகொள்கிறதில்லை.

அப்பா அம்மா என்று உச்சரித்துப் பேசக்கூடத் தெரியாத பிள்ளைக்கு என்ன தெரியும்? வாங்கிப்போடப்பட்டுள்ள பிளாட் 5 செண்ட் நிலமா அல்லது இரண்டு கிரவுண்டா என்று எப்படித் தெரியும்? ஆனால் இதை அறிந்துகொள்ளவேண்டுமானால் அந்தப் பிள்ளை வளர்ந்து பெரியவனாகவேண்டும். இதற்கு அந்தப் பிள்ளையின் சரீரத்திலே, மனதிலே ஒரு வளர்ச்சியும் முதிர்ச்சியும் தேவையாயிருக்கிறது.

இதைப் போலவே ஆவியைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகளும் தேவன் தங்களுக்கு என்னவெல்லாம் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார் என்பதை அறியவேண்டுமானால் **ஆவியிலே ஒரு முதிர்ச்சி** தேவையாயிருக்கிறது. அந்த முதிர்ச்சி தேவனிடமிருந்து ஒரு வெளிப்பாட்டைப் பெற்றுத் தருகிறது. தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்ற உடனே இதை அறிந்துகொள்ள முடியாது. வசனம் கேட்டு வளரும்போது காரியங்கள் தெளிவாகும்.

தலையில் தோன்றிய தரிசனம்

வேதத்தை வாசித்துப் பார்த்தால் தேவன் புறஜாதிகளுக்குக் கூட வெளிப்பாட்டைக் கொடுத்திருப்பதைக் காண முடியும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் படுக்கையிலே படுத்திருந்தான். இவன் ஒரு தரிசனத்தைப் பார்த்தான். இவனுக்கு முன்னால் ஒரு பெரிய விருட்சம் நின்றது. **தலையில் தோன்றிய தரிசனத்தால்** தடுமாறிப்போனான் (தானியேல் 4:5-18).

வேதம் சொல்லுகிறது; அவன் தரிசனத்தைப் பார்த்தான். தேவன் வெளிப்படுத்தலைக் கொடுத்தார். ஆனால் பெருநெஞ்சுள்ள அவனுக்கு அதனுடைய அர்த்தம் புரியவில்லை. இவனுக்கு அர்த்தம் சொல்ல அபிஷேகம் பெற்ற ஆவியில் நிறைந்த இன்னொரு மனிதன் தேவையாயிருந்தான். தேவனுடைய ஆவியைப் பெற்ற தானியேல் அவனுக்கு வெளிப்படுத்தலைச் சொல்லுகிறான் (தானியேல் 4:19-27).

அநேகர் இதுபோலத் தரிசனங்களைத் தங்கள் தலையில் காண்கிறார்கள். ஆனால் **வெளிப்படுத்தல் ஆவியிலே** இருக்கிறது. ஆவியானவருடைய ஒத்தாசை இல்லாமல் ஒன்றையும் அறிந்துகொள்ளவோ புரிந்துகொள்ளவோ முடியாது. ஆவியானவரின் வெளிப்பாடு இல்லையென்றால் தலையும் தரிசனமும் பெரியதாய்க் காட்சியளிக்கும். அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை.

பார்வோன் கண்ட தரிசனத்தில் ஏழு கொழுத்த பசுக்கள், ஏழு கதிர்கள் இருந்தன. பல தரிசனங்களை அவனும் பார்த்தான் (ஆதி. 41:1-7). இதுபோன்ற தரிசனங்கள் சொப்பனங்கள் எல்லாம் அதைக் கண்ட ராஜாக்களுக்கு ஒற்றைத் தலைவலியை உண்டுபண்ணிக் கலங்கப்பண்ணின. இப்படிப்பட்ட தரிசனங்களுக்கும் சொப்பனங்களுக்கும் வெளிப்பாட்டைச் சொல்ல ஆவியைப் பெற்ற **ஒரு மனிதன்** தேவையாய் இருந்தான்.

தானியேலும், யோசேப்பும் விசேஷித்த ஆவியைப் பெற்ற தேவ மனிதர்களாய் அந்நாட்களில் வாழ்ந்திருக்கிறார்கள். **இந்நாட்களில் ஆவியைப் பெற்றவர்களைப் பார்ப்பது எளிது. ஆனால் விசேஷித்த ஆவியைப் பெற்றவர்களைப் பார்ப்பது அரிது.**

பார்வோன் சொப்பனத்தைக் கண்டபோது கலங்கினான். விளக்கம் சொல்ல ஒருவனாலும் கூடாத சூழ்நிலையில் கடைசியில் யோசேப்பை அழைத்தார்கள் (ஆதி. 41:14). யோசேப்பு பார்வோனிடம் அவனது தரிசனத்திற்கும் சொப்பனத்திற்கும் உரிய வெளிப்படுத்தலைச் சொன்னான். ஆகையினாலே அவன் தேசத்தின் அதிபதியாகக் கனப்படுத்தப்பட்டான். தேவன் யோசேப்பைப் பார்வோனுக்கு அடுத்தவனாகச் சிங்காசனத்தில் உயர்த்திவைக்க இந்த வெளிப்படுத்தல் காரணமாயிருந்தது.

தானியேலுக்குள்ளே விசேஷித்த ஆவி உண்டென்று ராஜாவுக்கு அவன் மனைவி மூலம் தெரியவந்தது (தானி. 5:10-12). இரட்சிக்கப்படாத அந்த ராஜாத்தி இந்த விசேஷித்த ஆவியை இனம் கண்டுவிட்டாளே!

5 நிமிடங்கள் பரிசுத்தாவியிலும், 50 நிமிடங்கள் வேறே ஆவியிலும் நிறைகிற அனுபவம் தானியேலின் அனுபவமல்ல. தானியேலுக்குள்ளே இருந்த இந்த ஆவி விசேஷித்த ஆவி. **ஒரு பாவி இந்த ஆவியை இனம் கண்டுகொள்ளும் அளவுக்கு விசேஷித்த தன்மையையுடைய வெளிப்பாட்டு ஆவி.**

தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கும் எனக்கும் ஏதோ ஒரு ஆவி அல்ல, எல்லாரும் பெற்ற ஆவியும் அல்ல, **விசேஷித்த ஆவி தேவை.**

குறுக்குச் சாலையில் ஓடிய அகிமாஸ்

தேவைக்கு மேல் இன்றைக்கு நிறைய தீர்க்கதரிசிகள் இந்திய தேசத்தில் மட்டுமல்ல, உலகமெங்கிலும் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் மற்றவர்களைப் பற்றித் தீர்க்கதரிசனம் சொல்லு கிறார்கள். தங்களைப் பற்றி அறிந்துகொள்ள அவர்கள் முற்படுகிறதில்லை.

இன்றைய விசுவாசிகள் ஏன் வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்ய முடிவதில்லை? ஏன் விசுவாச ஜீவியத்தில் தோற்றுப்போகிறார்கள்? தேவன் தங்களுக்கு என்ன வைத்திருக்கிறார் என்பதை அறியாத காரணத்தினாலேயே அவர்கள் தோல்வியடைகிறார்கள். அறிவில்லாமையினாலேயே என் ஜனங்கள் சங்காரமாகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

அன்றைக்கு, தாவீதை நோக்கி ஓடிய **அகிமாஸிடம்** செய்தி இல்லை. செய்தியைக் கொண்டுசெல்ல **யோவாப்** அனுமதியும் தரவில்லை. ஆனாலும் துடிப்புடன் கூஷிக்கு முந்தி, குறுக்குச் சாலையில் ஓடி தாவீதை வணங்கி நின்றான். தாவீது அப்சலோமை குறித்து விசாரித்தபோது **அது இன்னதென்று தெரியாது** என்றான். அப்பொழுது தாவீது ராஜா அவனைப் பார்த்து நீ அங்கே போய் நில் என்று சொன்னான். அகிமாஸ் பரிதாபமாய் ஓரமாய்த் தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தான். கூஷி அதற்குப் பின் ஓடி வந்து ராஜாவிடம் (அப்சலோமின் மரணச்) செய்தியைச் சொன்னான் (2 சாமு.18:29,30).

இன்றும் இதுபோலத்தான் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. சத்தியங்களை அல்லது சம்பவங்களைத் தெள்ளத்தெளிவாக அறிந்து வைத்திருக்கும் கூஷிக்களை விட, **ஒன்றும் தெரியாது** என்று சொல்லுகிற **அகிமாஸ்கள்தான் வேகமாக ஓடும் பெண் ஒட்டகங்களைப்போல (எரே.2:23) அர்த்தமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.** வெளிப்பாட்டைப் பெறாதவர்களின் செய்திகளில் சாரமிருக்காது. சாரமில்லாத உப்பு என்னத்திற்கு? அகிமாஸை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.

அன்பே பிரதானம்

இந்தச் செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற உங்களுடைய கண்களைக் கர்த்தர் திறப்பாராக. நாம், வெளிப்படுத்தலைப் பெற்ற மக்களாக இருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய காரியங்களைப் பல விதங்களிலே தம்முடைய தாசர்களுக்கு வெளிப்படுத்துகிறவர். இயேசு இதற்காக எதிர்பார்ப்பது என்னவென்றால், நாம் அவரிடம் அன்பாயிருக்கவேண்டும் என்பதே. **பணத்திற்கு அல்ல, பாசத்திற்குக் கிடைப்பதே வெளிப்பாடு.**

"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளு கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" (யோவான் 14:21) என்று இயேசு கூறுகிறார்.

வெளிப்படுத்தலைப் பெற **அன்பே பிரதானம்**. வெளிப்பாடு பணத்தை வைத்து அல்ல, நேசரின் மேல் வைக்கப்படும் பாசத்தை வைத்துப் பகிர்ந்துகொடுக்கப்படுகிறது.

அப்போஸ்தலனாகிய யோவானுக்குக் கிடைத்த வெளிப்பாடுகள்தான் வேதத்தை முற்றுப்பெறச் செய்கின்றன. இந்தக் கடைசி நாட்களில்

சம்பவித்துக்கொண்டிருப்பதை 2000 ஆண்டுகளுக்கு முன் வெளிப்பாடாகப் பெற்றவர் இந்த **யோவான்.** சீடர்களெல்லாரிலும் இவர் அன்பின் சீடன் என்று அழைக்கப்பட்டார். இயேசு மீது நாம் வைக்கும் அளவுகடந்த அன்பிற்கும் பிரியத்திற்கும் கிடைக்கும் பரிசுதான் வெளிப்பாடுகள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அர்த்தமுள்ள ஆராதனை செய்வோம்

இன்றைய சபைகளிலே வசனம் பிரசங்கிக்கப்படுகிறது. தொலைக் காட்சி வாயிலாக, ரேடியோ மூலமாக, இன்டர்நெட் வழியாக, வசனங்கள் வினாடி தோறும் பிரசங்கிக்கப்படுகின்றன. உலகின் எங்கோ ஒரு **மூலையில்** இருக்கிறவனின் **மூளையில்** இந்த வசனங்கள் உட்புகுந்து அவனது இதயத்திற்குள் நுழைந்து அவனை மனந்திரும்பச் செய்கின்றன. அவன் விசுவாசித்துத் தன்னைத்தேவனுக்கு அர்ப்பணிக்கிறான்.

என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்ற வார்த்தையின்படி அப்படிப் பட்டவனைப் பரலோகம் கண்காணிக்கிறது. அவன் இயேசுவை அளவில்லாமல் நேசிக்கத் துவங்குகிறான். அவனுக்கு இயேசு தம்மை வெளிப்படுத்துகிறார்.

இன்றைக்கு வசனத்தைக் கேட்கிறவர்கள் எல்லாரும் தேவனிடத்தில் அன்புகூருகிறதில்லை. பெரியதொரு சபையிலே ஆயிரக் கணக்கான மக்கள் வாரந்தோறும் கூடுகிறார்கள். பார்ப்பதற்கு மிகவும் பரவசமாக இருக்கிறது. அங்கே திருவசனம் பிரசங்கிக்கப்படுகிறது. ஆனால் கேட்கிற எல்லாரும் 100க்கு 100 வசனத்திற்குக் கீழ்ப்படிகிறதில்லை.

விதைக்கிறவன் உவமையில் இயேசு சொன்னதின்படிதான் காரியங்கள் காணப்படுகிறது. வசனத்தின்படி வாழ்கிறதற்குப் பல விதங்களில் விசுவாசிகள் தயங்குகிறார்கள். ஒரு காதில் கேட்டு மறு காதில் எளிதாய் விட்டுவிடுகிறார்கள். மார்க்கெட்டில், கறிக் கடையில் இருக்கிற கவனம் விசுவாசிகளுக்குச் சபைக்குள்ளே இருக்கும்போது இருப்பதில்லை.

கடையில் இமைகளை மூடாமல் இருந்து வாங்கிச்செல்லுகிறார்கள். கவனம் சிதறினால் கறியில் கலப்படம் செய்துவிடுவார்கள், எடையில் ஏதாகிலும் குறைத்துவிடுவார்கள் என்பதே இவர்களது வாதம். சரி.

ஆலயத்தில் செய்தியைக் கேட்கும்போது ஏன் இமைகளை மூடுகிறார்கள்? அவ்வளவு பயபக்தியா? இல்லை. களைப்பின் மிகுதியால் சிலர் உறங்கிவிடுகிறார்கள். இந்த மந்த நிலை மாறவேண்டும்.

இயேசுவின் சகோதரன் யாக்கோபு எழுதிவைத்ததை வாசித்துப் பாருங்கள்; *"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்"* (யாக்கோபு 1:22) என்கிறார்.

ஆம், வசனத்தின்படி வாழ இனியொரு வாழ்க்கை நமக்குக் கிடைக்கப் போவதில்லை. வாழும்போதே வாரம் முழுவதும், வருடம் முழுவதும் வசனத்திற்காக வைராக்கியமாய் வாழ்ந்துகாட்டுவோம்.

சிலர் **சண்டே** மட்டும் உண்மைக் **கிறிஸ்டியனாகவும்**, மற்ற நாட்களில் **சண்டைபண்ணுகிற கிறிஸ்டியனாகவும்** இருப்பார்கள். வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் நேரம் கொடுப்பதில்லை. விசுவாசிகளின் வாழ்க்கையில் அற்புதங்களும் அதிசயங்களும் குறைந்துபோய், தடுமாற்றங்களும் ஏமாற்றங்களும் பெருகியிருப்பதைக் காணமுடிகிறது.

காரணம், விசுவாசிகள் இயேசுவில் அன்புகூர்ந்து ஆவியில் நிறைந்து வசனம் கேட்பதில்லை. பிரசங்கத்தைக் கேட்டு மார்க் போடுகிறார்கள். வெளிப்பாட்டுடன் கூடிய தேவனுடைய வார்த்தைகளுக்கு அவர்கள் செவிகொடுப்பதில்லை.

அன்பானவர்களே, குறைகள் இருந்தால் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு திருத்திக்கொள்வோம். இந்த ஆண்டில் எஞ்சிய நாட்களை உண்மையாய்ப் பிரயோஜனப்படுத்திக்கொள்வோம்.

செயல்முறைத் தேர்வில் பாஸ் பண்ணிட்டீங்களா?

பள்ளியிலும் கல்லூரியிலும் வெற்றிபெறுவதற்கு இரண்டுவிதத் தேர்வுகளை வைத்திருக்கிறார்கள். Theory & Practical Examinations என இரண்டிலும் சரியான மதிப்பெண்களைப் பெறவேண்டும்.

இன்றைக்குப் பெரும்பாலான ஊழியக்காரர்கள் எழுத்துத் தேர்வில் (பிரசங்கிப்பதில்)50 மார்க் வாங்கிவிடுகிறார்கள். செயல்முறைத் தேர்வில் (Practical) தோற்றுப் போய்விடுகிறார்கள். சாதுரியமாய்ப் பிரசங்கிக்கிற பிரசங்கிமார்கள்கூட செயல்முறைத் தேர்வைப் போன்ற நடை முறை வாழ்வில் (சாட்சியுள்ள ஜீவியம் செய்வதில்) தோல்வியடைந்து விடுகிறார்கள்.

அதனால்தான் ஆண்டவர் சொன்னார், **நீங்கள் நன்றாகப் போதிக்கிறீர்கள், ஆனால் போதிப்பதை நீங்கள் செய்கிறதில்லை! ஆகையால் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாகக் காட்சியளிக்கிறீர்கள் என்றார்.**

நீங்கள் ஜீவனுள்ள கல்லாயிருக்கிறீர்களா? அல்லது வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையைப் போலிருக்கிறீர்களா? வாழும்போதே சிந்திக்க வேண்டிய காரியம்.

நம் கரத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேத புத்தகம் போதிப்பதற்காக மட்டுமல்ல, போதகர்கள் ஒருபோதும் வேதத்தைப் போதிப்பதற்காக மட்டும் பயன்படுத்தக்கூடாது. வாசிப்பதற்கும் அப்பியாசிப்பதற்கும் பயன்படுத்தவேண்டும். சோர்வுற்றிருக்கும்போது வேதத்திலிருந்து செய்திகளைக் கேட்பதும், பயம் வரும்போது வாசிப்பதும் ஒரு விசுவாசிக்கு அழகல்ல.

எஸ்றா 7:10-ல் எஸ்றாவைப் பற்றி எழுதப்பட்டுள்ளபடி வேதத்தை வாசிக்கவும், அதன்படி நடக்கவும், அதையே உபதேசிக்கவும் தீர்மானிப்போமாக.

வேதம் எதற்காக உங்களிடம் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள 2 தீமோத்தேயு 3:16,17- ஐ வாசித்துப் பாருங்கள்.

ஆண்டவர் சொல்கிறார்: *"என்னுடைய வசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்."*

நீங்கள் ஆண்டவரை நேசிக்கிறது உண்மையானால் அவரது வசனத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். கீழ்ப்படிகிறது மட்டுமல்ல அதின்படி நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும். அப்போது பிதா உங்களில் அன்புகூருவார். இயேசுவும் உங்களில் பிரியமாயிருப்பார். அப்போது ஆவியானவர் உங்களுக்கு சத்தியத்தையும், வெளிப்படுத்தல்களையும் தருவார்.

தரிசனத்தில் வெளிப்படுத்தி, சொப்பனத்தில் பேசுவார்.

அப்பொழுது அவர்: "என் வார்த்தைகளைக் கேளுங்கள். உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்" (எண்ணாகமம் 12:6).

ஆண்டவர் உங்கள் தரிசனத்திலே வெளிப்படுத்துகிறவர் என்பதை யோவான் 21-ம் அதிகாரத்தில் அறியலாம். சீஷர்கள் ஆண்டவரை மறுதலித்து மீன்பிடிக்கப் போன சம்பவம் நாமறிந்ததே. வேதம் சொல்கிறது *"அவர் தம்மை வெளிப்படுத்தினார்"* (யோவான் 21:1). இயேசு பல்வேறு விதங்களில் தம்மை வெளிப்படுத்துகிறவர் என்பதை இதிலிருந்து நாம் அறியலாம்.

இங்கே பேதுருவுக்கும் அவனது பின்மாற்றக் குழுவிற்கும் இயேசு தம்மைக் காண்பித்தார். *"தம்முடைய சீஷருக்கு அருளிய தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்"* (யோவான் 21:14). இயேசு அவர்களைப் பார்த்து எழுந்துவந்து அப்பத்தையும் மீனையும் எடுத்துக் கொடுத்தார் (யோவான் 21:12,13). யோவான் 2:11-ல் *"இவ்விதமாக இயேசு இந்த முதலாம்*

அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்".

1 சாமுவேல் 3:21-ல் "கர்த்தர் பின்னும் சீலோவிலே தரிசனம் தந்தருளினார். கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்" என்றெல்லாம் வேதத்திலே வாசிக்கிறோம்.

ஒருவேளை கொர்நேலியுவுக்கு வெளிப்படுத்தியதுபோல (அப்.10:3) உங்களுக்குப் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தாமலிருக்கலாம். உங்கள் வாழ்க்கையிலே ஒருவேளை அற்புதங்கள் நடைபெறாமல் இருக்கலாம். ஆனால் தேவன் தம்முடைய வசனத்தினாலே உங்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவது நிச்சயம்.

விலகிச் சென்ற தேவ மகிமை

சாமுவேலின் காலத்தில் பிரத்தியட்சமான தரிசனம் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது.

1 சாமு.3:1-ல் "சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது. பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை" என்று கூறப்பட்டுள்ளது.

அக்காலத்திலே வசனமும், தரிசனமும் இல்லாததினாலே, ஆசாரியனின் பிள்ளைகள் பேலியாளின் மக்களானார்கள். ஆராதனைக்கு வந்த ஸ்திரீகள் பாவம் செய்கிறவர்களாய் மாறினார்கள். ஆசாரியனுக்குத் தரிசனம் இல்லை. சபையில் வசனம் இல்லை. ஆகையினாலே தேவனின் கோபாக்கினைக்கு தேவ சபை ஆயத்தமாய் இருந்தது. ஆண்டவர் அழிக்கப்போகிறேன் என்று சொன்னார். ஏன்? வெளிப்படுத்தல் இல்லை. ஆகையினால் அற்புதங்கள் நடக்கவில்லை. முடிவு, தேவனுடைய ஆலயத்தைவிட்டு மகிமை விலகிப் போயிற்று.

தேவன் விலகிப் போய்விட்டார். ஜனங்கள் அடிமைகளானார்கள். ஜனங்கள் பாவத்திற்குள்ளானார்கள். ஒருகாலத்தில் ஆலயத்தில் தேவ மகிமை தங்கியிருந்தது. இப்பொழுது தேசம் பெலிஸ்தருக்கு அடிமையாய்ப் போய்விட்டது. ஏனெனில் வெளிப்படுத்தல் இல்லை. வெளிப்படுத்தலைக் கொடுக்கிற வசனம் பிரசங்கிக்கப்படவில்லை,

அந்நாட்களில் தரிசனங்கள் இல்லை. பெரிய ஆரவாரச் சத்தங்கள் மாத்திரம் இருந்தன. வேதம் சொல்லுகிறது, அவர்கள் யுத்தத்திற்குப் பெட்டியை எடுத்துக்கொண்டு போனார்கள். தேவனுடைய பெட்டி பாளயத்திற்கு வந்தது. ஜனங்கள் ஆரவாரித்தார்கள். தேவன் அவர்களுடைய பாளயத்திற்கு வந்திருக்கிறார் என்று சொல்லத்தக்கதாக ஜனங்கள் ஆரவாரித்தார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது 1 சாமுவேல் 4:5-ல் இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள். புறஜாதிகள் வெளியே பேசிக்கொண்டது என்ன? அவர்களுடைய தேவன் பாளயத்தில் வந்து இறங்கியிருக்கிறார் என்று பேசிக்கொண்டார்கள்.

பாதைமாறிச் செல்லும் விசுவாசக் கப்பல்

இன்றைக்குப் பெரும்பாலும் தேவ ஜனங்கள் தவறான பாதையில் போகிறார்கள் என நான் மட்டுமல்ல, என்னைப் போன்ற அநேகர் நினைக் கிறார்கள். ஆரவாரம்தான் சபை எனப் பெந்தெகோஸ்தே வட்டாரங்கள் நினைக்கின்றன.

சத்தம் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவசியம்தான். ஆனால் **தரிசனம் இல்லாத சத்தத்திலே ஆபத்து இருக்கிறது**.

பெட்டியைச் சுமக்கிறவர்களுக்குப் பெட்டியைப் பற்றியோ தேவனைப் பற்றியோ தரிசனம் கிடையாது. இன்றைக்கு நம் சத்தம் தரிசனத்திலிருந்து

புறப்பட்டு வரவேண்டும். ஏதோ உணர்ச்சியில் இருந்தோ உற்சாகத்தில் இருந்தோ அல்ல. தரிசனத்தில் இருந்து சத்தம் புறப்பட்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

நாம் வேதம் வாசிக்கும்பொழுது கதைப் புத்தகத்தை வாசிப்பதுபோல வாசிக்கக்கூடாது. இந்தத் தரிசனப் புத்தகத்திலிருந்து பிரசங்கிக்கப்படும்போது கவனிக்கவேண்டிய முறையில் கவனிக்கவேண்டும். சங்கீதக்காரர்; "உம்முடைய வேதத்தில் உள்ள அதிசயங்களைக் காணும்படி என் கண்களைத் திறந்தருளும்" (சங்.119:18) என்று ஜெபிக்கிறார்.

ஆம், கிறிஸ்தவ உலகத்திலே அறிவு இருக்கிறது, அனுபவமும் இருக்கிறது. ஆனால் தரிசனம் இல்லை. ஆண்டவரே எங்கள் சபைகள் தரிசனம் உள்ள சபைகளாக மாறட்டும் என்று தேவனை நோக்கி வேண்டுதல் செய்கிறேன்.

"என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள்" (ஓசியா 8:12) என்ற வசனத்தை ஒவ்வொரு ஊழியரும், விசுவாசியும் வாசிக்கவேண்டும்.

ஆண்டவரே என் பிள்ளைகளோ, உம்முடைய சபையில் உள்ள விசுவாசப் பிள்ளைகளோ ஒருவராகிலும் உமது வேதத்தை அந்நிய காரியமாக எண்ணி விடவே கூடாதய்யா என்று ஒவ்வொரு ஊழியக்காரரும் ஜெபிக்க வேண்டும். வேதப்புத்தகத்தை விநோதமாய்ப் பார்க்கிற நிலை மாறவேண்டும்.

பல்லைக் கடித்துக் கல்லை எடுத்தவர்கள்

அப்போஸ்தலர் 7-ம் அதிகாரம் ஓர் அருமையான தரிசனமுள்ள, ஆவியின் வெளிப்படுத்தல்கள் நிறைந்த அதிகாரம். **ஸ்தேவானின் முதல் பிரசங்கமும் கடைசிப் பிரசங்கமும் இதுதான்.** இந்த ஒரே பிரசங்கத்தோடு இவனுடைய ஊழியமும் ஜீவனும் முடிந்துபோயின.

இவன் மரித்து 2000 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்றைக்கும் பேசுகிறான்.

ஒருவேளை அன்றைக்குக் கேட்டவர்களுக்கு அதினுடைய விலைக் கிரயம் தெரியவில்லை. அன்றைக்கு அவர்கள் அந்தப் பிரசங்கத்திற்குப் பரிசாகப் பிரசங்கியாருக்குக் கொடுத்தது **கல்லுகள்**தான். யாரும் ஸ்தேவானைப் பாராட்டவில்லை. கைதட்டி வரவேற்கவில்லை. காணிக்கை கொடுக்க வில்லை. பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு, பல்லைக் கடித்து, கல்லை எடுத்து எறிந்து அவனைக் கொன்றுபோட்டார்கள். ஆனால் அன்றைக்கு இரத்தம் சிந்துவதற்குக் காரணமாய் இருந்த பிரசங்கம் இன்றைக்கும் அநேகருடைய கண்களைத் திறக்கக் காரணமாயிருக்கிறது.

நான்கு பேருக்கு தேவன் ஆவியினாலே கொடுத்த தரிசனத்தையும் அதனுடைய விளைவையும் நான் ஸ்தேவானின் பிரசங்கத்தில் கண்டேன்.

வீட்டை விட்ட விசுவாசிகளின் தகப்பன்

முதலாவதாக, அப்போஸ்தலர் 7:2,3-ல் *"அதற்கு அவன், சகோதரரே பிதாக்களே கேளுங்கள், நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொபொத்தோமியா நாட்டிலே இருக்கும்போது, மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார்"* என்று ஸ்தேவான் ஆபிரகாமைப் பற்றிப் பேசினார். இந்தச் சம்பவத்தை நாம் ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

தேவன் ஆபிரகாமைக் கூப்பிட்டார். அவர் உடனே கேள்வி கேட்காமல் கீழ்ப்படிந்தார். அறியாத தேசத்திற்கு அவர் புறப்பட்டுப் போனார். ஆனால் அதை இங்கே ஸ்தேவான் சொல்லும்போது **மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமானார்** என்று மிகவும் அழகாக எடுத்துரைத்தார்.

இந்த ஆபிரகாம் ஒரே நாளில் தன் ஜனத்தையும், இனத்தையும், தேசத்தையும், விட்டுப் புறப்பட்டதற்கான காரணம் **அவருக்குள் இருந்த மகிமையான தரிசனமே** என்று சொன்னால் அது மிகையாகாது.

அழிவுக்குக் காரணம் வெள்ளம் அல்ல

சில வருடங்களுக்கு முன் ஆந்திராவிலே பெரிய வெள்ளம் வந்து பயங்கர அழிவை ஏற்படுத்தியது. பல லட்சக் கணக்கான மக்கள் செத்தார்கள். இதில் கடைசியாக தப்பிப் பிழைத்த மக்களிடத்திலே நிருபர்கள் போய் பேட்டி எடுத்தார்கள். **ஒரு வயதான தாத்தா சொன்னாராம்;** எங்கள் மக்களுடைய அழிவுக்குக் காரணம் வெள்ளமல்ல.

வெள்ளம் வருவதற்கு ஒரு வாரம் முன்னரே அரசாங்க அதிகாரிகள் தெருத் தெருவாய் வந்து, மேடான இடத்திற்குப் போங்கள் என்று சொன்னார்கள். ரேடியோவிலும் இதே செய்தியைச் சொன்னார்கள், டி.வி.யிலும், தொடர்ச்சியாக எச்சரிப்புக் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

ஆனால் நாங்கள் யாருமே போகவில்லை. என்ன பெரிய வெள்ளம், அது வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அசட்டுத் துணிச்சலில் இருந்தோம். முடிவு என்னவென்றால் எதிர்பாராத இரவு வேளையிலே வெள்ளம் வந்து எல்லாரையும் கொண்டுபோய்விட்டது. ஒருசிலர் மாத்திரம் எப்படியோ உயிர் தப்பிப் பிழைத்திருக்கிறோம் என்றாராம். இந்த அழிவுக்கு எங்களது கீழ்ப்படியாமையே காரணம். அசட்டுத் துணிச்சலில் பேசிக் கொண்டிருந்தவர்கள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தபோது வெள்ளத்தில் அடித்துச்செல்லப் பட்டார்கள்.

ஒரு போலீஸ்காரரோ, கலெக்டரோ, பிரதம மந்திரியோ வந்து சொன்னால் வீட்டைவிட்டுப் போய்விடுவார்களா? **அப்படியல்ல ஆண்டவரே** (ஆதி.19:18,19) என்று அப்போதும் லோத்தைப் போலச் சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். காரணங்களைச் சொல்லியே காலாவதியாகிப்போனவர்கள் எத்தனைபேர்!

கூரைவீடாக இருந்தாலும் அந்த வீட்டை விட்டுவிடுவது அவ்வளவு லேசான காரியமல்ல. ஆனால் இந்த ஆபிரகாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே மனைவியையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டார். தன்னை அழைக்கிறவர் யார், போகச் சொன்னது யார் என்ற **தரிசனம்** ஆபிரகாமுக்கு இருந்ததினாலே புறப்பட்டுப் போனார்.

தேவன் ஆபிரகாமைச் சந்திப்பதற்கு முன்பு அவர் பிழைப்பிற்காக விக்கிரகத்தைச் செய்து விற்றுக்கொண்டிருந்தார் என்று வரலாற்று அறிஞர்கள் சொல்கிறார்கள். வேதத்தில் அப்படி எழுதப்படவில்லை.

அவருடைய கடைக்கு நீங்கள் போனால் அவர் இப்படிச் சொல்வார்; இந்த தெய்வத்தை வாங்கி வழிபட்டால் ஞானமும் செல்வமும் கிடைக்கும். நூறு வயது வரை வாழலாம். இந்த தெய்வத்தை வாங்கிச் சென்றால் பிள்ளைகளுக்குத் திருமணத் தடைகள் நீங்கும் என்று பல நூதனமான தெய்வங்களைப் பற்றி நூறு விளக்கங்களைக் கொடுத்து, தகப்பனார் தேராகுவுடன் சேர்ந்து சில வியாபார நுணுக்கங்களைப் பயன்படுத்தி விற்பனையைப் பெருக்கியிருப்பார்.

சத்தியத்துக்குச் செவியை விலக்கி, திட்டங்களுக்குச் சாய்ந்துபோகும் காலம்

இன்றைக்குக் கிறிஸ்தவ வட்டாரங்களில், தேராகுவின் நாட்களில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஆபிரகாமையும் மிஞ்சிவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

பல்வேறு பங்காளர் திட்டங்களை அறிமுகப்படுத்தி, இதில் சேர்ந்தால் உங்கள் பிள்ளைகள் படிப்பு, வேலை, திருமணம் எல்லாவற்றையும் ஆண்டவர் பார்த்துக்கொள்வார். இதற்காகத் தினமும் உங்கள் சகோதரர் உபவாசத்தோடு விசேஷித்த ஜெபம் செய்வார், எங்கள் ஜெபக்குழுவினர் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபிப்பார்கள் என்றெல்லாம் விளம்பரம் செய்கிறார்கள்.

செல்வச் செழிப்பிற்காக இந்தத் திட்டத்தில் இவ்வளவு பணம் செலுத்திச் சேருங்கள். விபத்தில்லாமல் வாழ, உங்கள் குடும்ப போட்டோவை அனுப்பி இந்த திட்டத்தில் உங்கள் குடும்பத்தை இணைத்துக்கொள்ளுங்கள். வீடு கட்டுவதற்காக இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ளுங்கள். எல்லாத் திட்டங்களிலும் சேர்ந்து பயனடைய விரும்பினால் மாதா மாதம் தவணையாக இவ்வளவு பணம் செலுத்தினால் போதும். கர்த்தர் உங்கள் குடும்பத்தை ஆபிரகாமைப் போல ஆசீர்வதிப்பார் என்றெல்லாம் ஜனங்களை நோக்கிக் கூவி அழைக்கிறவர்கள் எழும்பிவிட்டார்கள்.

இன்னும் இந்தக் கடைசி நாட்களில் நிலைமை சற்று மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறதை தேவ ஜனங்கள் கவனிக்க வேண்டும். 10,000 ரூபாய் கொடுத்தால் உங்கள் பெயர் **ஜீவ புஸ்தகத்தில்** எழுதப்படும். பணத்தை இரட்டிப்பாய்க் கொடுத்தால் பரலோகத்தில் இயேசுவோடுகூட அமர்ந்து சாப்பிட வாய்ப்பு வாங்கித்தரப்படும் என்றெல்லாம் பேசத் துணிந்து விட்டார்கள்.

ஆதார் அடையாள அட்டைக்குக்கூட அநேக நிபந்தனைகளை அரசாங்கம் வைத்திருக்கும்போது, தேவனுடைய ஊழியம் என்பது கத்தரிக்காய் வியாபாரமா? ஜீவபுஸ்தகத்தில் பெயரை எழுதுவதென்பது ஏதோ நன்நடத்தைச் சான்றிதழ் வழங்குவதுபோன்ற காரியமா? ஊழியங்கள் தேவன் ஏற்படுத்திய நெறிமுறைகளை விட்டுவிட்டு, தடம்புரண்டு போய்க்கொண்டிருக்கின்றன. கவர்ச்சிகரமான திட்டங்களினால் ஜனங்கள் திசைமாறிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இதை தேவனுடைய ஜனங்கள் கவனித்து இவைகளில் சிக்கிக்கொள்ளாதிருக்கவேண்டும்.

“சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக் கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள்” (யூதா 8) என்று யூதா எழுதியது நினைவுக்கு வருகிறது. தேவனுடைய மகத்துவங்களை வேறு யாரும் தூஷிக்கவேண்டாம். நமக்கு நாமே கேடுண்டாக்கிக்கொண்டிருக்கிறோம்.

எனக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் உண்டு. எல்லாரும் ஆளுக்கு பத்தாயிரத்தைக் கட்டிவிட்டுப் பேசாமல் வீட்டில் உட்கார்ந்துவிடலாமே! நான் ஏன் இப்படி 40 வருடங்களாகப் பிரசங்கித்துக் கொண்டிருக்கவேண்டும்? இவ்வளவு பாடுகளின் மத்தியிலும் விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் இரட்சிப்பு நிறைவேற ஏன் பிரயாசப்படவேண்டும்? பத்தாயிரத்திற்கும் பன்னிரெண்டாயிரத்திற்கும் ஒரு பரலோகம் இருக்கு மானால் எனக்கு ஏன் இந்த அவஸ்தை?

கிறிஸ்தவ உலகமே! இந்தக் கடைசி நாட்களில் பசுமையாய்த் தோன்றும் கவர்ச்சிகரமான திட்டங்களைவிட்டு உன்னைப் பெயர்சொல்லி அழைத்த உன் தேவனிடத்திற்குத் திரும்பு!

வியாபாரமா அல்லது விசுவாசமா?

அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர் களும், வீண் பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்;

''*அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக் குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். கிரேத்தாத் தீவார் ஓயாப் பொய்யர், துஷ்ட மிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான்*" என்று பவுல் எழுதியிருக்கிறார். இதைத் தீத்து 1:10-12 வரையுள்ள வேத பகுதியில் வாசிக்கலாம்.

அருமையான தேவ ஜனமே, உங்களையும் தேவன் உங்களுக்குக் கொடுத்த பிள்ளைகளையும், ஒருவேளை வியாபாரம் செய்வீர்களானால் உங்களது வியாபாரத்தையும், தொழிலையும் ஆசீர்வதித்துப் பெருகச் செய்வது தேவனுடைய வார்த்தையே என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தேவனுடைய வார்த்தையை எடுத்துக் காண்பிப்பதை விட்டுவிட்டு, எதையோ காண்பித்து பணத்தைச் சேகரிப்பதற்குப் பெயர், ஊழியம் அல்ல.

எத்தனையோ தெய்வங்களை உண்டாக்கி விற்றவர்தான் ஆபிரகாம். ஒருநாள் அவர் கண்கள் தேவனைப் பார்த்தன. செவிகள் அழைத்தவரின் சத்தத்தைக் கேட்டன. தேவனுடைய மகிமையைப் பார்த்தவுடனே அவருடைய இனம், ஜனம், பணம், தேசம் எல்லாமே குப்பையாகத் தெரிந்தன. மகிமையின் தரிசனத்திற்குள்ளே நுழைந்துவிட்டார். அதற்குப் பின்னர் அவர் எந்தவித **வியாபார நோக்கமும் இன்றி விசுவாச நோக்கமாகவே** வாழ்ந்து சென்றார்.

இழக்கிறதிலே இருக்கிறது மகிமை!

கிறிஸ்தவ ஜீவியம் பெற்றுக்கொள்கிறதில் மாத்திரமல்ல. நேசருக்காக நமக்கு லாபமாயிருக்கிறவைகளை இழக்கிறதிலும் ஒருவித மகிமை இருக்கிறது. என் ஆண்டவராகிய இயேசுவின் மகிமைக்காக எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையும் என்று விட்டுவிட்டேன் என்கிறார் பவுல்.

அன்றைக்கு அந்த முதல் நூற்றாண்டில் வாழ்ந்த எத்தனையோ கோடீஸ்வரர்கள் விலாசம் இல்லாமல் போனார்கள். இயேசுவின் வெளிப்படுத்தலைப் பெற, தனக்கு லாபமாயிருந்தவைகளை நஷ்டமென்று விட்டவரைத்தான் ஏறத்தாழ 1900 ஆண்டுகளாகக் கிறிஸ்தவ உலகம் நினைவில் வைத்துக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும், நிறுவனங் களுக்கும், வேதாகமக் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் அவரது பெயரைச் சூட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறது.

பவுல் வெறுக்கவேண்டியவைகளை வெறுத்து, விடவேண்டியவைகளை விட்டுவிட்டு, இக்காலத்துப் பாடுகள் இனி என்னிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று எழுதிவிட்டார். தன்னுடைய சரீரத்திலே, ஊழியத்திலே, பயணத்திலே எங்கு போனாலும் பாடுகளே பவுலுக்குப் பங்காயிருந்தது. ஆனால் அவருக்கு முன்பாக,

"தேவன் எனக்குத் தரப்போவது என்ன என்ற தரிசனம்" இருந்தது.

மோசே பார்வோனின் அரண்மனையின் வாழ்வை அனுபவித்துக் கொண்டிருந்தார். எத்தனையோ வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் அங்கிருந்திருப்பார்கள். ஆனால் **அவருக்கு ஒரு தரிசனம் இருந்தது**. இந்த அரண்மனையின் வாழ்வை நான் அனுபவித்தால் எனக்கு முடிவு என்னவாக இருக்கும்? **அதிகார மோதிரத்தோடு ஒருநாள் அடக்கம்பண்ணப்படுவேன். நான் இப்படி** வாழ்ந்து மரிப்பதைவிட, தேவனுடைய பிள்ளைகளோடு துன்பம் அனுபவிப்பதைத் தெரிந்துகொள்வேன் என்று அவர் தன் இலக்கை மாற்றிக் கொண்டார் (எபி.11:25,26).

அரசகுடும்பத்தைத் துறந்து தேவனுடைய மக்களுடன் துன்பம் அனுபவிப்பதைத் தெரிந்துகொள்வது அவ்வளவு எளிதானதல்ல. மாபெரும் தியாகம் செய்யும் அளவிற்கு விசுவாசமும் தேவ தரிசனமும் உடையவராய் இருந்துள்ளார். அரண்மனை வாழ்வையும், தேவ ஜனத்தோடு துன்பத்தை அனுபவிக்கிற வாழ்வையும் மோசே ஒப்பிட்டுப் பார்த்து, **இனி வரும் பலனைப் பற்றிய தரிசனம் கிடைத்தவுடனே** அரண்மனையின் வாழ்வை வேண்டாம் என்று வெறுத்துவிட்டார். தரிசனம் கிடைத்தபோது ஆபிரகாமும், மோசேயும் விடவேண்டியதை விட்டார்கள். தங்கள் இலக்கை மாற்றிக்கொண்டார்கள்.

வாலிபர்கள் தரிசனம் காணட்டும்

இன்றைய சபைக்குத் தரிசனம் தேவை. இன்றைய வாலிப விசுவாசிகளின் நிலையைப் பார்த்தால், ஏன் இதைச் செய்யக்கூடாது என்கிறார்கள்? இப்படியும் இருக்கலாமே, இதினாலென்ன? சினிமா பார்க்கக்கூடாது என்று எங்கே எழுதியிருக்கிறது என்று கேட்கிறார்கள்.

ஆனால் "வாலிபனே உன் கண்ணின் காட்சிகளில் நட, ஆனாலும் இவைகளெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி" என்று பிரசங்கி 11:9-ல் எழுதப்பட்டுள்ளதே!

இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒரே வரியில் இருக்கிறது. தேவனே என்னுடைய கண்கள் உம்முடைய மகிமையைக் காணவேண்டும் என்று ஜெபி. அப்போது நீ இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கமாட்டாய். மகிமையின் தரிசனத்தைக் கண்டபின் ஆபிரகாம் கண்டபடி கேள்விகளைக் கேட்கவே இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

430 வருடங்கள் தேவ ஜனங்கள் அடிமைத்தனத்தில் இருந்தார்கள். ஆண்டவர் ஒரே நாளில் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். "அன்றையத் தினமே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (யாத்.12:51).

ஒரு பாஸ்டர் தொலைபேசியில் என்னோடு பேசும்போது, உங்கள் அமெரிக்கப் பயணத்திற்கு ரெடி ஆயிட்டீங்களா பாஸ்டர் என்று கேட்டார். இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. எனவே இன்னும் பயணத்திற்கான ஆயத்தங்கள் எதுவும் செய்யவில்லை என்றேன். ஆனால் அவரோ அப்படியல்ல. அமெரிக்காவுக்குப் பயணம் போவதென்றால் இரண்டு மாதத்திற்கு முன்பே ரெடி ஆகிவிடுவாராம்.

ஒருவர் இரண்டு வாரம் வெளிநாடு போவதற்கு இரண்டு மாதம் முன்பே தயார் ஆக வேண்டியிருக்கிறது. எகிப்தில் இருந்த 30 லட்சம் இஸ்ரவேலர்

ஒரே இரவில் புறப்பட்டுப் போய் விட்டார்கள். எவனும் ஒரு கேள்வியும் கேட்கவில்லை. இதற்காக அவர்கள் எந்த விதத்திலும் ஆயத்தமாகவில்லை.

தேவன் உங்கள் பட்டணத்தை அழிக்கப்போகிறார் என்று இன்றைக்கு நான் வந்து சொல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். எல்லாரும் உங்கள் வீட்டை விட்டுவிட்டு என் வீட்டிற்கு வந்துவிடுங்கள் என்றால் எத்தனைபேர் வருவீர்கள்? ஆனால் மோசேயின் வார்த்தையை நம்பி 30 லட்சம் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளியே வந்தார்கள். எத்தனை மாபெரும் விசுவாசம் பார்த்தீர்களா?

தேவன் எவ்வளவு நல்லவர். அவர்களுக்கு அநேக அற்புதங்களைச் செய்தார். அவர்கள் நடந்துசெல்லும் வனாந்திர வழிகளில் தேவனே அவர்கள் முன்சென்றார். பகலில் மேக ஸ்தம்பம், இரவில் அக்கினி ஸ்தம்பம், காலையிலே மன்னா, மாலையிலே காடை, கிணற்றில் போய்த் தண்ணீர் எடுக்க வேண்டிய அவசியமே இல்லை, கன்மலையைப் பிளந்து தண்ணீரைத் தந்தார். இன்றைய மினரல் வாட்டர் எல்லாம் அன்றையக் கன்மலை வாட்டருக்கு ஏணி வைத்தாலும் எட்டாது.

அற்புதங்களை கண்டார்கள், ருசித்தார்கள். சுத்தமான தண்ணீரைக் குடித்தார்கள். இத்தனை நன்மைகளை மொத்தமாகப் பெற்ற அந்த ஜனத்தின் மெத்தனமான வாழ்க்கையைப் பற்றி மிகுந்த துக்கத்தோடு அப்போஸ்தலர் 7 -ம் அதிகாரத்தில் ஸ்தேவான் தன் வாழ்நாளில் வழங்கிய ஒரே செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்போஸ்தலர் 7:39,40-ல் "இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி, ஆரோனை நோக்கி, எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம். ஆதலால் எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும்" என்று சொன்னார்கள்.

தேவனிடத்தில் கதறி ஜெபிக்கிற, தேவனிடத்திலிருந்து வார்த்தைகளைப் பெற்றுத் தங்களுக்குக் கொடுக்கிற எகிப்தின் மேன்மையைத் துறந்து தங்களோடு துன்பத்தை அனுபவிப்பதைத் தெரிந்துகொண்ட இந்த மோசே என்கிற பாஸ்டர் எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். ஆட்டுக் குட்டியைப் போன்ற மோசே வேண்டாம் கன்றுக் குட்டியே போதும் என்று தீர்மானித்துவிட்டார்கள்.

இராகம் மாறவில்லை, பாட்டு மாறிவிட்டது

கானானே (பரலோகமே) என் சொந்தமே என்று காண்பேனோ என்றெல்லாம் பாடியவர்களின் இருதயம் பரலோகத்தின் பக்கம் திரும்பாமல் எகிப்தே என் சொந்தமே என்று காண்பேனோ என்று பாடத் துவங்கி விட்டார்கள்.

இப்போதைக்குப் பரலோகம் வேண்டாம், சாகப்போகிற நேரத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று இறைச்சிப் பாத்திரத்தையும், வெங்காயத் தையும், வெள்ளைப் பூண்டையும் பார்த்துப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அகம் எகிப்தில் இருந்தது. முகம் வனாந்தரத்தில் மேகத்தின் கீழ் இருந்தது. அகத்தில் ஆயிரம் யோசனைகள், எகிப்தில் துன்பங்களுக்கு ஊடே அனுபவித்த இன்பங்கள், பல்வேறு இறைச்சி மற்றும் பூண்டு வகைகள் என்று தினசரி மூன்று காட்சிகள் போல அவர்களது மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தன.

முகத்தில் மேகமே மகிமையின் மேகமே என்று பாட்டு ஒருவிதப் பாதுகாப்பைக் கருதி ஓடிக்கொண்டிருந்தது. இருதயம் அந்த வனாந்தரத்தில் எகிப்தைத்தேடி அலைந்துகொண்டிருந்தது. உதடுகள் மட்டும் ஒப்புக்கு அங்கே அசைந்தன. உள்ளம் தடுமாறியது. அது எகிப்துக்குப் போய்ப் பல மணி நேரங்கள் ஆகிவிட்டதுபோலிருந்தது.

உழைப்பும் இல்லாமல், விதைப்பும் இல்லாமல், அறுப்பும் இல்லாமல் எந்தவிதக் களைப்பும் இல்லாமல் மூன்று வேளை மூச்சு முட்ட

சாப்பிட்டார்கள். ஆனால் தரிசனம் மாத்திரம் தடம் புரண்ட ரயில் போலத் தாறுமாறாய் ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் விட்டுவந்த தேசத்தை மறக்கமுடியாமல் தவித்தார்கள்.

எதைப் பெற்றேன்? எதை விட்டேன்?

ஞானஸ்நானம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள் ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்து ஞானஸ்நானத்திற்குப் பின் எதைப் பெற்றேன், எதையெல்லாம் விட்டேன் என்று எழுதிப்பார்க்கவேண்டும். இயேசுவுக்காக எதை விட்டோம்? எதை வெறுத்தோம்? **உங்களுக்கு லாபமாய்த் தோன்றுகிறவைகளைக் கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக நஷ்டமும் குப்பையும் என்று விட்டுவிட ஒரு விசேஷித்த வெளிப்பாடு தேவையா யிருக்கிறது.** மட்டுமல்ல. அதற்கொரு **தரிசனமும் தேவை** என்பதை தேவனுடைய பிள்ளைகள் அறிந்துகொள்ள வேண்டும்.

அன்றைக்கு **சாது சுந்தர்சிங்** இப்படிப்பட்ட வெளிப்பாட்டையும் தரிசனத்தையும் கண்டார். அதனால் அவர் இயேசுவுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டார். அவரைக் கிறிஸ்தவ உலகம் கிறிஸ்துவின் வருகை வரை மறக்காது. அதுபோல எத்தனையோ பரிசுத்தவான்களை நான் உங்களுக்கு எழுதிக்கொண்டே போகலாம். காகிதம் கொள்ளாது.

இன்றைக்கு அநேகர் கிறிஸ்துவுக்காகச் சிலவற்றை விட்டுவிடுகிறார்கள். ஆனால் விட்டுவிட்டதை நினைத்துப் பார்க்கிறார்கள். ஆபிரகாம் தான் விட்டுவந்த தேசத்தை நினைத்திருப்பாரானால் திரும்பிப் போகிறதற்கு அவருக்குச் சமயம் கிடைத்திருக்குமே!

ஆபிரகாம் விசுவாசத்தினாலே சத்தியத்தின்நிமித்தம் தன்னுடைய தேசம், ஜனம், இனம், வீடு போன்ற வற்றினின்று வேறுபிரிக்கப்பட்டிருந்தார். எனவே தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். பரம தேசத்தை வாஞ்சித்தார். ஆகையினால் அவரைப் பொருத்தமட்டில் விட்டது விட்டதுதான். இதனால்

அவர் விசுவாசிகளின் தகப்பனாக மாறிவிட்டார். 4000 ஆண்டுகளாக இந்த மாமனிதரைபற்றி இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

நீங்கள் மகிமையின் தேவனைத் தரிசித்தது உண்மையானால், நீங்கள் விட்டுவந்த தேசத்தை, வீட்டை, ஜனத்தை, இனத்தை, குலத்தை, கோத்திரத்தை, பதவியை, பட்டத்தை நினைக்கவே கூடாது. நீங்கள் இனி வரும் பலன்மேல் நோக்கமாகி அடையப் போகிற மகிமையை நினைத்து, யாரோடு நித்தியத்தில் இருக்கப்போகிறீர்கள் என்பதை நினைத்து, சந்தோஷமாக இருக்க வேண்டும்.

இந்த மகிமையின் தேவனைப் பற்றிய அறிவைவிட தரிசனத்துடன் கூடிய வெளிப்பாடே அத்தியாவசியமாயிருக்கிறது. நமக்குத் தேவனைப் பற்றிய அறிவும் பக்தி வைராக்கியமும் இருக்கிறது. ஆனால் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்கிறதற்கேற்ற அறிவு இல்லை.

தேவன் எப்படிப்பட்டவர் என்ற வெளிப்பாடு இல்லாததினாலே அழைத்தவரை அசட்டைபண்ணி, வனாந்தரத்தில் **மோசே மீது வழக்குத்தொடுத்து,** விடுவித்து வெளியே கொண்டுவந்த **பாஸ்டர் மோசேயை** வேண்டாம் என்று தள்ளி, காசு கொடுத்துக் கன்றுக்குட்டியைக் கேட்டு வாங்கி, **கேட்டுக்குப்** போனார்கள்.

30 லட்சம் பேரில் இரண்டே இரண்டு பேரைத் தவிர புறப்பட்டவர்களில் அத்தனைபேரும் வனாந்தரத்திலேயே காலாவதியாகிவிட்டார்கள். இவர்கள் காலாவதியானது கீழ்ப்படியாமை என்கிற **காலரா நோயினாலே**தான். கீழ்ப்படியாமை என்பது காலரா தொற்றுநோய்க் கிருமியைவிட வேகமாய்ப் பரவி, சோகமான முடிவுகளை ஏற்படுத்திவிடும்.

வனாந்தரப் பயணத்தில் வசனம் இருந்தது, முன்னணியில் கர்த்தர் சென்றார், மேக ஸ்தம்பம் இருந்தது, அக்கினி ஸ்தம்பம் இருந்தது. ஆனால் **தரிசனமோ வெளிப்பாடோ** அவர்களுக்கு இல்லாதிருந்தது. விட்டதை நினைத்த காரணத்தால் எதிரே இருந்த பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் அதாவது வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கும்

பாக்கியமான வாழ்க்கையை இழந்துபோனார்கள். குறிக்கோள் ஏதுமில்லாமல் 40 வருஷங்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்து நடந்து வந்திருக்கிறார்கள்.

நம்முடைய கண்கள் ஆபிரகாமைப் போல மகிமையின் தேவனைத் தரிசிக்கட்டும். கர்த்தர் நம்மை நடத்துவாராக.

2

சகலத்தையும் செய்யும் ஆவியானவர்

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"

(ரோமர்.8:28)

2. சகலத்தையும் செய்யும் ஆவியானவர்

வனாந்தரப் பயணத்தில் வார்த்தை இருந்தது. முன்னணியில் கர்த்தர் சென்றார். மேக ஸ்தம்பம் இருந்தது. அக்கினி ஸ்தம்பமும் இருந்தது. ஆனால் தரிசனமோ வெளிப்பாடோ அவர்களுக்கு இல்லாதிருந்தது. பாழாய்ப் போன எகிப்தில் விட்டதை நினைத்த காரணத்தால் முறுமுறுத்து, கர்த்தருக்கும் ஊழியக்காரருக்கும் விரோதமாகப் பேசியதால் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியமான வாழ்க்கையை இழந்துபோனார்கள்.

குறிக்கோள் ஏதுமில்லாமல் 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து நடைப்பயணம் சென்றிருக்கிறார்கள். எகிப்திலிருந்து வெளியேறிய

இஸ்ரவேலர் அந்த வனாந்தரத்தில் நிச்சயமில்லாதவர்களாய் ஓடியதையும். ஆகாயத்தை அடிக்கிறவர்களாய்ச் சிலம்பம்பண்ணியதையும் வேதத்தில் காணலாம். இதனால் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குள் நுழைந்து, தேவனுடைய பரிபூரண நன்மையை அனுபவிக்க ஆகாதவர்களாய்ப் போய்விட்டார்கள்.

காலேபுக்கும் யோசுவாவுக்கும் விசுவாசப் பார்வை இருந்தது. உளவு பார்த்ததில் மீதமுள்ள 10 பேருக்கும் சரி, வனாந்தரத்தில் நடந்துவந்த அத்தனை ஆண்களுக்கும் சரி, பார்வைக் கோளாறு இல்லை, ஆனால் விசுவாசப் பார்வையில் வித்தியாசம் இருந்தது. தேவனுடைய வல்லமையைப் பத்து வாதைகள் மூலம் எகிப்தில் கண்ணாரக் கண்டபோதிலும், அவரை மட்டுப்படுத்தி, அவிசுவாசத்தினால் நிறைந்து வனாந்தரத்தில் வறண்டு போனார்கள்.

நம்முடைய கண்கள் ஆபிரகாமைப் போல **மகிமையின் தேவனைத் தரிசிக்கட்டும்.** வருடக்கணக்காய் வேதத்தை நேசித்து, வாசித்துவருகிற நீங்கள் இன்னும் அதிகமாய் அவரை நெருங்கிச் சேர, விசுவாசத்தை விட்டுவிடாமல் வார்த்தையைத் தொட்டுத் தொடர இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள செய்திகள் உங்களைத் தட்டி எழுப்பும் என்பதை நான் அறிவேன். எனவே வாசிக்கும்போதே விசுவாசித்து அறிக்கை செய்யுங்கள்.

சந்ததியைப் பற்றிக் கவலை வேண்டாம்

''கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால், நானூறு வருடம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு

வருவார்கள்" (ஆதி.15:13,14) என்றார். இது ஆபிரகாமுக்கு தேவன் தந்த **முதலாவது தரிசனம்.**

நான் அவர்களை அழைத்துக்கொண்டுவருவேன். எகிப்தைவிட்டு வெளியே வந்தபின் இந்த வனாந்தரத்தில் அவர்கள் எனக்கு ஆராதனை செய்வார்கள் என்றார் (யாத்.3:12). இது மோசேக்குத் தேவன் தந்த **இரண்டாவது தரிசனம்.**

ஒன்றை அறிந்துகொள்ளுங்கள்; எகிப்திலே இருந்து கொண்டே கர்த்தருக்கு ஆராதனை செய்வதைக் கர்த்தர் அனுமதிக்கவில்லை. பார்வோன் அதற்காக எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டான். பாவத்திலே உழன்றுகொண்டு பரிசுத்தரை ஆராதிப்பதை தேவன் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

ஆண்டவர் ஆபிரகாமைப் பேரைச் சொல்லி அழைத்து அறிந்திருந்தார். அதோடு நின்றுவிடவில்லை. அவரது சந்ததி 430 வருடங்களுக்குப் பிறகு எவ்வண்ணமாக இருக்கும், என்ன நடக்கும் என்பதையெல்லாம் தேவன் அறிந்து வைத்திருந்தார்.

நம்முடைய நிலவரம் என்ன தெரியுமா? நாம் எவ்வளவு படித்திருந்தாலும் வானிலையைத் துல்லியமாய் கணிக்கக் கருவிகளைக் கண்டுபிடித்திருந்தாலும், "நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது" என்ற நிலவரத்தில்தான் மனிதன் வாழ்ந்துகொண்டிருக்கிறான் (யாக்கோபு 4:14).

"மனிதனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது; வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது" (சங்.103:15,16).

புகையைப் போலப் புகைந்து மறைந்து கொண்டிருக்கிறது மனித வாழ்க்கை. நாளைக்கு நடப்பதை நாமறியோம்.

இந்த அறிவும் இந்த வெளிப்படுத்தலும் நமக்கு இருக்குமானால் பெருமை நம்முடன் ஐக்கியமாக இருக்கவே முடியாது. அதோடுகூட நம்முடைய சந்ததியைப் பற்றிய கவலையும் இருக்காது. அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் என்கிற ஆண்டவரின் வார்த்தையின்படி வாழ்ந்து, நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தைப் பொறுமையோடு ஓடி விசுவாசத்தைக் காத்துக்கொள்ளலாம்.

உங்கள் பிள்ளைகளைப் பற்றி உங்களுக்கு எத்தனையோ எதிர்பார்ப்புகள் இருக்கலாம். பலவிதமான எதிர்ப்புகள் மத்தியில் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கலாம். ஒருவேளை சில உபத்திரவங்களும் போராட்டங்களும் அவர்கள் வாழ்வில் காணப்படலாம். ஆனாலும் நான் அவர்களை விடுதலையாக்கி இந்த இடத்திற்குக் கொண்டுவருவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

இந்த வார்த்தையை விசுவாசித்து தேவனைத் துதியுங்கள். காணப்படுகிற சிறையிருப்புகளை தேவன் மாற்றுவார். தேவன் எல்லாக் காரியங்களையும் முன்கூட்டியே அறிந்தவர் என்கிற வெளிச்சம் ஆபிரகாமுக்கு இருந்ததுபோல நமக்கும் வேண்டியதாயிருக்கிறது.

உங்களையும், உங்கள் குடும்பத்தையும் உங்கள் வருங்காலச் சந்ததியையும், ஆயிரம் தலைமுறைமட்டும் தேவன் அறிவார்.

எனவே, தாவீது: *"தேவரீர் என்னை இது வரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்"* (2 சாமு.7: 18) என்று சொன்னார். இதேபோல நாமும் அடிக்கடி அறிக்கையிடவேண்டும்.

இப்போது தேவன் உங்களை வைத்திருக்கிற நிலவரத்திற்காக தேவனைத் துதியுங்கள். ஆடுகளை மேய்க்கிறவனாய் தடியைப் பிடித்துக் கொண்டிருந்தவனைத் தேவன் இஸ்ரவேலை மேய்ப்பதற்காகப் பிடித்தார். சாமுவேல் தீர்க்கதரிசியை அவன் தகப்பன் வீட்டுக்கு அனுப்பி அவனை

அபிஷேகித்தார் (1 சாமு.16:13). எலிசா உழுதுகொண்டிருந்த வயலுக்கு எலியாவை தேவன் அனுப்பிவைத்து சால்வையை அவன்மேல் போட்டதுபோல (1 இரா.19:19) இது ஓர் சிறப்பான அபிஷேகம்.

தாவீதை அளவில்லாமல் தேவன் ஆசீர்வதித்தார், இஸ்ரவேலின் ராஜாவாக மாற்றினார். "தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை_ மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே" (2 சாமு.7:19) என்று சொல்லி தாவீது தேவனைத் துதித்தார்.

தேவன் உங்களை அழைத்தது உண்மையானால், நீங்கள் கீழ்ப்படிந்தது உண்மையானால், உங்கள் வீட்டைக் குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை தேவன் தமது கையில் வைத்திருக்கிறார் என்பதும் உண்மை. "தங்களைப்பற்றியும் தங்கள் பிள்ளைகளைப்பற்றியும் தேவன் என்ன சொல்லுகிறார்" என்று அறிந்துகொள்ள பெற்றோரே நீங்கள் இதற்காக ஊர் ஊராய் அலையவேண்டியதில்லை. வேதத்தைத் திறந்து, மனக்கண்களைத் திறந்து வாசித்தால் ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

வாலிபப்பிள்ளைகளைப் பார்த்துக் கர்த்தர் சொல்லுகிறார்: "பிள்ளைகளே, உங்களைப் பெற்ற தாய் தகப்பன்மார்களுக்கு உங்கள்மேல் பாசமும், பாரமும், வருங்காலத் திட்டங்களும் இருப்பதுபோல, உங்கள் ஊரில் அல்லது உங்கள் பட்டணத்தில் உள்ள யாருக்கும் உங்களைக் குறித்து எந்தவித பாரமும் கவலையும் இருக்காது. அவர்கள் உங்கள்மீது கரிசனை உள்ளவர்களைப்போலப் பேசுவார்கள். உங்களை நேரில் பார்க்கும் போது 'நாங்கள் இருக்கிறோம்' கவலைப்படாதீர்கள் என்பார்கள். பின்னர் மறந்துபோவார்கள்".

'கர்த்தரோ நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்" (சங்.115:12).

தரிசனம் பெற்றோர் யார்?

முதலாவது தேவன் உங்களைக் குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியைத் தமது கையில் வைத்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். இரண்டாவது சுவிசேஷத்தினால் ஆவியிலே உங்களைப் பெற்ற போதகருக்கு உங்களைப் பற்றிய தரிசனம் உண்டு.

உங்களுக்குப் போதிக்கிற உண்மையும் உத்தமமுமான போதகர்களிடம் அப்படிப்பட்ட வார்த்தைகளைத் தேவன் வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டு, "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" (எபிரெயர் 13:17) என்ற வார்த்தையை மனதில் வைத்துக்கொண்டு விசுவாசத்தோடு கீழ்ப்படிதலோடு வசனத்தைக் கேளுங்கள்.

இரட்சிக்கப்பட்டேன் என்கிற சிலர் வேத வசனத்தின் வெளிச்சத்தில் தங்களை ஆராய்ந்து பார்க்காமல் பல மைல் தூரம் பயணம் செய்து தீர்க்க தரிசனங்களைக் கேட்க, மந்திர மாயங்களை உடைக்கிறேன் என்பவர்களைப் பார்த்து ஜெபிக்க அவர்களை நோக்கி ஓடிக்கொண்டு, காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையும் உத்தமமுமான நல்ல தீர்க்கதரிசிகள் நம் பட்டணத்திலும் தேசத்திலும் இருக்கிறார்கள். இவர்களுக்காக நான் தேவனைத் துதிக்கிறேன்.

அதே வேளையில் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு கூறியிருப்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும் (மத்.24:4,5). எனவே வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்துவிடாமல், நிற்கிறேன் என்கிறவன் விழுந்துவிடாமல் இருப்பதற்கு நாம் வாழும் இடத்தில் நல்லதொரு சபையில் "கர்த்தரைத் தொழுது

கொள்ளுகிறவர்களுடனே" (2 தீமோ 2:22) சேர்ந்து ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரைத் தொழுதுகொள்வதே மிகவும் நல்லது. சபை கூடிவருதலை விட்டுவிட்டு, தரிசனங்களைத் தேடிச் செல்வோரின் வாழ்க்கை ஓர் தடம்புரண்ட ரயில் போலத்தான் இருக்கும்.

சாலையோரத்தில் உட்கார்ந்திருக்கும் கிளி ஜோதிடக்காரனிடம் எந்தவிதத் தயக்கமுமின்றி ஐந்து ரூபாயையும், கையையும் நீட்டி வருங்காலத்தைக் குறித்துக் கேட்பவர்களை நீங்களும் பார்த்திருப்பீர்கள். கிளி கிளிக் செய்து கொடுக்கும் ஓர் அட்டையைப் பார்த்து அவன் சொல்லும் செய்திகளைக் கேட்கத் தங்களை அர்ப்பணித்து அமைதியாய் உட்கார்ந்திருப்பார்கள்.

பஸ் ஸ்டாண்ட் வாசலில் தன்னிடம் கையை நீட்டிக் காண்பிக்கிறவர்களுக்குச் சொல்லுவதற்கு ஏதோ ஒரு செய்தியை அவன் வைத்திருப்பானானால், தேவனுடைய ஆலயத்தில் உட்கார்ந்திருக்கிற உங்களை, இவ்வளவு அருமையாக உருவாக்கி தமது உள்ளங்கையில் வரைந்துவைத்திருக்கிற தேவனிடத்தில் உங்களுக்கென்று ஒரு செய்தி இல்லாதிருக்குமா?

நீங்கள் காது கொடுத்துக் கேட்டால் உங்களைக் குறித்து மட்டுமல்ல, உங்கள் பிள்ளைகளைப் பற்றியும், உங்கள் வருங்காலச் சந்ததியைப் பற்றியும் சொல்ல தேவனால் மட்டுமே முடியும்.

உங்களை இப்படியெல்லாம் அறிந்துவைத்திருக்கிற ஒரு தேவன் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும்போது, அவருடைய அன்புக் கரங்களில் உங்களை முழுவதுமாய் அர்ப்பணிப்பதில் அவ்வளவு சிரமம் இருக்காது என்று நினைக்கிறேன். நம் தேவனைப் போல நம்மை அறிந்தவர் யார்?

யோபு இதை அறிந்தபோது "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 42:2) என்று சிரம் தாழ்த்திச் சொன்னார். அதைக் கேட்ட தேவன் கரம் நீட்டி அவரை இரட்டிப்பாய் ஆசீர்வதித்தார்.

சோதனைக்குப் பின் பொன்னாக ஜொலித்த அவர், அதற்குப் பின் 140 வருடம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டார் என்று வேதம் கூறுகிறது. நோபல் பரிசை வென்ற அறிவியல் மேதைகளைப் போன்றவர்தான் யோபு. அவர் தனது புத்தகத்தில் அறிவியல், விலங்கியல், புவியியல், சரித்திரம், பூகோளம் என்று எல்லாவற்றையும் குறித்து தெளிவாய் எழுதியிருக்கிறார்.

"அவர் நெடுநாளிருந்து, பூரண வயதுள்ளவனாய் மரித்தார்" (யோபு 42:16,17) என்று வேதம் யோபுவின் சாட்சியைச் சரித்திரமாக்கியுள்ளது. இது ஒரு கதை அல்ல. ஏதோமியர் தேசத்தில் ஒரு கோத்திரத் தலைவனாக வாழ்ந்த உத்தம மனிதனின் உண்மைச் சம்பவம்.

முன்னறிந்து அழைத்த தேவன்

சவுல் என்ற வாலிபன் கர்த்தருடைய பிள்ளைகளைப் பிடித்து அடித்துக் கொலை செய்யவேண்டும் என்று வேகமாய்த் தனது குதிரையில் தமஸ்கு பட்டணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அந்த மத்தியான வேளையில், *"திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிலும் பிரகாசித்தது"* (அப்.9:3). அவன் உடனே தரையில் விழுந்தான்.

அப்பொழுது; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன் ஆண்டவரே நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்; நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

கர்த்தருடைய பிள்ளைகளை நடுநடுங்கச்செய்து, நடு ரோடு என்றும் பாராமல் இழுத்துச் சென்று கொலை செய்ய வேண்டுமென்று இருந்த சவுல், இந்த வார்த்தைகளைக் கேட்டு நடுங்கித் திகைத்து: *"ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்; நீ*

எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்” (அப்.9:4-6).

சவுல் கீழே விழுந்த இமைப்பொழுதில் அவன் கண் பார்வையும் பறிக்கப்பட்டது. இமைகளுக்கு மூன்று நாட்கள் விடுமுறை கொடுக்கப்பட்டது. தற்காலிகப் பணி நீக்கம் அல்லது பதவி நீக்கம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்களே. அதுபோல, தற்காலிகமாகப் **பார்வை மட்டும்** பறிக்கப்பட்டது. (சரீரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை (கண்களை) மட்டும் செயலிழக்கச் செய்து. மீண்டும் அதைச் செயல்பட வைக்க தேவனால் மட்டுமே கூடும்). பார்வையுடன் அவனது பலமும் பறிக்கப்பட்டபோது மூன்று நாட்கள் மட்டும் **பர்த்திமேயுவைப் போல முள்ளில் நடந்துசென்றான்.** மத்தியானமா அல்லது **இரவா** எதுவும் தெரியாது. "**இறைவா** நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்" என்ற கேள்வியைக் கேட்டபோது அவனது உள்ளம் அடுத்து என்ன சொல்லுவாரோ என்ன சம்பவிக்குமோ என்ற பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது.

ஒரு மனிதனின் நோக்கத்தைக் கர்த்தர் அறிவார். அவனை அழிப்பதல்ல, மாற்றுவதே கர்த்தரின் நோக்கம். அந்த தமஸ்குச் சாலையில், **காட்டுப் புலி வீட்டுப் பூனையாக மாற்றப்பட்டது** என்று சொன்னால் அது மிகையாகாது.

சிருஷ்டிகரின் சிகிச்சை

அனனியா என்னும் பேருள்ள ஒரு சீடன் சவுலின் மேலே கைகளை வைத்து “நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார்” என்றான் (அப்.22:14). சவுல் ஏதோ மூன்று நாட்களுக்கு முன் இயேசுவானவர் அந்தத் தமஸ்கு ரோட்டில் நம்மைத் தெரிந்திருப்பார் போலும் என்று நினைத்திருப்பார். அந்தக் கணிப்பு தவறானது.

அனனியா சவுலின் தலையில் கை வைத்து ஜெபித்தபோது இவனுடைய கண்களிலிருந்து மீன் செதிள்கள்போலக் கீழே விழுந்தது. உடனே இமைப் பொழுதில் பார்வை தரப்பட்டது. புதிய பார்வை பிறந்தது. ஆவியில் அனல் மூண்டது. உயிர்த்தெழுந்த இயேசுவோடு உறவு மலர்ந்தது. அது முதல் தேவனை அதிகமாய் அறிந்துகொள்ளமுடிந்தது.

சவுல் பவுலாக மாறிவிட்டார். உள்ளூரில் **சூறாவளியாகவும்** வெளியூரில் **புயலாகவும்** இருந்த சவுல் **தென்றலைப்போல** மாறி உலகத்தைக் கலக்குகிற தேவனுடைய மனிதராகிவிட்டார். அல்லேலூயா.

ஊழியக்காரனாகிவிட்ட பவுல் தனது முதலாவது நிருபத்தைக் கலாத்திய சபைக்கு எழுதும்போது அவர் எண்ணத்தில் தோன்றியதை வாசித்துப் பாருங்கள். கலாத்தியர் 1:15-ல் *"நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்"* என்கிறார்.

இதற்குப் பெயர்தான் **வெளிப்பாடு**. மற்றவர்களைப்பற்றி அல்ல. தன்னைப்பற்றிய வெளிப்பாடு. மூன்று நாளைக்கு முன் அல்ல. தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் என்னைப் பிரித்தெடுத்து, கிருபையினால் அழைத்த தேவன் என்ற **வெளிப்பாட்டை** அவர் **ஆவியினாலே** பெற்றுக்கொண்டார். இது எத்தனை அருமையானது! **பிறப்பதற்கு முன்பே பிரித்தெடுக்கப்பட்ட பிரசங்கியார்** இவர்.

என்றைக்கு நீங்கள் தேவனை அறிந்தீர்கள் அல்லது இரட்சிக்கப்பட்டீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் தேவன் உங்களை என்றைக்கு அறிந்துகொண்டார் தெரியுமா? நீங்கள் உங்கள் தாயின் வயிற்றில் உற்பத்தியாகும் முன்னே தெரிந்துகொண்டார் (எரே.1:5).

அதனால்தான் தேவன் சொல்கிறார்: *"நீங்கள் என்னை தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்"* என்றார். (யோவான் 15:16)

தேவ நோக்கம் நிறைவேற என்ன செய்யவேண்டும்?

''இருக்கிறவன் எவனும் பிறப்பதற்கு முன்பாகவே பெயரிடப்பட்டிருக்கிறான்'' (பிரசங்கி 6:10) என்ற வசனத்தின்படி தேவன் நம்மை அறிந்திருக்கிறார். இது எவ்வளவு பெரிய சிலாக்கியம்!

"அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்". (எபேசியர் 1:4)

நாம் தேவனை அறியாத ஒரு குடும்பத்தில் பிறந்திருக்கலாம். சிலர் 30-ல், சிலர் 60-ல், சிலர் 70-ம் வயதில், இன்னும் சிலர் கல்லறைக்கு அருகில் செல்லும்போது 95-ம் வயதில் ஆண்டவரைத் தேடியிருக்கலாம்.

மரிப்பதற்குச் சற்று முன் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இரண்டு திருடர்களில் ஒருவன் பாவ மன்னிப்பை மட்டுமல்ல பரலோக பாக்கியத்தையே பெற்றுக்கொண்டான். அந்தத் திருடனைக் காரணம் காட்டி அவன் ஞானஸ்நானம் பெற்றானா என்று அவனோடு போட்டி போட்டுக்கொண்டு காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிற கிறிஸ்தவர்களும் உண்டு.

கொல்கதா மலைக்கு வருகிறவரை அவன் திருடன், மரண தண்டனைக் கைதி, தண்டனையைப் பெற்றுச் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த போது அவன் இரட்சிக்கப்பட்டான். இதையெல்லாம் யோசிக்காமல் தத்துவம் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள்.

சிலுவையில் அறையப்பட்ட அவனால் மரிக்கமட்டுமே முடியும். நீங்கள் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறீர்களா? இறுதி மூச்சை விடுவதற்கு மட்டுமே அவனுக்கு நேரம் இருந்திருக்கும். அப்போதும் அவனுக்குக் கிடைத்த ஒருசில வினாடிகளுக்குள் தன்னுடைய உடன் பங்காளிக்கு (திருடனுக்கு) அவன் நற்செய்தி சொல்லிவிட்டானே!

அவன் சகேயுவைப் போலச் சில ஆண்டுகளுக்கு முன் இரட்சிக்கப்பட்டிருந்தால் அந்த அலங்கார வாசல் சப்பாணி செய்தது போல

5000 பேரைக் கூட்டிச் சேர்த்திருப்பானே! பிழைப்பதற்கு அவனுக்கு வாய்ப்பில்லை. இயேசுவோடு பரதீசில் இருப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

அருமையானவர்களே. வயோதிபத்தின் இறுதியில். இயேசுவை ஏற்றுக்கொள்வதினால் பெரிதாய் ஒன்றையும் இயேசுவுக்காகச் சாதித்துவிட முடியாது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அதனால்தான் இயேசுவால் தமஸ்கு சாலையில் சந்திக்கப்பட்ட சவுலைப் பார்த்து அனனியா இப்படிச் சொன்னார்; *"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றார்* (அப்.22:16).

தேவ நோக்கம் நிறைவேறுவதற்கு எழுந்து ஞானஸ்நானம் பெறு என்கிறார். பாவங்கள் போகக் கழுவப்படுதலே ஞானஸ்நானம். ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாமல் பாவம்போகக் கழுவப்படாமல் இனிமேலும் நீ தாமதிப்பது வேதத்தையும் உன்னை அழைத்த இரட்சகரையும் அவமதிப்பதைப் போலாகிவிடும் என்பது போலப் பேசுகிறான். சவுல் தாமதிக்காமல் உடனே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (அப்.9:18).

தேவ நோக்கம் உங்களில் நிறைவேற நீங்கள் நிறைவேற்ற வேண்டிய நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையை நிறைவேற்றிவிட்டீர்களா? தேவ நீதியை நிறைவேற்றாமல் இனியும் நீங்கள் தாமதிக்கிறதென்ன? தேவனால் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்படுகிற மக்களைப் பாருங்கள். அவர்கள் பெரும்பாலும் **டீன் ஏஜ் பருவத்தில் இரட்சிக்கப்பட்டவர்களே!**

வாலிபம் சாக்கடைக்கு! வயோதிபம் சாய்வு நாற்காலிக்கு!!

இன்றைக்கு நிறையப் பேர் வாலிபத்தைச் சாக்கடைக்குக் கொடுத்துவிட்டு, சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் பட்சத்தில் ஆலயத்தை எண்ணி ஏங்குவார்கள். யாருமே என்னை ஆலயத்திற்குக் கூட்டிச் செல்வதில்லை என்று அலுத்துக்கொள்வார்கள்.

வாலிப நாட்களில் சபையின் கதவுகள் திறந்திருந்தபோது இவரின் செவிகள் அடைக்கப்பட்டிருந்தன. மனமும் மாம்சமும் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தது. காற்றுள்ளபோது தூற்றாமல் காலம் கடந்துவிட்டபின் நனைந்து சுமந்துகொண்டிருக்கிறார்கள். வாலிபத்தின் வசந்தகாலம் இயேசுவுக்கே என்பதை மறந்துபோகக்கூாது.

அருமையான தேவ ஜனமே, தேவனாகிய கர்த்தர் உங்களைக்குறித்து ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். நீங்கள் உங்கள் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தேவன் உங்களை அழைத்துவிட்டார். உங்களைக் குறித்த ஒரு தூரச் செய்தியை ஆண்டவர் வைத்திருக்கிறார். **துர்ச் செய்தி மாறி, தூரச் செய்தியாக, தீர்க்கதரிசனச் செய்தியாக** வேண்டுமானால் உடனே கீழ்ப்படியத் தீர்மானியுங்கள்.

"நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருடங்கள்(முதிர்வயது) சேராததற்கு முன்னும்...அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை"

(பிரசங்கி 12:1-7).

நினைக்க வேண்டிய இயேசுவை நினைத்தால் மறக்க வேண்டிய பாவத்தை மறக்க முடியும்.

திடீர் பிரிவு, ஆனால் திட்டமிட்ட பிரிவு

யோசேப்பு, 17 வயது வாலிபன். தகப்பனது நேசத்தைப் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் அனுபவித்துக்கொண்டிருந்தார். திடீரென்று ஒரு நாள் சற்றும் எதிர்பாராத நேரத்தில் தகப்பனை விட்டு, வாழ்ந்த வீட்டை விட்டு பிரிக்கப்பட்டார். அவர் அணிந்திருந்த பலவர்ண அங்கியும் அன்றையத் தினமே பறிக்கப்பட்டு இரத்தமயமாக்கப்பட்டது. அவர் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இஸ்மவேலரின் ஒட்டகத்தில் ஏறிச்சென்றிருப்பார் என்று யோசித்துப் பாருங்கள்.

கதறக் கதற அவரைக் கட்டி எகிப்துக்குக் கொண்டுபோயிருப்பார்கள். ஆதியாகமம் 45-ம் அதிகாரத்தில் அவரை விற்றுப்போட்ட சகோதரர்களின் சந்திப்பு குறித்த நிகழ்வு பதிவாகியுள்ளது. அவன்தான் யோசேப்பு என்று அறிந்துகொண்டபோது அவர்களது முகங்களைப் படம்பிடித்து வைத்திருந்தார்களானால் அது மிகவும் பரிதாபமான தோற்றமாயிருக்கும்.

ஆதியாகமம் 45:5-ல், *"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம். அது உங்களுக்கு விசனமாயுமிருக்கவேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்"* என்றார்.

அண்ணன்மாரால் குழியில் தள்ளப்பட்ட அந்த 17 வயதிலிருந்து கணக்கிட்டுப் பாருங்கள். 30-ம் வயதில் அவர் அதிபதியாகிவிட்டார். அதன்பின் 7 ஆண்டுகள் செழிப்பு. அதைத் தொடர்ந்து பஞ்சம் ஆரம்பமாகி 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. இவைகளுக்குப் பின் அவரது சகோதரர்கள் தானியம் வாங்க எகிப்துக்கு வந்தார்கள். அப்படியானால் 13 ஆண்டுகள் அடிமை வாழ்வு, 7 ஆண்டுகள் செழிப்பின் காலம், 2 ஆண்டுகள் பஞ்சம், ஆக மொத்தம் வீட்டை விட்டுப் பிரிக்கப்பட்டு 22 ஆண்டுகள் ஆகிவிட்டன.

தேவன் என்னை முன்னமே அனுப்பினார் என்றாரே எத்தனை ஆண்டுகளுக்கு முன் யோசேப்பை எகிப்துக்கு அனுப்பினார்?

22 ஆண்டுகளுக்கு முன் தம்முடைய தாசனாகிய யோசேப்பை எகிப்துக்கு அழைத்துச்சென்றுவிட்டார்.

அப்படியானால் யாக்கோபின் குடும்பத்தினர் 22 ஆண்டுகளுக்குப் பின் பஞ்சத்தில் சிக்குவார்கள் என்பதை முன்னமே அறிந்த தேவன் அந்தக் குடும்பத்தில் தமக்குப் பிரியமான உத்தமமான மகனை ஆயத்தப்படுத்தி அந்தக் குடும்பத்தைப் பஞ்சத்தில் பாதுகாக்க, போஷிக்கத் திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளார். யோசேப்பு தன் குடும்பத்தைவிட்டு, தன் சகோதரர்களை விட்டு, தன் வீட்டை விட்டு, தன் ஜனத்தைவிட்டு திடீரென்று பிரிக்கப்பட்டதுகூட, திட்டமிட்ட பிரிவாகத்தான் இருந்துள்ளது.

தேவன் யாக்கோபுக்குத் தன்னைத் தரிசனத்தில் சொப்பனத்தில் வெளிப்படுத்தியது உங்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால் இந்த காரியத்தில் என்ன நடக்கிறது என்று யாக்கோபுக்கும் தெரியாது. ஏன் இப்படியெல்லாம் சம்பவிக்கிறது என்று யோசேப்புக்கும் தெரியாது. ஆனால் 22 ஆண்டுகளுக்குப் பின் என்ன நடக்கும் என்று தேவனுக்கு மட்டுமே தெரியும்.

எனக்குமட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது என்ற கேள்விக்குப் பதில் இந்தச் செய்தியில் அடங்கியுள்ளது. கர்த்தர் எல்லாவற்றையும் அறிவார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. நீங்கள் போகும் வழியை அவர் மட்டுமே அறிந்திருக்கிறார். *"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"* (ரோ.8:28) என்று பவுல் எழுதுகிறார்.

யோசேப்பு தன் சகோதரர்களைப் பார்த்து சாந்தமாய்ச் சொல்வதை வாசித்துப் பாருங்கள்: *"பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு*

முன்னமே அனுப்பினார்'' (ஆதி.45:7). தேவனைப் போல இப்படியெல்லாம் முன்னமே திட்டமிட்டுச் செயல்பட யாரால் கூடும்?

ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையில் முதலாவதாகச் செய்கிற வேலையை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. ஆரம்பம் அற்பமாகத்தான் இருக்கும். நாம் போகும் வழியை நம்மால் அறிந்துகொள்ளமுடியாது. ஒரு குருடனைப்போலத்தான் போகவேண்டியிருக்கும். ஆனால் முடிவு சம்பூரணமாயிருக்கும் என்பதைக் காரியத்தின் இறுதியில்தான் நம்மால் கண்டுகொள்ளமுடியும்.

அதுவரையிலும் சிலர் புலம்பித் தவித்து உடனிருக்கிறவர்களையும் கலக்கிவிடுவார்கள். ஆனால் ஒன்று நிச்சயம், உங்களுக்கு எதிரே இருக்கிற காலங்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். அது 22 வருடங்களாகவும் இருக்கலாம் அல்லது 430 வருடங்களையும் தாண்டிச் செல்லலாம். கர்த்தர் சகலத்தையும் அறிவார். பயம் வேண்டாம்.

கண்களைக் குருடாக்கிய கிழக்குப் பார்வை

சாத்தானுடைய வேலைகள் எல்லாம் ஆரம்பத்தில் படு மகிழ்ச்சியாகத் தெரியும், ஆனால் முடிவு துக்கமாகிவிடும். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போகும் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது.

''அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப் போனான்; இப்படி அவர்கள் (ஆபிரகாமும் லோத்துவும்) ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்.'' (ஆதியாகமம் 13:10,11).

லோத்துவின் பயணம் ஆரம்பத்தில் மகிழ்ச்சியாகத்தான் தெரிந்தது. ஆனால் அது துயரத்தில் முடிந்தது, தேவனுடைய எளிதான கட்டளையை மீறியதால் அவனுடைய மனைவி வழியில் மரித்துப்போனாள். இதனால்

குடும்பமே உடைந்து நொறுங்கியது. இறுதியில் லோத்து சாபத்தின் சந்ததிக்குத் தகப்பனாக மாறிவிட்டார். ஒதுக்கப்பட்ட ஆபிரகாமோ விசுவாசிகளின் தகப்பனாக உயர்ந்துவிட்டார்.

இதனால்தான் "**இடுக்கமான வாசல்வழியாய்ப் பிரவேசியுங்கள்**" என்று இயேசு சொன்னார். இந்த வாசல் வழியாய்ச் செல்லுகிறவர்களுக்கு ஆரம்பத்தில் இடுக்கமும், நெருக்கமும் இருக்கலாம். ஆனால் தொடர்ந்து பயணம் செய்தால், முடிவு நித்திய ஜீவன் . இந்தப் பாதையைக் கண்டுபிடிக்கிறவர்கள் வெகு சிலர். அநேகர் இதைக் கண்டு பிடித்தாலும் எளிதில் வரமாட்டார்கள். **கோர்ட்டுக்குப் போகிற வாசல் அடைக்கப்பட்டாலும் கேட்டுக்குப் போகிற வாசல் 24 மணிநேரமும் திறந்திருக்கும்.** 'அலைகடலெனத் திரண்டு வாரீர்' என்று முன்னே சென்றவர்கள் அழைப்பார்கள் போலும். திரள் கூட்ட மக்கள் நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

தவறான பாதையில் தொடர்ந்து பயணம் செய்தால் முடிவு நித்திய மரணமாக இருக்கும். அது சாத்தானுக்காகவும் அவனது சகாக்கள் மற்றும் தூதர்களுக்காகவும் நியமிக்கப்பட்ட இடமாக இருக்கும். ஐசுவரியவானுக்கு அங்கே போய்ச்சேரும்வரை அதைப்பற்றிய அறிவு இல்லாதிருந்தது. இன்றைக்கு அப்படியல்ல, எச்சரிப்புகள் ஏராளம்.

ஆரம்பம் அற்பமானாலும் முடிவு சம்பூரணமே

"அழுகையின் பள்ளத்தாக்கில் ஆரம்பம்பண்ணுகிறவர்கள் அதை உருவ நடந்து அதையே நீரூற்றாக்கிக் கொள்ளுகிறாகள்" (சங்கீதம் 84:6) என்று வேதம் கூறுகிறது. "தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம் எங்களைச் செழிப்பான இடத்திற்குக் கொண்டுவந்தீர்" (சங்கீதம் 66:12) என்று சங்கீதக்காரன் கூறுகிறார்.

ஆரம்பம் அதிகமான கண்ணீர்! புரியவே இல்லை! தேவன் ஏன் இதை அனுமதித்தார்? என் வாழ்க்கையில் ஏன் இதைச் செய்தார்? எனக்குத்

தரிசனம் தந்தவர் எங்கே? என்னோடு இருக்கிறேன் என்றவரைக் காணோமே!

ஏராளமான கேள்விகளினால் உள்ளத்தில் உட்பூசல்கள்! பாதை ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்த ஊருக்கு வந்தேன்? சில வேளைகளில் தேவன் இல்லை என்று சொல்லுகிற அளவிற்குக்கூட வந்தாயிற்று! ஒருவேளை இதை வாசித்துக்கொண்டிருக்கிற உங்களது வாழ்க்கையில்கூடச் சில சந்தர்ப்பங் களில் இவைகளில் ஏதாவது ஒரு கேள்வியைக் கேட்டிருக்கலாம்.

அன்பானவர்களே, தேவன் உங்களை முன்னறிந்தவர். முன்னறிந்து அழைத்த தேவன் முன்னின்றுதான் நடத்திக்கொண்டிருக்கிறார். இன்றைக்குக் கண்ணீராய்த் தெரிகிற காரியம் நாளைக்கு மகிமையாய் முடியப்போகிறது. இன்றைக்கு இழுத்துக்கொண்டுபோகிறார்கள். நான் எகிப்துக்கு வரமாட்டேன் என்று யோசேப்பு சொல்லியிருப்பார். இப்படியே என்னை இறக்கிவிட்டுவிடுங்கள். நான் தப்பிப் பிழைத்து என் தந்தையிடம் போய்ச் சேர்ந்துகொள்வேன் என்று கெஞ்சியிருக்கலாம்.

இஸ்மவேலர்களான அந்த வியாபாரிகள் அவனைப் பார்த்து " உன்னைக் காசு கொடுத்து வாங்கியிருக்கிறோம், நீ எங்களுக்கு அடிமை. இனிமேல் நீ நினைக்கிற மாதிரி ஒன்றும் நடக்காது. பேசாமல் எங்களுடன் வா" என்று சொல்லியிருக்கலாம். ஐயோ என் அப்பா, அம்மா, என் அண்ணன்மாரை விட்டு வரமாட்டேன் என்று அழுதிருப்பார்.

முகச்சவரம் செய்துகொண்டு முடிசூட்டுவிழாவுக்குச் சென்றவன்

யோஸேப்பின் 17-வது வயதில் அவருக்குத் திறக்கப்பட்ட பாதை ஒரு கடினமான பாதை. கண்ணீரின் பாதை. அவரது சுபாவங்களில் ஒன்று அவரால் அழுகையை அடக்கிக்கொள்ள இயலாது. சத்தமிட்டு அழுதுவிடக் கூடியவர் (ஆதி.45:1,2), அன்பினால் நிறைந்தவர், அண்ணன்மார் அடித்தாலும் கொலை முயற்சிகளை மேற்கொண்டாலும் அவர்களோடு

இருக்கவே விரும்பியவர், அவர்களை எப்படியாகிலும் தகப்பனிடம் சொல்லி நல்வழிப்படுத்தவேண்டும் என்று தீவிரமாய்ச் செயல்பட்டவர். அப்படிப்பட்டவரின் ஆரம்பம் வழிதெரியாத காரிருள் போல் இருண்டுபோன ஒன்றாக இருந்தது. வேதனையும் தனிமையும் அவரை வாட்டியது.

ஆனால் 13 வருடங்கள் முடிந்து அவரது 30-வது வயதில் **கர்த்தருடைய மகிமை அவர்மேல் உதித்தது. கர்த்தர் அவர்மேல் உதித்தார். அவருடைய மகிமை யோசேப்பின் மேல் காணப்பட்டது.** அவர் இருந்ததோ சிறைச்சாலை, இருள் அவர் இருந்த சிறைச்சாலையை மூடியபோதிலும், காரிருள் ஜனங்களை மூடியிருந்தபோதிலும் உதிக்கிற அந்த வெளிச்சத்தினிடத்திற்கு யோசேப்பு வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு, பார்வோன் ராஜா ஆட்களை அனுப்பிவைத்தார். முகச்சவரம் செய்யாதிருந்தாலும் யோசேப்பின் முகம் பிரகாசமாயிருந்தது. ராஜா அனுப்பிய ஆட்களைப் பார்த்ததும் அவரது இருதயம் அதிசயப்பட்டுப் பூரித்தது. **முகச்சவரம் செய்துகொண்டு முடிசூட்டுவிழாவுக்குச் சென்றார்** (ஆதி. 41:14).

ஆம், மகிமையான முடிவு அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தது. கர்த்தர் சகலத்தையும் அறிவார். அடிமைத்தனத்திற்குள்ளே போனாலும் வெளியே கொண்டுவர தேவன் வல்லவர். அதற்காக அவர் ஒரு நாளைக் குறித்துவைத்திருக்கிறார்.

சிறையிலிருக்கிறவனைச் சிங்காசனத்திற்குக் கொண்டுபோக நம் தேவனால் மட்டுமே முடியும். நாளையைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்கள் வீட்டில் 22 வருடத்திற்குப் பிறகு வருகிற பிரச்சனையை அவர் மட்டுமே அறிவார். அது ஒருவேளை ஆகாரப் பஞ்சமாயிருக்கலாம். ஆண்டவருக்குத்தான் தெரியும். பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு தேவன் ஏற்கனவே வழியை ஆயத்தம்பண்ணித்தான் யோசேப்பை அனுப்பிவைத்தார்.

நீங்கள் இப்போது உட்கார்ந்துகொண்டு இதற்காகக் கவலைப்படவோ, பஞ்சத்திலிருந்து தப்பிக்க என்ன வழி என்று யோசித்து உண்ணாமல் உறங்காமல் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கவோ அவசியமில்லை. உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததியையே நடத்த தேவனால் கூடும். அதனால்தான் ஆண்டவர் உன்னை வானங்களில் அல்ல, என் உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறேன் என்கிறார்.

எங்களுடைய ஆலயத்தைக் கட்டியபோது எஞ்சினியர் வந்து ஒரு படத்தை என் கையில் கொடுத்தார். அதிலே பார்த்தால் அப்படி ஒரு கோடு, இப்படி ஒரு கோடு, எல்லாமே கோடு மயமாக இருந்தது. எனக்குத் தலையும் வாலும் புரியவில்லை. இதுதான் நாம் கட்டப்போகிற ஆலயம் என்றார். இந்த இடத்தில் தோட்டத்திற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். இதுதான் மெயின் ஹால் என்றார். நான் பேசாமல் எஞ்சினியர் போட்டுக்கொடுத்த பிளானைப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் ஒன்றுமே புரியாதிருந்த அத்தனைக் கோடுகளும் சேர்ந்து ஒரு அழகான கட்டிடமாக எழும்பிவந்தது.

காடுகள் முதலில் கோடுகளாயின, பின்னர் மேடுகளாயின, பின்னர் அழகிய கட்டிடங்களாயின! வரைபடத்தைப் பார்த்தால் நம்மால் புரிந்துகொள்ள முடியாது. வரைபடத்தில் உள்ள கோடுகள் கட்டிடங்களாகும் வரை பொறுத்திருக்க வேண்டும்.

"நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபி.10:36).

கர்த்தர் நடத்தும் கட்டுமானப் பணிகள்

அருமையான தேவ பிள்ளையே, உன்னுடைய வாழ்க்கை, எதிர்காலம், குடும்பம், பிள்ளைகள், சந்ததி எல்லாவற்றையும் குறித்த ஒரு திட்டமிடப்பட்ட தெளிவான வரைபடம் தேவனுடைய கரத்தில் இருக்கிறது. அந்த வரைபடத்தை நீங்கள் எட்டிப் பார்த்தால் உங்களுக்கு ஒன்றுமே புரியாது. எல்லாமே கட்டம் கட்டமாகவும், கோடு மயமாகவும்தான்

காணப்படும். அதைக் காண்பித்து, அவர் சொல்வதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உங்களுக்கு இருக்காது. கட்டிடத்தைக் கட்டி முடித்தபின்னர்தான் அதாவது காரியத்தை நிறைவேற்றி முடித்தபின்னரே காரியங்கள் விளங்கும்.

அதற்கு முன் தேவன் சில இடங்களில் **தோண்டுவார்**, சில இடங்களில் **உடைப்பார்**, சில சுவர்களை **இடிப்பார்**, கட்டி எழுப்பவேண்டிய சுவர்களைக் **கட்டுவார்,** மண்ணைப் போட்டு மூட வேண்டிய பள்ளங்களை **மூடுவார்**, அவ்வப்போது தண்ணீரைப் பாய்ச்சி கட்டிடத்தை **உறுதிப்படுத்துவார்**, இறுதியில் பூச்சு வேலையை **நடத்துவார்**, எல்லாம் முடிந்தபின் பெயின்ட் பண்ணி வேலையை **முடிப்பார்**. கடைசியில் அவரது கரத்தில் இருந்த வரைபடத்தில் காணப்பட்ட கோடுகள் எல்லாம் இணைந்து அழகிய வீடாக அல்லது மாளிகையாகக் காட்சியளிக்கும்.

நான் சில வேளைகளில் யோசிப்பேன். நம் கையைப் பார்த்தால் நமக்கு ஒன்றுமே தெரியாது, எல்லாம் ரேகைக் கோடுகளாகக் காணப்படும். ஆனால் நம் கரத்தை கைரேகை ஜோதிடம் பார்க்கிற எவனாவது பார்த்துவிட்டால், அந்தக் கோடுகளுக்கு விளக்கம் கொடுக்க ஆரம்பித்து விடுகிறான். "இந்தக் கோடு ராசியான கோடு. நீ அமெரிக்கா போயிடுவ. நீ பெரிய ஆளா மாறிடுவ, உனக்கு இத்தனை பிள்ளைகள் பிறப்பார்கள்" என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிடுவான்.

நாளைக்கு அவனுக்கு என்ன நடக்கும் என்று அவனுக்கே தெரியாது. ஆனால் ஒவ்வொரு கோட்டுக்கும் மேட்டுக்கும் புள்ளிகளுக்கும் விளக்கத்தைக் கொடுத்து வியாபாரம் பண்ணிக்கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

தேவன் நம்மைத் தமது உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறார். உங்களது மொபைல் போனில் உள்ள சிம் கார்டில் எத்தனையோ நூற்றுக்கணக்காண நம்பர்களை ஸ்டோர்பண்ணி வைத்திருக்கிறீர்கள், மனைவியின் செல் நம்பர்கூடக் கணவனுடைய மனதில் இல்லை என்கிற

நிலவரத்தில் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அப்பாவின் நம்பர் மைந்தனின் மனதில் இல்லை. உடனே மொபைலைப் பார்த்துத்தான் சொல்லுகிறான்.

சுண்டுவிரல் நகம் அளவிலிருக்கும் அந்தக் கார்டில் இத்தனை தகவல்களை, பாடல்களை, வீடியோ காட்சிகளை வைக்க முடியுமானால் கர்த்தரின் கரத்தில் உலகிலுள்ள எத்தனை கோடி மக்களையும் வரைந்துவைக்கமுடியும் என்பதை விசுவாசியுங்கள். நாம் தேவனுடைய சாயலாய் இருக்கிறோம். என்னைக் குறித்தும், என் குடும்பத்தைக் குறித்தும், ஊழியங்களைக் குறித்தும் தேவன் தமது திட்டங்களைத் தமது கரத்தில் வைத்திருக்கிறார்.

நான் என்னை அவர் கரத்தில் கொடுத்து **47** வருடங்களுக்கு மேலாகிவிட்டது. கடந்த **47** ஆண்டுகளாக என்னில் ஆண்டவர் நடத்துகிற ஆவிக்குரிய கட்டிட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **கர்த்தராகிய இயேசுவின்மேல்** "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறேன்" (எபேசியர் 2:22). நீங்களும் அப்படித்தான் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என நம்புகிறேன்.

விற்கப்பட்டதிலிருந்து விடுதலை வரை

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ. 2:6,7).

பரிசுத்த ஆவியினாலே, நாம் "தேவனுடைய வாசஸ்தலமாய்க் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறோம்" (எபே. 2:22). தேவன் நமக்குத் தீமை

செய்யவே மாட்டார். அற்பமான ஆரம்பமாயிருக்கலாம். துவக்கம் துக்கமாக இருக்கலாம். காடுகளாகவும், வெறும் கோடுகளாகவும், வனாந்தரமாகவும் காட்சியளிக்கலாம். ஆனால் உங்களில் ஓர் மகிமையான கட்டிடத்தை தேவன் கட்டி எழுப்பப்போகிறார். பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, **ஆவியினால் எல்லாம் ஆகும்** என்பதை நீங்கள் காணப்போகிறீர்கள்.

நம்முடைய துவக்கத்தைப் பார்க்கிலும் முடிவு சம்பூரணமாக இருக்கும். நம்மை அழைத்தவர் அக்கினிக்கு இரையாக்க நம்மை அழைக்கவில்லை. பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கே அழைத்திருக்கிறார். என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர். நான் உம்மை 100-க்கு 100 நம்புகிறேன் கர்த்தாவே என்று சொல்லுங்கள்.

இன்றைக்கு நீங்கள் விடுகிற கண்ணீருக்கு உங்களை அழைக்கவில்லை. அழுதுகொண்டிருக்க அழைக்கப்படவில்லை. ஆத்துமாக்களுக்காக நதியளவுகூட கண்ணீர் விடுங்கள். ஆனால் உங்கள் வாழ்க்கையை நினைத்து வீணாய் அழவேண்டாம். உங்கள் பிள்ளைகளை நினைத்து நம்பிக்கையிழந்து அழ வேண்டாம். உங்கள் கணவனை நினைத்து கதற வேண்டாம். இப்போது காணப்படுகிற விலங்கையோ, அவமானத்தையோ, நிந்தையையோ நீங்கள் விசுவாசிக்காதீர்கள். ஆவியினாலே கிடைக்கப்போகும் விடுதலையை நினைத்து தேவனை மகிமைப்படுத்துங்கள்.

"யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது. ராஜா ஆள் அனுப்பி, அவனைக் கட்டவிழ்க்கச் சொன்னான்; ஜனங்களின் அதிபதி அவனை விடுதலை பண்ணினான்" (சங்கீதம். 105:17-20).

சிறையாக விற்கப்பட்டதிலிருந்து விடுதலைபெறும்வரை அவர் சந்தித்த மிரட்டல்களும், அவமானங்களும், நிந்தைகளும் அவரை அழித்துவிடவில்லை. சிறையும் அந்த அறையும் ஓர் அதிபதியாவதற்கு அவரை ஆயத்தம்பண்ணியவை என்று கூடச் சொல்லலாம்.

இறுதி வரை இந்த எகிப்தின் மத்திய சிறைதான் தனக்கு நியமிக்கப் பட்ட வாழ்வு என்று யோசேப்பு நினைக்கவில்லை. கர்த்தர் அவரோடுகூட இருந்ததால் எதிர்மறையான எண்ணங்களுக்கு அவர் இடமளிக்கவில்லை. 30- வது வயதில் சரியாகக் கர்த்தர் அவரைக் கட்டிவைத்திருந்த கட்டுகளின் முடிச்சுகளையெல்லாம் அவிழ்த்து அதிபதியாக்கிவிட்டார்.

கர்த்தர் சகலத்தையும் அறிவார். "*உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது*" (லூக்கா 21:18). அவைகளின் தொகையை அவர் எண்ணி வைத்திருக்கிறார் (மத்தேயு 10:30). தேவன் உங்கள் தலையில் உள்ள முடியில் இவ்வளவு கவனமாயிருப்பாரானால் உங்கள்மீது எவ்வளவு கவனமாய் இருப்பார் என்பதை யோசித்துப் பார்த்து, அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள். அவரே காரியங்களை வாய்க்கச்செய்வார்.

ஸ்தேவானுக்குக் கிடைத்த வெளிப்பாடு

கடைசியாக ஸ்தேவானின் பிரசங்கத்திலிருந்து வெளிப்பட்ட வெளிப்பாடுகளில் யோசேப்பைக் குறித்துத் தொடர்ந்து தியானிப்போம். அப்போஸ்தலர் 7:10-ல் "*தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்துதேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான்*" என்று எழுதப்பட்டுள்ளது.

யோசேப்பை அவரது தகப்பன் வீட்டிலிருந்து பிரித்து எகிப்துக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அவரது சூழ்நிலையை உங்கள் மனக்கண்கள்

முன் கொண்டுவாருங்கள். அவர் இப்போது அடிமையாய் இருக்கிறார். தகப்பனும் தாயும் கைவிட்டாலும் அந்த அந்நிய தேசத்திலே தேவன் அவரோடு இருந்தார் என்பது மட்டுமே அவரைத் தைரியப்படுத்திய ஒரு காரியம். கர்த்தர் தன்னோடு கூட இருக்கிறார் என்ற தரிசனத்தினாலே கடுமையான உபத்திரவங்களையும், நிந்தனைகளையும், அவமானங்களையும் சகித்தார். தேவன் என்னைக் கைவிடவே மாட்டார் என்ற தரிசனம் அவருக்கு இருந்தது. நான் எந்தப் பாதையில் போனாலும் கர்த்தர் என்னோடு இருக்கிறார் என்ற நிச்சயம் யோசேப்புக்கு இருந்தது.

பரிசுத்தவான்களின் பாதங்களும், பாதைகளும்

தேவனால் பயன்படுத்தப்பட்ட பரிசுத்தவான்கள் எல்லாருமே ஒருநாள் மனிதர்களாலும், சொந்த ஜனங்களாலும், சொந்த வீட்டாராலும் கைவிடப்பட்டவர்கள்தான். யாக்கோபைப் பாருங்கள். அப்பாவின் ஆசீர்வாதத் தை அம்மாவின் தந்திரத்தினால் பெற்றுக்கொண்டார்.

ஆனால் ஒருநாள், கைவிடப்பட்டவராக வெறுங்கோலும் கையுமாக *"பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி, ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டார்"* (ஆதி. 28:10,11).

ஆனால் தேவன் அவருக்குத் தரிசனமாகி எல்லாரும் உன்னைக் கைவிட்டார்கள் ஆனால் நான் உன்னைக் கைவிடமாட்டேன். உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் நான் உன்னைக் கைவிடவேமாட்டேன் என்று அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது சொப்பனத்தில் தரிசனத்துடன் வாக்குப்பண்ணினார்.

இன்றைக்கு உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களாலும் தேவனுடைய ஊழியக்காரர்களாலும் பாராட்டப்படுகிற **பவுல்** அன்றைக்குச் சொன்னார்;

''எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்'' (2 தீமோ.4:16,17) என்று தனது நிர்பந்தமான நிலைமையையும் அந்த வேளையில் தன்னைப் பெலப்படுத்தின தேவனுடைய கிருபையையும்பற்றி எழுதியிருக்கிறார்.

சங்கீதக்காரனும் இஸ்ரவேலின் ராஜாவுமான **தாவீது** எல்லாராலும் கைவிடப்பட்டவர் என்பதை அவருடைய சங்கீதகங்களில் காண்கிறோம்.

உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான **யோபுவை** விட்டு ஆஸ்தியும் அந்தஸ்தும் விலகியது, பிள்ளைகள் அனைவரும் மரித்துப்போனார்கள், சொந்தங்கள், வேலைக்காரர்கள், நண்பர்கள் என எல்லாரும் விலகிச்சென்று துாரத்தில் இருந்து வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தார்கள்.. அவருடைய மனைவியும் அவரைத் தற்கொலைக்குத் துாண்டினாள். அவருடைய சரீரமும் அவரைக் கைவிட்டது. இப்படி எல்லாமே கைவிட்ட வேளையில் அவரைக் கைவிடாதவரும், இறுதி வரை நடத்தியவரும், இரட்டிப்பான நன்மைகளைத் தந்தவரும் தேவனாகிய கர்த்தரே என்பதை யோபுவின் சரித்திரம் காண்பித்துக்கொடுக்கிறது.

நான் உன்னை மறப்பேனோ?

ஒரு தாய் தன் கர்ப்பத்தின் பிள்ளையை மறப்பாளா? மறக்கிற காலம்தான் இது. சிலர் இப்படிச் சவால் விடுவார்கள்; நீ செத்தாக் கூட உன் வீட்டுக்கு வரமாட்டேன், உன் வீட்டுப்பக்கம் தலைவச்சுகூடப் படுக்கமாட்டேன் என்பார்கள். வைராக்கியம் வைரம்பாய்ந்த மரம்போல வளர்ந்திருக்கும். சில நேரங்களில் பிள்ளைகள் தனக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தைச்

செய்வார்களானால் தாய் மிகவும் கோபமடைவாள். அவள் கண்ணே என் மணியே என்று கொஞ்சியவள்தான். ஆனால் கோபம் தலைக்கு ஏறிவிடுமானால் பிரம்பை எடுத்துக்கொண்டு துரத்துவாள்.

இதுதான் மனித சுபாவம். வேதம் சொல்கிறது; பஞ்சத்தினிமித்தம் தன் சொந்தப் பிள்ளைகளை வெட்டிச் சாப்பிட்டிருக்கிறார்களாம் (2இரா.6:28,29). அப்படிப்பட்ட பஞ்சம் நம் நாட்டில் இதுவரை வரவில்லை, அதனால்தான் பிள்ளைகள் உயிரோடு இருக்கிறார்கள். தகப்பனும் தாயும் நம்மை மறந்தாலும் தேவன் நம்மை ஒருபோதும் மறக்கவேமாட்டார்.

நீங்கள் கர்த்தருடைய கையைப் பிடிக்காமல் மனிதருடைய கையை நம்பிப் பிடித்து, சிக்கிக்கொள்ளாதீர்கள்!

வாலிபப் பருவத்தில் இருக்கிற யாராவது இந்தச் செய்தியை வாசிப்பீர்களானால், உங்களுக்குச் சொல்லுகிறேன், படிக்கிற இடத்தில், பயணம் செய்கிறவேளையில் மனிதரின் கையை நம்பிப் பிடித்துவிடாதீர்கள். ஒரேநாளில் அவர்களது அன்பில் மயங்கி வழிதப்பிவிடாதீர்கள். ஒழுங்காகக் கர்த்தருடைய கையைப் பிடித்துக்கொள்வீர்களானால் அவர் உங்களைக் கடைசி வரை அதாவது முதிர்வயது வரை கைவிடவேமாட்டார்.

ஜோசப் எப்படியிருக்கிறாய்?

யோசேப்பிற்குத் தெரியும். தன்னை 12 அரிக்கட்டுகள் வணங்கும் என்று. தேவன் தரிசனம் தந்திருக்கிறார். யாராகிலும் யோசேப்பைப் பார்த்து தம்பி ஜோசப் நீ எப்படி இருக்கிற, என்று கேட்டால், ஹலோ நான் இப்போ ஜெயில்ல இருக்கிறேன், ஆனால் தரிசனம் நிறைவேறும் என்று நம்பியிருக்கிறேன் என்பார்.

கர்த்தர் எனக்குச் சொன்னபடி நடக்கும், என்னுடைய உன்னதமான அழைப்புக்கு விரோதமாக எத்தனைத் தடைகளும், சோதனைகளும்

எழும்பினாலும் எல்லாவற்றையும்தாண்டி தேவன் காண்பித்த தரிசனங்கள் நிறைவேறும் என்பதை நம்பியிருக்கிறேன் என்பதே யோசேப்பின் விசுவாசமாயிருந்திருக்கும்.

சூழ்நிலைகளைப் பாராதே!

அன்பு சகோதரனே, சகோதரியே நீங்கள் இருக்கிற சூழ்நிலைகள் ஒருவேளை யோசேப்பு சிறைச்சாலையில் இருந்தது போலிருக்கலாம். அது ஒருவேளை சிறைச்சாலையின் அனுபவமாயிருக்கலாம். ஆனால் வாக்குப் பண்ணியவர் சொல்கிறார், "நீ வாலாக இருக்கப்போவதில்லை, நீ தலையாக இருக்கப்போகிறாய், நீ கீழாய் அல்ல மேலாய் இருக்கப்போகிறாய்" என்று!

நீங்கள் எதை நம்புவீர்கள்? இன்றைக்குக் காணப்படுகிற சூழ்நிலையை நம்புவீர்களா? அல்லது தேவன் உங்களுக்குத் தந்த வாக்குத்தத்தத்தை அல்லது ஆவியில் தரிசனத்தை நம்புவீர்களா?

தேவன் உங்களைக் கரம் பிடித்தது உண்மையானால் உங்களை உயர்த்தப்போவதும் உண்மையே. வாக்கை மட்டுமல்ல வாக்குப்பண்ணியவரையும் நம்பவேண்டும்.

சபிக்கப்பட்டவனாய் வந்தேன்

நான் இந்தப் பெந்தெகோஸ்தே ஊழியத்திற்கு வந்தபோது மிகுந்த பசியோடும் தேவைகளோடும் வந்தேன். 1967-ம் ஆண்டு நான் அப்போஸ்தல கிறிஸ்தவ சபைக்கு வந்தபோது அந்நாட்களில் ஜெபவீட்டில் ஆகாரம் இல்லை. மூன்று நாட்கள் ஊழியக்காரர்கள் அனைவரும் பட்டினியாய் இருந்தோம். எனக்கு இப்படிப்பட்ட அனுபவம் இருந்ததேயில்லை. அவர்கள் எல்லாரும் தண்ணீர் மாத்திரம் குடித்துக்கொண்டு ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது உள்ளே மூன்று தேவ ஊழியர் இருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டதை நான் கேட்க நேரிட்டது. இந்த சபிக்கப்பட்ட பையன் வந்தான். அதினால் சோறுகூட இல்லாமல் போய்விட்டது என்று அவர்கள் பேசிக்கொண்டதை நான் கேட்க நேர்ந்தது.

நான் அடுத்த அறையில் இருப்பதைப் பார்க்காமல் பேசிய அவர்களது பேச்சு என்னைத் தூக்கிவாரிப்போட்டது. நான் மார்பில் அடித்துக்கொண்டு கதறினேன். ஆண்டவரே என் வீட்டில்தான் நான் சபிக்கப்பட்டவனாய் இருந்தேன், இந்த ஜெப வீட்டிலுமா நான் சபிக்கப்பட்டவனாய் இருக்கவேண்டும்? இதுதான் என்னுடைய ஊழியத்தின் ஆரம்பம். ஆம், நான் ஓர் சபிக்கப்பட்டவனாக கருதப்பட்டவன்.

அப்படிப்பட்ட அற்பமான, சபிக்கப்பட்ட சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்ட எனது ஊழியப் பாதையில் மனிதர்களும் தலைவர்களும் என்னைக் கைவிட்டபோதிலும் என்னை அழைத்த தேவன் கைவிடவே இல்லை.

இன்றைக்கு இந்தியாவில் மட்டுமல்ல உலகமெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாய் தேவன் என்னை பயன்படுத்திவருகிறார் என்பதை நினைத்துப் பார்க்கும்போது என் கண்கள் குளமாகிறது. சில பேர் என் கையைப் பிடித்து அழுவார்கள். ஒருமுறையாவது எங்கள் வீட்டில் வந்து உங்கள் காலைப் பதியுங்கள் பாஸ்டர் என்பார்கள்.

எத்தனையோ நாடுகளிலிருந்து என்னைத் தொலைபேசியில் அழைத்துப் பேசுவார்கள். செய்தி வேளையில் கர்த்தர் என்னோடு பேசினார் நான் கதறி அழுதேன் என்பார்கள்.

1967-ல் நான் ஒரு சபிக்கப்பட்டவனாக இருந்தேன். வீட்டிலும், ஜெபவீட்டிலும் அதேதான் நிலைமை. ஆனால் **பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல ஆவியினாலேயே ஆகும்** என்ற தேவனுடைய வார்த்தை எழும்பி வந்து என்னைப் பெலப்படுத்தியது.

திடப்படுத்தியது. ஊழியங்களிலே பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை வெளிப்பட்டது. இன்றைக்கும் தேவ ஆவியானவரின் வல்லமை ஒவ்வொரு ஆராதனையிலும், வேதபாடக் கூட்டங்களிலும், உபவாச ஜெபங்களிலும் வெளிப்படுகிறதைக் காணமுடிகிறது.

வார்த்தையே வாழ்வானது

யோசேப்பின் கனவில் வந்த மாதிரி எனக்கு ஒரு சொப்பனம் வந்திருந்தால் நான் நம்பியிருக்கமாட்டேன். எனக்கு தரிசனம் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் வசனம் இருந்தது. இந்த வசனத்தை நான் முழுநிச்சயமாய் நம்பி விசுவாசத்தில் வளர்ந்தேன். அதற்குக் கீழ்ப்படிந்தேன். நான் கீழாக இல்லாமல் மேலாய் இருக்கும்படி தேவன் கிருபை செய்தார். வாலாக இல்லாமல் தலையாக இருக்க வைத்தார். என்னுடைய 47 வருட ஊழிய அனுபவத்தில் இந்த தேவ வார்த்தை ஒரு வெளிப்படுத்தலின் புத்தகமாய் இருந்தது.

என் சபையின் ஜனத்தோடு நான் பிரசங்கிப்பது குறைவு. ஆனால் ஒவ்வொரு நாளும் இந்த வசனங்கள் எனக்குப் புதிய புதிய வெளிப்படுத்தலைத் தருகின்றன. வசனத்தைப் பிடித்துக்கொண்டு சில வேளைகளில் கதறுவேன். என் சுபாவத்தை, சாபத்தை, வாழ்க்கையை, ஊழியத்தை, சபையை மாற்றும் என்று ஜெபிப்பேன்.

அடங்கியிருந்தால் ஆளுகை செய்யலாம்

அருமையான வாசகரே, வேத வசனங்களின்படி நம் வாழ்க்கை மாறவேண்டும். அதற்காக நாம் தினமும் ஜெபிக்கவேண்டும். வேதத்தை வாசிப்பதோடு, விசுவாசிக்கவேண்டும்.

தேவன் நம்மை முன்குறித்திருக்கிறார். தேவன் நம்மை அழைத்திருக்கிறார். தேவன் நமக்கு எத்தனையோ நன்மைகளை மேன்மைகளை உயர்வுகளை ஆயத்தம்பண்ணிவைத்திருக்கிறார். அதை

ஆவியிலே காண்பிக்கிறார். அதை அவரே கரத்தினால் நிறைவேற்றுகிறார். தேவன் நம்மைக் கைவிடவே மாட்டார். தேவன் நம்மை உயர்த்துவார்.

"ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்று (1 பேதுரு 5:6)-ல் எழுதியுள்ளார். இது ஓர் கட்டளையாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது **கல்வாரி**யைப் பற்றியப் படிப்பு. இதில் விருப்பப்பாடம் எடுத்துப் படித்தல் என்பதற்கு இடமே இல்லை. டோட்டல் சரண்டர் என்று சொல்வார்களே அதுபோல முழுவதுமாய் நம்மை அர்ப்பணித்தால் தேவனுடைய கரம் நம்மை நிச்சயமாய் உயர்த்தும்.

ஆனால் அவர் அழைத்துச் செல்லுகிற பாதைகளில் பக்குவமாய்ச் செல்லவேண்டும். மனம் பதறக்கூடாது, மனம் சிதறக்கூடாது. அப்படியானால் இன்றைக்கு நீங்கள் பார்க்கிற சூழ்நிலைகள் மாறும். அவைகள் தற்காலிகமாகப் போடப்பட்ட பந்தல் போன்றவைதான். சில நாட்களில் பிரித்தெறியப்படும்.

தேவனுடைய வார்த்தை மாறாதது. அது சீயோன் பர்வதம் போன்றது. அது நிரந்தரமானது. அவர் சொன்ன வார்த்தை நிறைவேறும். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் தேவனுடைய வார்த்தை ஒருக்காலும் ஒழியாது, அழியாது, ஆட்டம் காணாது.

என்னோடு சேர்ந்து நீங்களும் கரங்களை உயர்த்திக் கேளுங்கள்; **ஆண்டவரே எனக்கு ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறவைகளை என் கண்கள் காணட்டும்; என்னோடு இருக்கிறவர்கள் உம்முடைய செய்கைகளைக் காணட்டும்** என்று சத்தமாய் வாய்விட்டுச் சொல்லுங்கள். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், பிள்ளைகளையும் ஜெயமாய் நடத்துவார்.

3

வல்லமையின் ஆவியானவர்

"இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்களென்று உரைக்கிறார்" என்று சொல் என்றார்

(எசே.37:5,6).

3. வல்லமையின் ஆவியானவர்

கொடிமரம் ஏதுமின்றி உயரப் பறக்கக்கூடியவைகள் மனிதருடைய பலமும் பராக்கிரமமுமே என்பதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள். தன்னைப் பெரியவனாக நினைத்துக்கொண்டு தேவனை மறந்து வாழ்ந்துகொண்டிருந்த நேபுகாத்நேச்சாரின் மகனைப் பார்த்து தானியேல் சொன்னதை வாசித்துப்பாருங்கள். “ராஜாவே, உன்னதமான தேவன் உம்முடைய பிதாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு ராஜ்யத்தையும் மகத்துவத்தையும் கனத்தையும் மகிமையையும் கொடுத்தார்” (தானியேல் 5:18) என்று சொன்னார்.

நேபுகாத்நேச்சாருக்கு ராஜ்யத்தையும், மகத்துவத்தையும், கனத்தையும், மகிமையையும் தேவன்தான் கொடுத்தார்.

இவைகளை வைத்து அந்த ராஜா என்ன செய்தான்? ஆட்சி செய்தானா அல்லது சூழ்ச்சி செய்தானா என்று உற்றுப்பார்க்கும்போது அவன் செய்ததெல்லாம் சூழ்ச்சியைத்தவிர வேறொன்றுமில்லை என்பது தெளிவாகிறது. அவனது குடிமக்கள் அனைவரும், கோலியாத்துக்கு முன் 40 நாட்கள் நடுங்கிக்கொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்களைப்போல இருந்ததைக் காணமுடியும்.

''அவருக்குக் கொடுக்கப்பட்ட மகத்துவத்தினாலே சகல ஜனங்களும் ஜாதியாரும்பாஷைக்காரரும் அவருக்கு முன்பாக நடுங்கிப் பயந்திருந்தார்கள்'' (தானியேல் 5:19) என்று எழுதப்பட்டுள்ளது.

நேபுகாத்நேச்சார் தேவன் தந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, மக்களைக் கொத்தடிமைகளைப் போல வைத்திருந்தது இதிலிருந்து தெளிவாகிறது. இன்றைக்கும் தேவன் நமக்குக் கொடுக்கும் அதிகாரங்களை வைத்துக்கொண்டு, பதவிகளை வைத்துக்கொண்டு நமக்குக் கீழிருக்கும் மக்களைக் கொடுமையாக நடத்துவோமானால் நமக்கும் நேபுகாத்நேச்சாருக்கும் வித்தியாசம் ஏதுமிராது.

நேபுகாத்நேச்சாரும் நம்மைப்போல பாடுள்ள மனிதன்தான். ஆனால் அவனுக்கு மகத்துவம், அதிகாரம், கனம் எல்லாம் தேவனாலே கொடுக்கப்பட்டிருந்தது. அதிகாரத்தைக் கையிலெடுத்து ஆமான்போல அகங்காரத்தோடு அவன் நடந்துகொண்டதால், ஜனங்கள் அவனுக்கும் அவனது ஆளோட்டிகளுக்கும் நடுங்கிப் பயந்திருந்தார்கள்.

நேபுகாத்நேச்சாராகிய அவன் தனக்குச் சித்தமானவர்களை அதாவது தன்னைப் புகழ் பாடுபவர்களை உயிரோடு வைப்பதும், கொல்லவேண்டும் என்று நினைப்பவர்களைக் கொல்வதும் அவனது

பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்று என்றுகூடச் சொல்லலாம். சர்வாதிகாரியாகிய இவன் இன்னாரைத் தாழ்த்தவேண்டும் என்று நினைத்துவிட்டால் உடனடியாக அன்னாரைத் தாழ்த்திப்போடுவான்.

சில வேளைகளில் கழுமரத்தில், சிங்கக் கெபிகளில் அல்லது அக்கினிச் சூளையில் தூக்கியும் போடுவான். அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஆகாயத்தில் சிலம்பம் பண்ணினான். ஆகையினால் ஜனங்கள் அந்தக் கொடுங்கோல் மன்னனுக்கு நடுங்கி பயந்திருந்தார்கள். நேபுகாத்நேச்சார் போர்க்குணம் படைத்த ஒரு தெய்வத்தின் பெயரை உடையவன்.

அதிகாரத்திற்கு முன் நின்ற அதிகாரிகள்

இப்படிப்பட்ட சர்வாதிகாரியின் அதிகாரத்திற்கும், தர்பாருக்கும் ஒரு வரம்பு இருந்தது. அந்த வரம்புக்கு மேல் அவர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தமுடியாது. ஒருநாள் இவனுடைய அதிகாரத்திற்கு முன்னால் அழகான, வாட்டசாட்டமான மூன்று எபிரெய வாலிபர்கள் (Three Hebrew Heroes) நின்றார்கள்.

அந்த ராஜா தன் அதிகாரச் செருக்கிலே சனகெரிப்பைப் போலவே கேட்டான்: *"என்னுடைய கைக்கு உங்களைத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்?"* (தானியேல் 3:15). மனுஷரைச் சோதிக்கிறதும், நிந்திக்கிறதும், தண்டிக்கிறதுமே இவனுடைய நேச்சராகவும், பிரதான தொழிலாகவும் இருந்திருக்கிறது.

இந்த வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரைப் பார்த்து: ராஜாவே உமக்கு அதிகாரம், வல்லமை, பராக்கிரமம் எல்லாம் தேவைக்கு மேல் இருந்தாலும், உம்மிடத்தில் உள்ள அதிகாரங்கள், வல்லமை அனைத்தையும் விடப் பெரிய தேவன் ஒருவர் எங்களோடு இருக்கிறார். அவர் நிச்சயமாய் உம்முடைய கைக்கு எங்களைத் தப்புவிப்பார். அவர் தப்புவிக்காமலே போனாலும் உம்முடைய அதிகாரத்திற்கும் வார்த்தைக்கும் நாங்கள்

கீழ்ப்படிந்து ‘‘நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது’’ என்றார்கள் (தானியேல் 3:18).

அந்த ராஜாவுடைய அதிகாரத்திற்கும் மேற்பட்ட ஒரு சர்வ வல்லமையுள்ள தேவனுடைய அதிகாரத்தை அந்த மூன்று எபிரெய வாலிபர்களும் அறிந்து வைத்திருந்தார்கள். அந்த சர்வ வல்லவரின் அதிகாரத்திற்குத் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். இன்றைய வாலிபர்களுக்கு இப்படிப்பட்ட அறிவும் அர்ப்பணிப்பும் தேவை.

ராஜாவின் எல்லையும் தொல்லையும்

சிங்கங்களின் கெபியிலே பட்டினியோடு சிங்கங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. தானியேலைத் தூக்கிப்போடுவதற்காகக் கவுன்ட் டவுன் (Countdown) ஆரம்பமாகிவிட்டது. இந்தச் செய்தி ஜெபவீரனான தானியேலுக்கும் எட்டிவிட்டது.

சகல அதிகாரங்களையும் கையில் வைத்திருந்த தரியு ராஜா காலம் கடந்து யோசித்துக் கலங்கினான். தானியேலைத் தூக்கிப் போடுவதற்குத்தான் இந்தக் கையொப்பம் என்று சொல்லியிருந்தால் முத்திரை மோதிரத்தைக் கொடுத்திருக்கமாட்டான். இப்போது தப்புவிக்கத் தடுமாறிக் கொண்டிருக்கிறான். ஆனால் காரியம் தோல்வியாய் முடிந்தது.

ஒரு ராஜாவின் அதிகாரத்தின் எல்லையையும் அதனால் ஏற்படும் தொல்லையையும் பார்த்தீர்களா?

ஆனால் தானியேல் சர்வ வல்லமையுள்ள தேவனை நம்பியிருந்தான். தேவன் உடனடியாக அவனது காரியத்தில் தலையிட்டு, தூதனை அனுப்பிச் சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டுவிட்டார். சிங்கத்தின் வாயினின்று தானியேல் காக்கப்பட்டார். கெபிக்கு மேலே நின்றுகொண்டிருந்த இரண்டுகால் சிங்கங்கள் (பிரபுக்களும் மந்திரிமார்களும், அதிகாரவர்க்கங்களும்) செய்வதறியாது தவித்தன.

அவர்களது தவிப்பு மாபெரும் அங்கலாய்ப்பாக மாறியது. அவர்கள் தானியேலுக்கு (அதாவது ஜெபிக்கிறவனுக்கு) எதைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தார்களோ அதை ராஜா அவர்களுக்குச் செய்தான். அத்தனைபேரும் குடும்பம் குடும்பமாய்க் கெபிக்குள்ளே போடப்பட்டார்கள்.

ராஜ்யபாரம் சுத்திகரிக்கப்பட்டது. மாபெரும் துப்புரவுப் பணியைத் தரியு ராஜா செய்துமுடித்தான். தானியேலுக்குக் காரியம் ரொம்பவும் சுலபமாய் மாறிப்போனது. கூடுதல் பதவியும், பொறுப்புகளும் கையளிக்கப்பட்டது.

இந்த உலகத்தில் காணப்படுகிற கோட்டைகளையும் அதற்குள்ளே இருக்கிற மனிதர்களையும் கண்டு அதிகாரம் படைத்தவர்கள் என்று நாம் சொல்லுகிறோம். ஆனால் இவற்றிற்கும் மேலாக, சர்வ வல்லமை நிறைந்த அதிகாரத்தையுடைய அதிகாரி, நம் வழிகளுக்கெல்லாம் அதிகாரி நமக்கு இருக்கிறார் என்று அறிவோமானால், அவருக்கு அடிபணிவோமானால் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்வதற்கு தேவன் வல்லமையுடையவராய் இருக்கிறார்.

"மனுஷரால் இது கூடாதுதான். தேவனாலே எல்லாம் கூடும்" (மத்தேயு 19:26) என்று இயேசு ஒரு முறை சொன்னதைப் பல முறை நீங்களும் வாசித்திருப்பீர்கள். மனுஷரால் முடியாதவைகளை தேவன் செய்துமுடிப்பதற்கு வல்லவராயிருக்கிறார்.

எவ்வளவு பெரிய சர்வாதிகாரியாய் இருந்தாலும் அவனும் ஒருநாள் தரியு ராஜாவைப் போலத் தடுமாறிக்கொண்டு தூக்கம் வராமல் நிம்மதியை இழந்து தவிப்பான். "என்னால் இதற்குமேல் முடியாது, இதற்குமேல் எனக்குப் பெலன் இல்லை" என்று அறிக்கை விடுவான்.

ஆனால் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. பலமும், பராக்கிரமமும் மனுஷீக அதிகாரங்களும் செய்ய முடியாதவைகளை ஆவியானவர் செய்ய வல்லவராய் இருக்கிறார்.

பகையைக் கொன்ற பரிசுத்தர்

எபேசியர் 2: 13 முதல் 22 வரையுள்ள வேத பகுதியை நாம் அறிவோம். நியாயப்பிரமாணம், வாக்குத்தத்தம், தேவ ஆராதனை இவைகளையெல்லாம் பெற்ற சுதந்திரவாளியாக ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள். இன்னொரு கூட்டத்தார் கிறிஸ்துவைச் சேராத காணியாட்சிக்குப் புறம்பான புறஜாதிகளாக இருக்கிறார்கள்.

இன்றைக்கும் இதுபோன்ற இரண்டுவிதக் கூட்டங்கள் இந்த உலகத்தில் இருக்கின்றன. இந்த இரண்டுபேரும் ஒருவரையொருவர் பகைக்கிறார்கள். ஒருவரையொருவர் சிநேகிக்கிறதில்லை. ஐக்கியப்படுகிறதில்லை. இரண்டு பேரும் பகையாளிகளாக வளருகிறார்கள். ஒரு கூட்டத்தார் தேவன் எங்களுக்குச் சொந்தம் என்கிறார்கள். இன்னொரு கூட்டத்தார் மாயையான உலகம்தான் எங்கள் சொந்தம் என்கிறார்கள். இந்த இரண்டு கூட்டத்தாரையும் தேவன் பார்த்தார்.

எபேசியர் 2:14-ல் *"அவரே நம்முடைய சமாதானக் காரணராகி இரு திறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து"*, **தனித்தனியாக இருந்தவர்களை, தேவன் ஒன்றாக்கினார் என்று எழுதப்பட்டிருக்கிறது.**

"அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" என்று எபே. 2: 18-ல் எழுதப்பட்டுள்ளது.

தேவனாகிய கர்த்தர் **முதலாவது** இரண்டுபேருக்கும் இடையே இருந்த பகையை இயேசு கிறிஸ்து மூலமாக ஒழித்துக்கட்டினார். **இரண்டாவதாக,** பழைய மனுஷனைக் களைந்து அவர்களைப் புதிய மனுஷனாக மாற்றினார். **மூன்றாவதாக** அவர்களை தேவனுக்கு முன்பாக ஒப்புரவாக்கினார். **நான்காவதாக** அவர்கள் எல்லாரையும் தேவனிடத்தில் சேருகிறவர்களாக மாற்றினார்.

இயேசு சிலுவையில் மரித்தார் என்பதை மட்டும் அறிந்தவர்கள் இந்தச் சத்தியங்களையும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

ஆகையால் நீங்கள் அந்நியர் அல்ல, பரதேசிகளுமல்ல. நீங்கள் தேவனுடைய பரிசுத்தவான்களாய் ஒரே நகரத்தாராய், தேவனுடைய வீட்டாராய் இருந்து தேவனுடைய வாசஸ்தலமாக ஒரே ஆவியினாலே கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (வ.22)என்று வேதம் கூறுகிறது.

உலகமெங்கிலும் உள்ள தம்முடைய ஜனத்தை ஒரே ஆவியினால் கூட்டிக் கட்டி மாளிகையைப் போல எழுப்புவது எளிதான காரியமல்ல. இது மனிதனாலோ மனித பெலத்தினாலோ செய்யவே முடியாது. இரு திறத்தாரையும் இப்படி ஒப்புரவாக்க தேவனால் மட்டுமே முடியும்.

இன்றைக்கு, துப்புரவு செய்வதற்கு எந்திரங்கள் ஏராளம் வந்துவிட்டன. ஆனால் ஒப்புரவு உண்டாக்க ஒரு எந்திரமும் இல்லை. இயேசு மாத்திரமே. இயேசுவே சமாதானக் காரணராயிருக்கிறார்.

எலும்புகள் நடுவே எசேக்கியேல்

மனித பெலத்தினால் மனித அதிகாரங்களினால் செய்யமுடியாததை தேவன் செய்ய வல்லவர் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக தேவன் எசேக்கியேலை எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கிற்குக் கொண்டு போனார்.

பள்ளத்தாக்கில் பாளயமிறங்கின எசேக்கியேலுக்குத் தலையும் காலும் புரியவில்லை. மண்டை ஓடுகளும் உலர்ந்துபோன எலும்புகளும் ஏராளமாய்க் கிடந்த அந்தப் பள்ளத்தாக்கைப் பார்த்தவுடன் எசேக்கியேலுக்கு மயக்கமே வந்திருக்கும். எப்படியோ சமாளித்துக் காலூன்றி நின்றிருப்பார்.

எசேக்கியேல் 37-ம் அதிகாரத்தின் ஆரம்பப் பகுதியைக் கொஞ்சம் எட்டிப்பாருங்கள். உங்களுக்கும் தலை சுற்றும். முதல் ஐந்து வசனங்களை வாசித்தால், அங்கே வெறும் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கு

ஆண்டவர் எசேக்கியேலைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். இந்த எலும்புகள் உயிரடையுமா? ஆண்டவரே அது உமக்கே தெரியும். என்னுடைய அறிவின்படி இந்த எலும்புகள் இன்னும் உடைந்து நொறுங்குமே தவிர, ஒன்று சேரவோ உயிரடையவோ முடியாது என்று சொல்லியிருப்பார். இவைகளை இணைக்கவும் முடியாது. சதைகளெல்லாம் அழுகி நாற்றமெடுத்து காய்ந்து கருவாடாகிப் போனபின், எலும்புகளுக்குச் சதையும், நரம்புகளும், இரத்தமும் எங்கிருந்து உண்டாகும்? எல்லாம் உலர்ந்து போயிற்றே!

உரம் தயாரிப்பதற்கு வேண்டுமானால் இந்த எலும்புகள் பயன்படலாம், ஆனால் உயிரடையுமா என்பது எனக்குத் தெரியாது என்பதுபோலப் பேசிக்கொண்டிருந்தார். ஆண்டவர் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கடுத்து என்ன நடந்தது என்பதைத் தொடர்ந்து வாசியுங்கள். கர்த்தர் கற்றுக்கொடுப்பதில் வல்லவர்.

எழும்பிப் பிரகாசித்த எலும்புகள்

கர்த்தர் எசேக்கியேலைப் பார்த்து:

'நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து,
அவைகளைப் பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்;
உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.
கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி; இதோ, நான்
உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன்,
அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச்
சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத்
தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்;
அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று
அறிந்துகொள்வீர்களென்று உரைக்கிறார்" என்று சொல் என்றார்"
(எசே.37:4-6).

பிரசங்கிக்க வேண்டிய வார்த்தைகளைப் பெற்றுக் கொண்ட எசேக்கியேல் அப்படியே தீர்க்கதரிசனம் உரைத்து பிரசங்கித்து முடித்தார். மயான அமைதி நிலவுமிடத்தில் பிரசங்கிப்பது மிகவும் கடினம்.

எழுப்புதல் பிரசங்கியார் எசேக்கியேல்

எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் முன்பாகப் பிரசங்க பீடம் அமைத்து எசேக்கியேல் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். அப்போது பள்ளத்தாக்கிற்குள் கிடந்த எலும்புகளுக்கு மத்தியில் ஒருவித இரைச்சல் (Rattling Noise) உண்டாயிற்று. அதைத் தொடர்ந்து அசைவுண்டாயிற்று. பின்னர் எலும்புகள் எழும்பிப் பிரகாசிக்கத் தொடங்கின. "*ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொண்டது*" (எசே.37:7).

இதோடு நின்றுவிடவில்லை. எசேக்கியேல் பார்த்துக்கொண்டிருந்தபோது சரியாக, தன் தன் எலும்புகளோடு ஒன்று சேர்ந்தபின் ஏராளமான எலும்புக் கூடுகள் அந்தப் பள்ளத்தாக்கில் நின்றுகொண்டிருந்தன. பின்னர் அவைகள்மேல் நரம்புகளும், மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது.

அதற்கும் ஆண்டவர் எசேக்கியேலுக்குக் கற்பித்து என்ன பேசவேண்டும் என்று போதித்தார். பின்னர் அவைகளுக்குள் ஆவி பிரவேசித்தது. இப்போது எலும்புக் கூடுகள் உயிரடைந்து காலூன்றி நின்றன. அவைகள் மகா பெரிய சேனையாய் நின்றார்கள் என்று 10-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

இதுபோல இந்த உலகத்தில் எந்தவொரு மருத்துவக் கல்லூரியிலும், அங்கு பயிலும் மாணவர்களுக்குப் போதித்துக் காண்பிக்க எந்த மருத்துவராலும் முடியவே முடியாது. இதுவும் தேவனால் மட்டுமே முடியும்.

பள்ளத்தாக்கில் ஓர் நூதன வைத்தியசாலை

ஆவியானவர் இந்த எலும்புகளுக்கு மேல் வந்து அசைவாடும் வரைக்கும் அந்தப் பள்ளத்தாக்கே கதி என்று அவை சிதறிக்கிடந்ததை நாம் அறிவோம். "உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்'' (ஏசாயா 32:15) என்று எழுதப்பட்டிருக்கிறதை வாசித்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

சில காரியங்கள் போட்டது போட்டதுபோலவே கிடக்கும். ஒன்றுமே செய்யமுடியாது என்பதுபோல காணப்படும். ஆனால் அதன்மேல் ஆவியானவர் அசைவாடுவாரானால் காரியங்கள் ஜெயமாய் மாறும். தேவனுடைய ஆவி அந்த உலர்ந்த எலும்புகளை உயிரடையச் செய்தது. உயிரடையச் செய்தது மாத்திரமல்ல ஒரு பெரிய சேனையாய் எழும்பி நிற்கச்செய்தது. இது மனுஷரால் ஒருபோதும் செய்யக்கூடாதது. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல ஆவியினாலேயே ஆகும்" என்ற வார்த்தையின்படி, இந்தக் காரியத்தை தேவனே தமது வல்லமையினால் செய்துமுடித்துவிட்டார்.

மருத்துவமனைகளில் எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் எடுக்கிறார்கள், இன்னும் பரிசோதனைகள் பல செய்கிறார்கள். ஆனால் ஒவ்வொன்றிலும் அந்தந்த வியாதியஸ்தரின் பெயர்களை எழுதிவைக்கிறார்கள். இல்லையென்றால் எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் எடுத்தபின்னர் பெயர்கள் குழம்பிப்போய்விடும். யாருடைய எலும்பு என்று கண்டுபிடிக்கவே முடியாது. அதோடு மாத்திரை மருந்துகள் மாறிப்போய், ஆபரேஷன்கள் மாற்றிச் செய்யப்பட்டுவிடும். இதன் முடிவு மருத்துவமனையே ஒரு பெரிய கண்ணீரின் பள்ளத்தாக்காக மாறிப்போகும்.

எலும்புப் பள்ளத்தாக்கில் எலும்புகள் சிதறிக் கிடந்தபோது அதில் எந்தவித எழுத்துக் குறிப்புகளோ அடையாளங்களோ இல்லை. ஊரும் பெயரும் இல்லை. ஆனால் ஆவி அந்த எலும்புகளுக்குள் உட்பிரவேசித்தபோது அவைகள் உயிரடைந்தது மாத்திரமல்ல. ஒரு மாபெரும் சேனையாக

நின்றன. இதெல்லாம் ஆவியினாலேயே ஆகும் என்பதை தேவன் எசேக்கியேலுக்கு மட்டுமல்ல, உலகமெங்கிலும் உள்ள தமது பிள்ளைகளுக்கு இதை வைத்து இன்றைக்கும் பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்.

மருத்துவக் கல்லூரிகளில் மனித உடல்கூறு அமைப்புகளைப் பற்றிப் படிக்கும் பிரிவை அனாட்டமி (Anatomy) என்பார்கள். தேவன் அன்றைக்கு அந்தப் பள்ளத்தாக்கில் அனாட்டமி பாடம் நடத்தியதைப்போலிருந்தது. மருத்துவக் கல்லூரி மாணவர் போல எசேக்கியேல் கண்களை அகலமாக்கிக் கற்றுக்கொண்டார்.

தேவன் கற்றுக்கொடுத்ததுபோல உலகில் உள்ள எந்த மருத்துவக் கல்லூரிகளிலும் யாராலும் கற்றுக்கொடுக்கமுடியாது. உலர்ந்த எலும்புகளைப் பதப்படுத்தி வைத்து, இதுதான் கழுத்து எலும்பு, இதுதான் காலர் எலும்பு என்பாரர்களேயன்றி அதற்குமேல் சதையையோ நரம்புகளையோ உண்டாக்கி ஒட்டவைத்துச் செயல்படவைக்க எந்தவொரு மருத்துவராலும் முடியாது. பலத்தினாலோ பராக்கிரமத்தினாலோ இதைச் செய்ய முடியாது.

வழிநடத்தும் வல்ல தேவன்

வேதம் சொல்கிறது: "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே.2:22). நாம் யார் என்பதை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். நாம் தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறவர்கள். ஆண்டவர் வாசஸ்தலத்தை இந்த உலகத்திலே கட்டுகிற வேளையிலே, 430 வருடங்கள் அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களைக் கூட்டிக் கட்டினார் அல்லது வனாந்தரத்தில் வழிநடத்திச் சென்றார் என்றுகூடச் சொல்லலாம்.

"அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" (யாத்.25:8) என்று கர்த்தர்

மோசேயிடம் கூறினார். இஸ்ரவேல் ஜனங்களை தேவன் தமது வல்லமையான கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் விடுதலையாக்கினார். பகலிலே மேகஸ்தம்பம், இரவிலே அக்கினிஸ்தம்பம் அனைத்துமே இலவசம். எந்தவொரு தேசமும் தன் குடிகளை இப்படிப் பாதுகாக்க முடியாது. தேவன் அப்படியாய் அருமையாய் அவர்களை வழிநடத்தினார்.

அந்த 40 வருடக் காலக்கட்டத்தில் அவர்களுக்கு நம்மைப்போல எலக்ட்ரிக் பில், டெலிபோன் பில், வீட்டுவரி, தொழில் வரி, கலால் வரி என்று எந்த வரியும் கட்டவேண்டியதில்லை, கொடுத்துவைத்தவர்கள் என்று சொல்வார்களே அவர்கள்தான் இந்த இஸ்ரவேலர்கள். விதைக்கவோ அறுக்கவோ வேண்டியதில்லை. ஒரு நயா பைசா செலவில்லாமல் தேவன் அவர்களை நடத்தினார். வனாந்தரத்தில் அத்தனை இலட்சம் மக்களின் தேவைகளையும் தேவனே சந்தித்தார். அவர்களுக்காக அவரே யுத்தம்செய்தார், எதிரிகளின் கையினின்று பாதுகாத்தார், தேவன் சகல நன்மைகளையும் கொடுத்துக் கொண்டேதான் வந்தார்.

இவ்வளவு சவரட்சணையும் சலக்கரணையும் செய்துகொண்டு வழிநடத்திவந்த தேவன், நான் அவர்கள் நடுவிலே வாசம்பண்ண ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணு என்று மோசேக்குச் சொன்னார். அவருக்கென்று ஒரு வாசஸ்தலம் அங்கே இல்லாதிருந்ததைக் கவனியுங்கள்.

வழிநடத்தும் தேவன் எங்கே உலாவுகிறார்?

அருமையான தேவ ஜனமே, தேவன் உங்களை நடத்தலாம், ஆச்சரியமாக உங்கள் தேவைகளைச் சந்திக்கலாம், அருமையாக உங்களுக்கு ஆலோசனைகளைத் தரலாம், உங்களுக்காக யுத்தம்கூடப் பண்ணி உங்களை விடுவிக்கலாம், அதிசயங்களும் அற்புதங்களும் ஏராளம் செய்ய லாம் இதெல்லாம் தேவன் உங்களோடு வாசம்பண்ணுகிறார் என்பதற்கு அத்தாட்சியுமல்ல, அடையாளமுமல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தேவன் வாசம்பண்ணுவது என்பது இவைகளுக்கெல்லாம் மேலான ஒரு காரியமாயிருக்கிறது. எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றிருப்பதால் தேவன் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்று நினைத்து நாம் ஏமாந்து போய்விடக் கூடாது. தேவன் நம்மைப் பயில்காட்டி அழைத்தார். தமது மிகுந்த கிருபையினால் இரட்சித்தார். எல்லையற்ற அந்த அன்பினால் நமக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறாரே அன்றி வேறல்ல. தேவன் தமது கிருபைகளின் திரட்சியினால் இவைகளைச் செய்கிறார்.

இயேசுவிடம் வந்து கெஞ்சி மன்றாடி குஷ்டரோகம் நீங்கும்படி வேண்டுதல் செய்த 10 குஷ்டரோகிகளைப்பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். இவ்வளவு பெரிய விடுதலையைப் பெற்றுக்கொண்டு இயேசுவை மறந்துவிட்டார்களே என்று சொல்லி இன்றைக்கும் அவர்களைத் திட்டித் தீர்த்துக்கொண்டிருக்கிறவர்கள் உண்டு.

இந்த அற்புத நிகழ்வில் இயேசு ஒரு பாடத்தை நமக்கும் கற்றுக்கொடுக்கிறார். நீங்களும் தேவன் தரும் நன்மையை மட்டும் பெற்றுக்கொண்டு அந்த நன்றியில்லாத 9 குஷ்டரோகிகள் போல உங்களை விடுவித்தவரை மறந்துவிட்டு ஊருக்குள்ளே உலகத்திற்குள்ளே போய்விடாதீர்கள். உங்களை விடுவித்த தேவனை மறந்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்பதே ஆண்டவர் கற்றுத்தரும் சிறப்புப்பாடம்.

இதற்கும் மேலாக உங்களைக் குறித்து தேவனுக்கு ஒரு நோக்கம் உண்டு. நன்மைகள் செய்த நல்லவருக்கு ஒரு ஆசை உண்டு. அது என்னவென்றால் உங்கள் நடுவிலே நான் வாசம் பண்ணவேண்டும் என்பதே அந்த விருப்பம்.

அந்த வாசஸ்தலத்தை நான் ஸ்தாபிக்கமாட்டேன். நீங்கள்தான் ஸ்தாபிக்கவேண்டும் என்றார். ஜனங்கள் இதற்காகப் பொன்னையும் பொருளையும் ஏராளமான ஆஸ்திகளையும் கொடுத்தார்கள். மோசே ஒரு பெரிய வாசஸ்தலத்தை உண்டாக்கினார்.

இப்பொழுது ஆண்டவர் அவர்களைப் பார்த்து "உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன். என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை" (லேவியராகமம் 26:11,12) என்கிறார்.

யாத்திராகமத்தில் நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குங்கள் என்று சொன்னவர், லேவியராக மத்தில் நானே ஸ்தாபிப்பேன் என்கிறார். லேவி. 26:12-ல் "நான் உங்கள் நடுவிலே உலாவி உங்கள் தேவனாயிருப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" என்றார்.

வாசம்பண்ணுவது, உலாவுவது - இரண்டும் ஒன்றல்ல

மனிதர்கள் வாசஸ்தலத்தை உண்டாக்கியபோது அந்தக் கூடாரத்தில் ஆராதனை மட்டும் நடந்தது. ஜனங்கள் பலி செலுத்தினார்கள். காணிக்கை கொண்டுவந்தார்கள். ஆனால் தேவன் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலே தேவன் உலாவுகிறவராய் இருக்கிறார். இரண்டு ஸ்தலத்திற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. நான் உலாவி வரும்போது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். தேவன் எப்படிப்பட்ட வாசஸ்தலத்தை உருவாக்க விரும்புகிறார்? அவர் உலாவுவதற்கு ஏற்ற இடம் எது? நம் கைகளால் கட்டிய இந்த ஆலயக்கட்டிடத்திலே அவருக்கு ஆராதனை செய்யலாமே தவிர, இது அவர் உலாவும் இடமாகாது.

ஆவியானவர் உண்டாக்கிக் கட்டி எழுப்புகிற வாசஸ்தலமோ தேவன் உலாவுவதற்காகவே என்பதை அறிந்துகொள்ளுங்கள். "தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது, நான் அவர்களுக் குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனா யிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்" என்று 2 கொரி.6:16-ல் ஆவியானவர் பரிசுத்தப் பவுலைக் கொண்டு எழுதிவைத்திருக்கிறார்.

தேவனுடைய ஜனங்கள் யார் என்று கேட்டால், உடனே ஞானஸ்நானம் எடுத்தவர்கள் என்று சொல்லிவிடுவார்கள். ஆராதனைக்குத் தவறாமல்

வருகிறவர்கள்தான் தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லுகிறவர்களும் உண்டு. உங்கள் கருத்துக் கணிப்பு தவறு. யாருடைய வாழ்க்கையில் தேவன் உலாவுகிறாரோ அவர்கள்தான் **தேவனுடைய ஜனங்கள்.**

சாலொமோனின் சாதனை

இந்த உலகத்திலே ஒரு பெரிய வாசஸ்தலத்தைக் கட்டியவர் சாலொமோன். தாவீதுக்கு ஆவியினாலே ஆண்டவர் வரைபடம் கொடுத்தார். தேவன் தனது தகப்பனுக்குக் கொடுத்த திட்டத்தின்படி மகன் சாலொமோன் ஆலயத்தைக் கட்டினார்.

"தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும் நீர் என்றென்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன் என்றும் சொன்னார்" (2 நாளா.6:2). எங்கள் தேவன் பெரியவர் மட்டுமல்ல எல்லா தேவர்களிலும் பெரியவர் என்று சொல்லி மகிமையைச் செலுத்தினார்.

நாமெல்லாம் சாதாரண மனிதர்கள்தான். நமக்கு ஒரு Bed Room இருந்தால் போதும். மிஞ்சிப் போனால் மூன்று ரூம் இருந்தால் போதும். ஆனால் சென்னையில் கவர்னர் மாளிகைக்குப் போனால் எத்தனையோ பெட் ரூம்கள் இருக்கும். ஏனென்றால் நம்மைவிட கவர்னர் பெரியவர். டெல்லிக்குப் போனால் கவர்னரைவிடப் பெரியவரான ஜனாதிபதிக்கு ஒரு மாளிகை இருக்கிறது. அந்த ராஷ்ட்ரபதி பவனில் இன்னும் அநேக ரூம்கள் இருக்கும்.

ஐம்பது லட்சத்து எழுபது கோடி ரூபாய்!

இது யாரோ செய்த ஊழல் என்று எண்ணிவிடாதீர்கள். சாலொமோன் பெரிய ஆலயத்தைக் கட்டினாரல்லவா? 1 நாளாகமம் 22 : 14, 29:4,7 வசனங்களை வாசித்துப் பார்த்தால் அது எவ்வளவு பெரிய ஆலயம் என்பது உங்களுக்குத் தெரியும்.

இதற்காகத் தாவீது பொன்னையும், வெள்ளியையும் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான எல்லாவற்றையும் சேமித்து வைத்திருந்தார்.

தாவீது கொடுத்த காணிக்கை, ஜனங்கள் கொடுத்த காணிக்கை எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்குப்பார்த்தால் 5092 டன் பொன்னை இவர்கள் எல்லாரும் கொடுத்திருக்கிறார்கள் என்று வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள். 3950 டன் வெள்ளியைக் கொடுத்திருக்கிறார்கள். இந்நாட்களில் ஒரு லாரியில் டன் கணக்கில் இரும்பை வைத்துக் கட்டி எடுத்துச்செல்வார்களே அதுபோல தங்கக் கட்டிகளை வைத்துக் கட்டி எடுத்துச்சென்றிருப்பார் என்று நினைக்கிறேன்.

எங்களது ஆலயத்தைக் கட்டுகிற வேளையில் அஸ்திபாரத்திற்காகத் தோண்டப்பட்ட பள்ளத்தை நிரப்புவதற்காக 100 லாரி மண்ணைக் கொட்டியிருக்கிறோம். அப்போது ஒரு லாரி மண் வெறும் 80 ரூபாய் மட்டுமே. அதை வாங்குவதற்குள் நாங்கள் பட்ட பாடு பெரும்பாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் சாலொமோன் ஆலயம் கட்டியபோது மண்ணைப் போல பொன்னைக் கொண்டுபோயிருக்கிறார்.

எருசலேம் ஆலயத்தைக் கட்ட அன்றைக்கு ஜனங்கள் கொடுத்ததை இன்றைய ரூபாய் மதிப்பில் உங்களுக்கு எழுதியுள்ளேன். இந்திய அரசாங்கம் பட்ஜெட் தயாரித்து பார்லிமென்ட்டில் அறிவிக்கும்போது இப்படியெல்லாம் கோடிகளைப் பற்றித் தொலைக்காட்சியில் வாசிக்கக் கேட்டிருப்பீர்கள்.

கோடான கோடி ரூபாய் மதிப்பில் பிரமாண்டமான ஆலயம் கட்ட அனைத்தும் ஆயத்தமாய் வைக்கப்பட்ட வேளையில் ஆலயத்தின் முன் நின்றுகொண்டு சாலொமோன் சொல்கிறார்: *"எங்கள் தேவன் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர்; ஆகையால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரியதாயிருக்கும், வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க, அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? அவர் சந்நிதியில்*

தூபங்காட்டுகிறதற்கேயொழிய, வேறே முகாந்தரமாய் அவருக்கு ஆலயம் கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்?"

தூபங்காட்டுகிறதற்கு மட்டும்தான் என்றால் உலாவுவதற்கு?
சிந்தியுங்கள்!

சாலொமோன் தனது பலத்தினாலே, பணத்தினாலே, பராக்கிரமத்தினாலே, வெள்ளியினாலே, பொன்னினாலே, அதிகாரத்தினாலே ஞானத்தினாலே ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டினார். **இந்த ஆலயம் தேவன் வாசம்பண்ணுவதற்கு அல்ல. தேவனுக்குத் தூபங்காட்டுவதற்குத்தான்** பயன்பட்டிருக்கிறது. இன்னொரு விதத்தில் சொன்னால் தேவனை ஆராதிப்பதற்காகவே ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்த உலகத்திலே எவ்வளவு பெரிய உயரமான அழகான ஆலயங்களைக் கட்டினாலும் அவைகள் தேவன் வாசம்பண்ணுவதற்குக் கட்டப்படுகிற ஆலயங்கள் அல்ல என்பதை மனதில் கொள்ளுங்கள். தேவனை ஆராதிப்பதற்கு, துதி செலுத்துவதற்கு, தேவனுக்கு மகிமையைச் செலுத்துவதற்குத்தான் அவைகள் கட்டப்படுகின்றன.

அடிப்படை வசதிகூட இல்லாத சில கிராமங்களில் கட்டப்பட்டுள்ள தேவ ஆலயங்களில் அறுவடைக் காலங்களில் நெல் மூட்டைகளையும், மழைக் காலங்களில் மாட்டுத் தீவனங்களையும் சேமித்து வைத்திருப்பார்கள். அது தவறு.

ஆலயம் ஆராதிப்பதற்கே அன்றி, குடியிருப்பதற்கோ, அல்லது சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவதற்கோ அல்ல என்ற ஒரு கொள்கையை வைத்துக்கொள்ள வேண்டும். ஆலயத்திற்குள்ளே வியாபாரமோ வியாபார நோக்கமோ இருக்கக்கூடாது.

"நான் என் பரிசுத்த பர்வதத்திற்குக் கொண்டு வந்து; என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்" (ஏசாயா 56:7) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

வியாபாரம் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அந்த எருசலேம் தேவாலயத்தில் இயேசு செய்ததை மறந்துவிடக்கூடாது. சாட்டையைப் பயன்படுத்தும் காரியத்தில் *"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"* (எபிரெயர் 13:8).

எனவே ஆராதிப்பதற்கும் துதிப்பதற்கும் சபை கூடிவருவதற்கு மட்டுமே ஆலயத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை எப்போதும் மனதில் வைத்திருக்கவேண்டும்.

ஆவியானவர் வாசம்பண்ணுவதற்கு வாசஸ்தலத்தை உண்டுபண்ணுகிறார் என்று பவுல் நிருபத்தில் எழுதுகிறார். இதை மனுஷனால் உண்டாக்கமுடியாது. தேவனுடைய வாசஸ்தலத்தை ஆவியானவரால் மட்டுமே உருவாக்க முடியும்.

இந்த வேத புத்தகத்திலே தேவன் உலாவினார் என்று சொல்லுகிற முதல் இடம் எது என்று கேட்டால், ஏதேன் தோட்டம் என்று உடனே சொல்லிவிடுவோம். சரி. ஆண்டவர் எங்கே இருந்தார்? பரலோகத்தில் இருந்தார். ஆனால் எங்கே உலாவினார்? தோட்டத்தில் உலாவினார்.

உலாவுவேன் என்றால் என்ன? நான் வாசம்பண்ணி உலாவுவேன் என்கிறாரே, உலாவுவதற்கு முன்பாக ஆண்டவர் அந்த இடத்தில் வாசம்பண்ணி இருக்க வேண்டுமே! அந்தத் தோட்டத்தில் வாசம் பண்ணாமல் அவர் உலாவமுடியாதே!

முதலாவது ஆண்டவர் அந்தத் தோட்டத்தைத் தன் வாசஸ்தலமாக மாற்றினார். பின்பு உலாவத் தொடங்கினார். *"இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது"* (வெளிப்படுத்தல் 21:3) என்று எழுதப்பட்டிருக்கிறதைக் கவனித்துப்பாருங்கள்.

நாங்கள் சில வேளையில் காலையில் வாக்கிங் போய்விட்டு, காற்று வாங்க மனிதர்கள் இருக்கும் இடமாய்ப் போவோம். ஆண்டவர் உலாவப்போகிறார் என்றால், கை, கால் வலிக்காகவோ சர்க்கரை

வியாதிக்காகவோ உலாவப் போவதில்லை. மனிதர்களாகிய நமக்குத்தான் உடற்பயிற்சி தேவை. கர்த்தர் ஏன் உலாவுகிறார் என்றால், அங்கே மனிதன் இருக்கிறான். மனிதர்கள் மத்தியிலே தம்முடைய வாசஸ்தலத்தை ஸ்தாபித்து அங்கே உலாவுகிறார்.

ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சக் கனி இருக்கிறதினா லேயோ, உலகத்தில் உள்ள எல்லா கனிகளும் இருக்கிறதினாலேயோ உலாவுவதற்கு ஏதேன் தோட்டத்தை தேவன் தெரிந்தெடுக்கவில்லை. அங்கே மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் அதை தெரிந்துகொண்டார், இதைப் புரிந்துகொள்ளுவது நல்லது.

முதல் மனிதனின் மூளை ஒரு சூப்பர் கம்ப்யூட்டர்

தோட்டத்தில் எல்லாவற்றையும் தேவன் உண்டாக்கிவிட்டார். அப்போது ஆதாம் மட்டும்தான் இருந்தான். நிறைய மிருகங்கள் இருந்தன. ஆண்டவர் எல்லாவற்றையும் கொண்டுவந்து ஆதாம் முன் நிறுத்தி, நீயே எல்லாவற்றிற்கும் பெயரை வைத்துவிடு என்றார்.

எசேக்கியேல்போல, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர், எனக்கு பயமாக இருக்கிறது என்றெல்லாம் சொல்லாமல் துணிவுடன் பெயர் சூட்டக் களமிறங்கி எல்லாவற்றுக்கும் பெயர்வைத்து முடித்துவிட்டான். ஆதாம் கையில் பெயர்ப் பட்டியல் ஏதுமில்லை. அன்றைக்கு ஒவ்வொன்றுக்கும் என்ன பெயர் வைத்தானோ அதுவே இன்றைக்கும் மாறாமலிருக்கிறது.

இத்தனை விலங்குகளுக்கும் ஜீவராசிகளுக்கும் ஞானமாய் பெயர் வைத்தவன், தனது வாய்க்குள்ளே போகிற காரியத்தைக் குறித்து கவனமில்லாமல், ஞானமில்லாமல் இருந்துவிட்டானே! ஏவாள் தனது கையில் ஒரு கனியைப் பறித்துக்கொண்டு தன்னிடம் வந்தபோது இது விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியா? இதை எங்கே பறித்தாய்? தேவனுடைய கட்டளையை நாம் மீறக்கூடாது என்பதை அறிவாயா?

என்றெல்லாம் ஞானமாய்ப் பேச மறந்துவிட்டான். அதனால் மாபெரும் ஆத்தும மரணத்தில் விழுந்துவிட்டான்.

உலகக்காரியங்களில் மிகவும் கவனமாய் இருந்துவிட்டு கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்வதில் அசதியாய் இருந்துவிடக்கூடாது.

4

ஆவியினாலே உண்டான இரத்தம்

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்".

(1 பேதுரு 2:5).

4. ஆவியினாலே உண்டான இரத்தம்

ஆதாமை தேவன் மண்ணினாலே உண்டாக்கினார். மாம்சம், தோல், எலும்பையும் மண்ணினாலேயே உண்டாக்கினார். ஆதாம் என்கிற மண் சிற்பம் அல்லது சிலை, திறப்பு விழாவுக்கு ஆயத்தமாகிவிட்டது. இப்போது இந்தச் சிலைக்கு என்ன தேவை? உயிர் இருந்தால் மனிதனாகிவிடும். இல்லையென்றால் உருவச்சிலை.

ஆண்டவர் இந்தச் சூழ்நிலையில் ஆதாமின் நாசியில் தமது ஜீவ சுவாசத்தை ஊதினார். உடனே அவனுக்கு ஜீவன் வந்துவிட்டது. மனிதனுடைய ஜீவன் அவனுடைய இரத்தத்திலே இருக்கிறது.

ஆதாமின் இரத்தம் எந்தவொரு அப்பாவினாலோ அம்மாவினாலோ உண்டானதல்ல. **முற்றிலும் அவனது இரத்தம் ஆவியினாலே ஆனது**. முதல் மனிதனின் முதல் இரத்தம் ஆவியினாலே உண்டாயிற்று

ஆவி வாசம்பண்ணினால் உலாவும். நமக்கெல்லாம் கை, கால், கண், கிட்னி எல்லாம் இருக்கிற இடத்திலேயே இருக்கும். ஆனால் இந்த இரத்தம் இருக்கிறதே அது இருக்கிற இடத்தில் இருக்காது. அப்படியிருந்தால் ஆளே இருக்கமாட்டான். அதன்பின் என்ன? அடக்க ஆராதனைதான். எனவே இரத்தம் உலாவிக்கொண்டே இருக்கும்படி படைக்கப்பட்டது.

மனிதனுடைய உச்சந்தலை முதல் கால்களின் விரல் நுனி வரை உலாவிக்கொண்டே இருக்கும். இதை இரத்தம் என்று சொல்வதைக் காட்டிலும் தேவனுடைய ஆவி மனிதனுக்குள்ளே வந்தது என்று சொல்லலாம். அதனாலே அவன் ஞானமுள்ளவனாய் மாறிவிட்டான். தேவ ஞானத்தினால் நிறைந்திருக்கிறான்.

உலகத்திலே எத்தனையோ கோடிக்கணக்கான மிருகங்கள் பறவைகள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் அவன் வரிசையாய்ப் பெயர் வைத்தான். இது தேவன் மனிதனுக்குக் கொடுத்த ஆளுகையைக் குறிக்கிறது.

நானும் 45 வருடங்களாய் ஊழியம் செய்துகொண்டிருக்கிறேன். சிலர் குழந்தையைக் கையில் கொடுத்து பாஸ்டர் நீங்களே பெயர் வைத்துவிடுங்கள் என்பார்கள். பத்து நிமிடம் யோசித்தால்தான் பெயர் வரும். எப்படியானாலும் ஏற்கனவே வைத்த பெயர்கள்தான் பெரும்பாலும் திரும்பத் திரும்ப வைக்கப்படும்.

ஆனால் ஆதாம் வரிசையாக, சளைக்காமல் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் ஜீவ ராசிகளுக்கும் புதுப் புதுப் பெயரை வைத்துக்கொண்டே இருந்தான். இது எப்படி ஆயிற்று? அவனுக்குள் உலாவிக்கொண்டிருந்த ஆவியானவராலே ஆயிற்று.

ஏவாளை எப்படி சிருஷ்டித்தார்?

ஆண்டவர் ஆதாமைப் பார்த்தார். அவனோ அனைத்திற்கும் பெயரை வைத்துக் களைத்துப்போய் உட்கார்ந்திருந்தான். ஒரு கப் காபி கொடுக்க அவனுக்குத் துணை யாருமில்லை. அடிக்கடி வாலை ஆட்டிக் கொண்டிருக்கிற **நாய்** அந்த வேலையைக் செய்யமுடியாது. மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று தேவன் எண்ணினார். அதற்காக உடனே ஒரு களிமண்ணை எடுத்து பொம்மையாக உருவாக்கி ஒரு பெண்ணைப் படைக்க அவரிடத்தில் ஆவி இருந்தது. ஆனால் கர்த்தர் களிமண்ணை எடுக்கவில்லை.

ஆதாமுக்கு மயக்கமருந்து கொடுக்காமலேயே அயர்ந்து தூங்கவைத்துவிட்டார். அந்த அயர்ந்த நித்திரையில் கத்தியின்றி, ரத்தமின்றி மேஜர் அறுவை சிகிச்சை ஒன்றைச் செய்து முடித்துவிட்டார். விலா எலும்பில் ஒன்றை எடுத்தார். நான் இதைக் குறித்து யோசித்துப் பார்த்தேன். ஆதாமிடம் இருந்த இரண்டு கண்ணில் ஒன்றை எடுத்து ஏவாளை உண்டாக்கியிருக் கலாமே! இரண்டு நுரையீரல்கள், இரண்டு சிறுநீரகங்கள் இவைகளில் ஒன்றை எடுத்து ஏவாளை உண்டாக்கியிருக்கலாமே!

ஏன் ஆண்டவர் அவனது கைகளிலோ கால்களிலோ கை வைக்காமல் விலா எலும்புகளுக்கு (man's ribs) ஊடே கை வைத்து ஒரேயொரு விலா எலும்பை எடுத்தார்? அப்போது ஏற்பட்ட இடைவெளியைச் சதையினால் நிரப்பினார். மனிதனுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாதவாறு அவனது எலும்புகளில் எங்கே எடுத்தால் அவனுக்கு பிரச்சனை ஏற்படாது என்பதை தேவன் அறிந்து அப்படிச்செய்திருக்கிறார். ஆனால் **ஏவாளோ ஆதாமுக்குப் பாதிப்பையும், பிரச்சனையையும் ஏற்படுத்திவிட்டாள். அவனது முழுச் சரீரத்திற்கே பாதிப்பை ஏற்படுத்திவிட்டாள்** என்று கூடச் சொல்லலாம்.

ஆண்டவர் ஏன் எலும்பை எடுத்து அதிலிருந்து ஏவாளைச் சிருஷ்டித்தார் என்று இன்னும் அதிகமாய் யோசிக்க ஆரம்பித்தேன். அப்போது எலும்பு

மருத்துவர்களிடம் தொலைபேசி மூலம் இதைக் குறித்து விசாரித்துக் கேட்டேன். எலும்பு என்ன செய்யும் என்று கேட்டேன். அவர்கள் சொன்னது என்ன தெரியுமா?

உங்கள் உடம்பில் இரத்தத்தை ஊறப்பண்ணுகிற இடம்தான் எலும்பு என்றார்கள். ஆதாமின் உடம்பில் ஓடுகிற கிறிஸ்துவின் இரத்தத்தை எடுத்து, அதே ஜீவனைக் கொண்டுதான் ஏவாளை உருவாக்கினார்.

ஆதாமுக்குள்ளே ஓடிய அதே இரத்தம் இப்போது ஏவாளுக்குள்ளே ஓடத்தொடங்கியது. ஆதாமை உண்டாக்கி நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதியதுபோல ஏவாள் என்ற ஒரு பொம்மையைச் செய்து அதன் நாசியில் தமது ஜீவ சுவாசத்தை ஊதியிருந்தால் ஆதாம் சீனியராகவும் ஏவாள் ஜூனியராகவும் உருவெடுத்திருப்பார்கள். தேவன் அந்த ஒரே இரத்தத்தினாலே அதாவது ஆதாமுடைய மாம்சம், எலும்பு, இரத்தம் இவைகளினால் ஏவாளை உண்டாக்கினார்.

மயக்கம் தெளிந்தபின் ஆதாமுக்கு முன் அவன் கண்விழித்தவுடன் பார்ப்பதற்காக ஏவாளை நிறுத்திவைத்திருந்தார். அவன் கண்களைத் திறந்து பார்த்தான். தேவனால் உண்டாக்கப்பட்ட முதல் பெண் நின்றுகொண்டிருந்தாள்.

ஆதாம் பிரசித்திபெற்ற தீர்க்கதரிசியாய் இருப்பானோ என்று எண்ணுமளவுக்கு அவனது உரையாடல் இருந்ததை நீங்கள் வேதத்தில் வாசிக்கலாம். இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனிதனிடமிருந்து எடுக்கப்பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்.

இதைக் கேட்ட ஆண்டவர் என்ன சொன்னார் என்றால்: "*இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்*" (ஆதியாகமம் 2:24) என்றார்.

முதன் முதலாக **இசைவு** அல்லது **இசைந்திருத்தல்** என்ற வார்த்தை எங்கே பிறந்ததென்றால் கணவன் மனைவி என்ற அமைப்பில், குடும்பம் என்ற ஒரு உறவை தேவன் ஏற்படுத்திய இடத்தில் பிறந்தது என்று சொல்லுவேன்.

ஒரு **புருஷனையும்** மனைவியையும் தேவன் இணைக்கிறார். அது மட்டுமல்ல இசைந்துவாழச் செய்கிறார். ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் தேவன் அங்கே உலாவினாராம். எங்கே?

தோட்டத்தில் என்று எண்ணிவிடாதீர்கள். தோட்டத்தில் இருந்தது மெய்தான். ஆனால் ஆதாம் ஏவாள் என்ற முதல் குடும்பத்தில் தேவன் வாசம்பண்ணினார் என்பதே நாம் அறிந்துகொள்ளவேண்டிய சத்தியம். அங்கே அவர்கள் நடுவில் உலாவினார்.

இந்த உலகத்தில் இசைந்திருக்கக்கூடியவர்கள் யார் என்றால் ஒரு கணவனும் மனைவியுமே என்று சொல்லுவேன். தேவன் இஸ்ரவேல் தேசத்திலும், இன்னும் மலைகளிலும், உயர்ந்த இடங்களிலும் வாசம் பண்ணுகிறார் என்று எண்ணி, பணத்தைச் செலவழித்துப் பறந்து சென்று தேடாதீர்கள். தேவன் வாசம்பண்ண விரும்புகிற இடம் உங்கள் குடும்பமே என்பதை மறந்துவிடாதீர்கள்.

கல்வி நிலையங்களிலும், ஆலயங்களிலும் ஊழிய ஸ்தாபனங்களிலும் வாசம்பண்ணுகிறார் என்று நினைத்து தேவ ஆலயங்களையும், கட்டிடங்களையும் பார்த்து கையெடுத்து வணங்காதீர்கள். எங்கே என் நாமத்தினாலே இரண்டு அல்லது மூன்று பேர் கூடியிருக்கிறார்களோ அல்லது ஐக்கியமாயிருக்கிறார்களோ அங்கே நான் வாசம்பண்ணுகிறேன் என்று கூறியிருக்கிறார்.

சின்னக் குடும்பம், சீரான குடும்பம்

சின்னக் குடும்பம் சீரான குடும்பம் என்று எழுதுகிறார்கள். இந்தச் சீரான குடும்பத்துக்குள்ளே ஒரு தோட்டம் இருக்குமானால் அது சிறப்பான குடும்பம் என்று எண்ணிவிடமுடியாது. சின்னக் குடும்பத்திற்குள்ளே தேவன் வாசம்பண்ணி அங்கே உலாவுவாரானால் அது சிறப்பான குடும்பமாக இருக்கும். இல்லையென்றால் அது சீரழிந்த குடும்பமாகிப் போய்விடும்.

அப்பத்தின் வீட்டில் இருந்த வரை எலிமலேக்கு- நகோமி இவர்களது குடும்பம் ஒரு சின்னக் குடும்பமாக இருந்தாலும் சீரான குடும்பமாக இருந்தது. ஆனால் அவர்கள் அப்பத்தின் வீட்டை (தேவைகளைச் சந்திக்கிற தேவனை) விட்டுவிட்டு மோவாப் தேசத்திற்குப் போய் அங்கே செழிப்பாக வாழலாம், அங்கே பஞ்சம் இருக்காது, பசியும் பட்டினியும் இருக்காது என்று எண்ணினார்கள்.

அந்த தேசத்திலே பஞ்சம் இருந்தால் கூடப் பரவாயில்லை, ஆண் மக்கள் ஒருவர் கூட இல்லாதபடி, குடும்பமே சீரழிந்துபோனதே! இதை என்றைக்காவது யோசித்துப் பார்த்தீர்களா? நம்முடைய குடும்பம் சிறியதோ பெரியதோ அங்கே தேவன் வாசம்பண்ணவேண்டும், உலாவவேண்டும். அப்படியில்லையென்றால் அதைக்குறித்து யோசித்துப்பார்த்து சீர்படுத்த வேண்டியவைகளைச் சீர்ப்படுத்தவேண்டும்.

நமக்கெல்லாம் அப்பா, அம்மா இருக்கிறார்கள். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அப்பா அம்மா இல்லை, மாமனார், மாமியார், நாத்தனார், கொழுந்தனார் என்று யாருமில்லை. விடுதலையின் வீடு என்றுகூட சிலர் சொல்லுவார்கள். இன்றைக்கெல்லாம் இரட்சிக்கப்பட்டவர்கள் வீட்டில்கூட ஏகப்பட்ட பிரச்சனைகள் காணப்படுகின்றன. இவைகளில் பெரும்பாலும் உறவுப்பிரச்சனைகள், பணத்தினால் உண்டான பிரச்சனைகள்.

ஆனாலும் தன்னந்தனியாய்த் தங்கள் குடும்பத்தை, தேவனுடைய ஒத்தாசையோடு கட்டி எழுப்பிக்கொண்டிருந்தனர். சாத்தான் இதை

ஓரக்கண்ணால் பார்த்தான். இரண்டுபேரும் என்னமாய் ஐக்கியமாய் இருக்கிறார்கள்! இவர்கள் ஐக்கியமாய் இருக்கிறதினாலே தேவன் இவர்கள் நடுவில் வாசம்பண்ணி உலாவிக்கொண்டிருக்கிறார்.

இந்த இருவரையும் வட துருவம் தென் துருவம்போலப் பிரித்துவிட்டால் அவர் இங்கே வரவும்மாட்டார் உலாவவும்மாட்டார் என்று சதித் திட்டம் ஒன்றைத் தீட்டுவதற்கு மும்முரமாய்ச் செயலில் இறங்கினான்.

பிரித்து வேடிக்கை பார்க்கும் பிசாசு

பிரித்து அல்லது சமாதானத்தைத் திருடி வேடிக்கை பார்ப்பதில் பிசாசுக்குக் கொள்ளை ஆசை. நடைபெறும் 10 திருமணங்களில் 7 திருமணங்கள் விவாகரத்தை நோக்கிச் செல்வதாகப் பேசிக்கொள்கிறார்கள். நீதிமன்றங்களில் இத்தகைய வழக்குகள் நிரம்பி வழிகின்றன.

இதற்கெல்லாம் பிசாசானவனே பிரதானமான காரணமாயிருக்கிறான். அவனால் ஆதாமை உண்டாக்கவோ ஏவாளை உண்டாக்கவோ குடும்பத்தை ஏற்படுத்தவோ முடியாது. அவனே உண்டாக்கப்பட்டவனாயிருக்கும்போது அவனால் என்ன செய்யமுடியும்? சிருஷ்டிக்கத் தெரியாது. ஆனால் சிருஷ்டிக் கப்பட்ட எதையும் சின்னாபின்னமாக்கிப் பிரித்து வேடிக்கை பார்க்கத்தெரியும்.

மாஸ்டர் பிளான் பண்ணிக்கொண்ட பிசாசு நேரடியாகத் தோட்டத்தின் வெளியே, வேலிக்கு அருகில் நின்றுகொண்டு காரணமில்லாமல் அங்கே நின்றுகொண்டிருந்த ஏவாளிடம் பேசினான்.

ஏவாள் அவர்களே நீங்கள் மிகவும் நேர்த்தியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் கணவர் எங்கே? நிலத்தைப் பண்படுத்தப்போயிருக்கிறாரா? **கடினமாக உழைக்கும் அவரைப் புண்படுத்தாமல் நீங்கள் எப்போதும் சிரித்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களே!** அது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

உங்கள் மகிழ்ச்சியின் இரகசியத்தை மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன் என்று கள்ளத்தனமாய் பேசினான்.

சரி. உங்களோடு சில காரியங்களைப் பேசித் தெளிவுபடுத்த வேண்டும் என்றுதான் உங்கள் கணவர் இல்லாத நேரத்தில் வந்தேன் என்று பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான்.

பிசாசானவன் இருவரையும் தோட்டத்தை விட்டு வெளியே துரத்துவதற்கான எல்லா வேலைகளையும் செய்துமுடித்துவிட்டான். நன்றாய் இருக்கிற இடத்திலிருந்து துரத்தி, தான் கீழே தள்ளப்பட்டதுபோல தேவனால் படைக்கப்பட்ட மக்களைக் கீழே தள்ளித் துரத்தி தனக்காக நியமிக்கப்பட்ட பாதாளத்தை நிரப்பவேண்டும் என்பதே அவனது திட்டமாய் இருக்கிறது. இதற்காக ஓவர் டைம் எடுத்து வேலை செய்கிறான்(வெளி.12:12).

முதல் குடும்பத்தைத் தேவனைவிட்டுப் பிரித்த சாத்தான் இன்று வரை தொடர்ந்து அதே வேலையைச் செய்துகொண்டுவருகிறான். "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறொன்றுக்கும் வரான்" (யோவான் 10:10). "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்" என்று 1 பேதுரு 5:8-ல் எழுதப்பட்டுள்ளது.

"ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்" என்று வெளி.12:12ல் வாசிக்கிறோம். இந்தப் பிசாசானவன் ஏவாளை ஏதேன் தோட்டத்து வேலி ஓரமாய்ப் பேட்டி கண்டான்.

தோட்டத்திற்கு வெளியிலிருந்து பேசிய சாத்தானின் பேச்சுக்குப் பதில் கொடுத்து உரையாடலைத் தொடர்ந்த ஏவாள், அந்த உரையாடல் முடியும் போது அன்றையத் தினமே விலக்கப்பட்ட கனியைப் புசித்து ஆத்தும மரணம் என்னும் படுகுழியில் ஆதாமுடன் சேர்ந்து விழுந்துவிட்டாள்.

முதல் குடும்பத்தை, தேவனைவிட்டுப் பிரித்த சாத்தான், பல தந்திரங்களைக் கையாண்டு இன்று வரை தேவன் ஏற்படுத்திய குடும்பங்களில் களைகளை விதைத்து, தேவனுக்கு விரோதமாகச் சிந்தனைகளைத் தூண்டி, உறவுகளை உடைத்துப் பிரிவினை வேலையைச் செய்து வருகிறான். திருடனும் எதிராளியுமான இந்தப் பிசாசை இனம் கண்டு கொள்ளாமல் ஒருவரையொருவர் கடித்துப்பட்சிக்கும் குடும்பங்கள் ஏராளம். முதலாவது: தவறான **பேச்சுக்கு** ஏவாள் இடமளித்தாள், இரண்டாவது: தவறான **பார்வைக்கு** இடமளித்தாள். இவை இரண்டுமே சேர்ந்து ஏவாளைத் தடுமாறச் செய்து படுகுழியில் தள்ளிவிட்டன.

தவறான பார்வை அவள் கால்களைத் தோட்டத்துக்கு நடுவே விலக்கப்பட்ட விருட்சத்தை நோக்கி நடக்கச்செய்தது. **தவறான நடக்கை,** தொடக்கூடாததைத் தொட்டுப் பறிக்கச்செய்தது. அதனால் அதைப் புசிக்கத் தொடங்கினாள். தேவன் திட்டமாய்ச் சொல்லியிருந்தும் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தாள். **தவறான பேச்சு, பார்வை, நடக்கை, தொடுதல், ருசித்தல்** எல்லாம் ஒன்று சேர்ந்து, தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் குடும்பத்திலே பெரும் நஷ்டத்தையும் சாபத்தையும் உண்டாக்கிவிட்டன.

இன்றைக்கும் எத்தனையோ குடும்பங்களின் வீழ்ச்சிக்கு இவைகளே காரணங்களாயிருக்கின்றன. மோசம்போகாதிருங்கள் ஆகாத **சம்பாஷணைகள்** நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.

வேதம் சொல்வதைக் கவனியுங்கள்: "பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே, கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே.4:29) என்று பவுல் மூலம் பரிசுத்த ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார்.

உரையாடலுக்கு அப்படி நல்ல வார்த்தைகள் ஏதுமில்லையென்றால் பேசுவதை நிறுத்திக்கொள்வது நல்லது என்று நான் எண்ணுகிறேன். பக்திவிருத்திக்கு ஏதுவல்லாத வார்த்தைகள் உங்களை ஏமாற்றிவிடும், இறுதியில் படுகுழியில் தள்ளிவிடும். *"மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்"* (1கொரி.15:33).

ஏதேன் தோட்டத்தில் சில நிமிடங்கள்

இப்போது நீங்கள் ஏதேன் தோட்டத்தில் இருப்பதைப் போல நினைத்துக்கொள்ளுங்கள். நிலத்தைப் பண்படுத்திவிட்டு ஆதாம் புறப்பட்டு ஏவாள் இருந்த இடத்திற்கு வருகிறார். கணவனைப் பார்த்தவுடன் 'என் அன்புக் கணவரே உங்களுக்கு ஒரு அருமையான பழம் ஒன்றை வைத்திருக்கிறேன். இதோ பாருங்கள்' என்று ஏவாள் பேசத்தொடங்கினாள்.

சாத்தானைச் சந்திப்பதற்கு முன், கர்த்தரைப் பற்றி வர்ணித்துப் பேசியவள், சர்ப்பத்தின் சந்திப்பிற்குப் பின் அப்படியே அடியோடு மாறி, விலக்கப்பட்ட கனியைப் பற்றி வர்ணிக்கத் தொடங்கிவிட்டாள். பேச்சும், பார்வையும் மாறியதால் வர்ணனையும் மாறுகிறது.

ஆதாமும் ஏவாளும் ஒரே சரீரம்தானே, இதில் பாதிச் சரீரம் பழத்தைச் சாப்பிட்டுவிட்டது. இதைக் கேள்விப்பட்ட மீதிச் சரீரம் சங்கடப்பட்டதா? ஆதாம் அவளைக் கசந்தானா? திட்டினானா? அவன் அவளைக் கடிந்துகொள்ளவேயில்லை. காரணம் தகப்பனையும் தாயையும் விட்டு, அதாவது தன்னை உருவாக்கிய தேவனை விட்டு இப்போது மனைவியோடு இசைந்திருக்கிறான்.

செத்தால் இரண்டு பேரும் சேர்ந்தே சாவோம் என்று அவள் தந்த கனியை வாங்கி ஆதாம் புசித்துவிட்டான். இரண்டுபேரும் கீழ்ப்படியாமற்போய் சாபத்தைச் சுமந்தவர்களாகத் தோட்டத்தைவிட்டு வெளியே துரத்தப்பட்டார்கள். கீழ்ப்படியாமை என்ற குழியில் ஒருமனப்பட்டுக் குதித்தவர்கள்தான் ஆதாமும் ஏவாளும்.

கசந்து கொள்ளாத கணவன்

மாபெரும் சாபத்தைச் சம்பாதிக்கக் காரணமாயிருந்த தன் மனைவியை ஆதாம் சபிக்கவில்லை. **ஆதாம் ஏவாளைக் கசந்துகொண்டான்** அல்லது **கடிந்துகொண்டான்** என்று நீங்கள் வேதத்தில் எங்கும் வாசிக்க முடியாது.

"ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்" (ஆதியாகமம் 4:1).

மாம்சமும் இரத்தமும் பிரிக்க முடியாத உறவுக்குள்ளே தேவன் அவர்களை வைத்தார். தேவன் தெரிந்துகொண்ட பிள்ளைகள் ஆதாம் ஏவாள் சந்ததியிலே வந்தனர். தேவன் அவர்களைத் தள்ளிவிடவில்லை. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஆபேலின் காணிக்கையை, தேவன் தள்ளிவிடவில்லை. இந்தச் சந்ததியில் இயேசு வந்தார் என்று லூக்கா எழுதிய நற்செய்தி நூலில் வாசிக்கிறோம் (லூக்கா 3: 23-38). தேவன் கிருபையுள்ளவர்.

சின்னச் சின்னக் காரியங்களுக்கெல்லாம் கணவனும் மனைவியும் இந்நாட்களில் பிரிந்துபோகிறார்கள். ஆதாமும் ஏவாளும் அதுபோலப் பிரிந்து போகவே இல்லை. காரணம் அவர்களுக்குள் ஓடுகிற இரத்தம் அவர்களை அப்படி இணைத்திருந்தது. தேவன் ஆவியாய் இருக்கிறார் என்று மாத்திரமல்ல, தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும் எழுதப்பட்டுள்ளது.

ஏவாள் தன்னிடம் ஆலோசனை கேட்காமல் தோட்டத்திற்கு வெளியே இருந்த சாத்தானோடு பேசி ஏமாற்றமடைந்து, தேவனுடைய தோட்டத்தை இழந்து, தேவனுடைய பிரசன்னத்தை இழந்து நின்றபோதிலும் ஆதாம் அவளை நேசித்தான். விலைமதிக்க முடியாத அந்த மகிமையான கர்த்தரின் தோட்டத்தை, தேவனுடைய அன்பை, பிரசன்னத்தை ஆதாம் இழக்கக் காரணமாயிருந்தவள் ஏவாள்தானே! அத்தனை நஷ்டமும்

அவளாலேதான் வந்தது! நான்கு பெரிய நதிகளுக்கு நடுவே ராஜாவைப் போல வாழ்ந்தவன் இப்போது வெளியே துரத்தப்பட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழ, பாடுபடுகிறவனாய் மாறிப்போனான்.

ஒரு மனிதன் எதை வேண்டுமானாலும் இழக்கலாம் ஆனால் தேவ மகிமையை இழக்கக்கூடாது. இவனோ தேவ மகிமையை இழந்தான். ஆனால் எதுவும் அவர்கள் இருவரையும் பிரிக்கவில்லை. **உன்னாலே நான் கெட்டேன், உன்னாலேதான் என் மகிமையெல்லாம் போனது, இனி உனக்கும் எனக்கும் என்ன, நான் பிரிந்துபோகிறேன்** என்றெல்லாம் ஆதாம் பேசத்துணியவில்லை.

"மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோமர் 5:5) என்று எழுதப்பட்டுள்ளதைக் கவனித்துப்பாருங்கள்.

கிறிஸ்து நம்முடைய ஜீவனாய் இருந்தால் மட்டுமே சாவு ஆதாயமாக இருக்கும். கிறிஸ்து என்னுடைய ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் சவால் விட்டுச் சொன்னார்.

அருமையான தேவ பிள்ளையே, உங்கள் அன்பும் நேசமும் இயேசுவைப் போல இருக்கட்டும். உங்கள் பார்வையும் சிந்தனைகளும் இயேசுவைப் போலவே இருக்கட்டும். நீங்களும் நானும் ஒரே இரத்தத்தினால் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். எனவே அது சகோதரப் பாசத்தை உண்டாக்க வேண்டும். பாவத்தையோ பிரிவினையையோ உண்டாக்கக் கூடாது.

வேதம் சொல்கிறது; *"மனிதஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத் தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லை களையும் குறித்திருக்கிறார்"* (அப்.17:26) என்று வாசிக்கிறோம்.

ஒரே இரத்தத்தினாலே நம்மைத் தோன்றப்பண்ணினார்; அப்படிப்பட்டவர்கள் சேர்ந்து இருக்கிற அல்லது வாழ்கிற இடத்தில்தான் தேவன் வாசம்பண்ணுகிறார்.

நீங்கள் இருக்கிற அறையில், தொட்டுவிடும் தூரத்தில் இருக்கிற சுவரைக் கொஞ்சம் தொட்டுப் பாருங்கள். கொத்தனார் அந்தச் சுவரை அழகாகப் பூசிவிட்டார், பெயிண்டர் அழகாகப் பெயிண்ட் அடித்துவிட்டார்.

ஆனால் அதற்குள்ளே அநேகச் செங்கல்கள் குறுக்கும் நெடுக்குமாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. உடைந்த சில செங்கல் துண்டுகள் அதற்குள்ளே இருக்கின்றன. அந்தச் செங்கல்கள் அனைத்தையும் இணைக்க சிமெண்ட் இருக்கிறது. சிமெண்டையும் மணலையும் சேர்த்துக் குழைத்துப் பூசிவிட்டார்கள். கலர் அடித்தவுடன் பார்ப்பதற்கு அழகாய்க் காட்சியளிக்கிறது. இதேபோல பல்வேறு அம்சங்களைக் கொண்ட நம்மை வைத்து, சபையைக் கட்டி, தமது இரத்தத்தினாலே பூசிவிட்டார்.

சத்தமே இன்றி கட்டப்பட்ட ஆலயம்

"ஆலயம் கட்டப்படுகையில் அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள், வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை" என்று 1 இரா. 6:7-ல் வாசிக்கிறோம்

சத்தமே கேட்காமல் ஆலயம் எப்படிக் கட்டுவது? அன்றைக்குக் கட்டினார்களே! அப்படியானால் பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் கல் வெட்டப்பட்டது, தாறுமாறாய்க் கிடந்த அந்தக் கல்லைச் செதுக்கினார்கள், அடித்து உருவாக்கினார்கள். ஆலயத்திற்கு வந்தபிறகு அந்தக் கல்லைத் தட்டிப்பார்க்க மாட்டார்கள். சரியான அளவுள்ள கல்லை மட்டும் ஆலயம் கட்டுகிற இடத்திற்குக் கொண்டுவந்தார்கள். சத்தமின்றி ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது.

செதுக்கும் வேலை பரலோகத்தில் இல்லை

தேவனுடைய ஆலயமாகிய பரலோகத்திலே வெட்டுகிறதும் செதுக்குகிறதுமான வேலைகள் எதுவும் இருக்காது. சுத்தியல் சத்தம் அங்கு கேட்காது. பிரசங்க மேடையில் அடித்துப் பேசுவார்களே அப்படிப்பட்ட சத்தம் ஏதும் பரலோகத்தில் கேட்காது. தேவன் புத்தியுள்ள சிற்ப ஆசாரியைப் போல, தேவ ஊழியர்களை வைத்து இந்த பூமியிலேயே செதுக்குகிறார், இடிக்கிறார், கட்டுகிறார். எல்லா வேலைகளையும் இந்தப் பூமியிலேயே செய்து **பணிதீர்ந்த** கற்களையே (பரிசுத்தமாக்கப்பட்டவர்களை மட்டுமே) பரலோகத்திற்கு அனுப்புவார்.

உங்களைச் செதுக்கி, ஆயத்தம் செய்து, ரெடியாக்கிவிட்டால் பரலோக ஆலயத்திலிருந்து **புறப்பட்டுவா** என்று அழைப்பு வந்துவிடும். பரலோகத்தில் பாட்டுப்பாடி, ஆராதனை நடத்தி, செய்தி கொடுத்து, ஜெபித்து உங்களைச் செதுக்குவதற்கு ஐந்து வகை ஊழியர்கள் கிடையாது (எபே. 4:11,12). சுவிசேஷப் பிரசங்கங்கள் கிடையாது. ரெடி பண்ணி, பணி தீர்ந்து அனுப்பப்படும் ஆத்துமாக்களை அப்படியே எடுத்து வாசஸ்தலத்தில் வைத்துக் கூட்டிக் கட்டிவிடுவார். சரியில்லாத, செதுக்கப்படாத கல் அங்கே செல்ல முடியாது.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று பேதுரு தனது நிருபத்தில் குறிப்பிடுகிறார். (1பேதுரு 2:5).

இந்த உலகத்திலே இரண்டு கல்லுகளை இணைக்க சிமெண்ட் வேண்டும். எங்களுடைய பழைய வளாகத்தில் ஒரு கட்டிடம் இருக்கிறது. அங்கே ஒரு செங்கல்லைக் கூட உடைக்க முடியாது. எதை வைத்துக் கட்டினீர்கள் இவ்வளவு வலுவாக இருக்கிறதே என்று அநேகர் கேட்டார்கள். சுண்ணாம்பு வைத்து கட்டியிருந்தபடியால் அத்தனை பெரிய உறுதி.

சுண்ணாம்பினால் கட்டப்பட்டதையே உடைக்க முடியவில்லையென்றால் ஆவியில் கட்டியிருக்கிற உங்களை யாராகிலும் உடைக்கமுடியுமா?

25 வருடங்களாகச் சண்டையே இல்லாத குடும்பம்!

இன்றைக்கு நிறையக் குடும்பங்கள் பலத்தினாலும், பணத்தினாலும், பராக்கிரமத்தினாலும் கட்டப்பட்டு வருகின்றன. வெளிநாட்டில் ஒரு வீட்டில் 25 வருடங்களாகச் சண்டையே இல்லையாம். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? பாஸ்டர் ஒரு நாள் அந்த வீட்டுக்குப் போனார். உங்களுக்குள் சண்டையே போடாமல் எப்படி 25 வருடங்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? இதைக் குறித்து நீங்கள் சபைக்கு வந்து சாட்சி சொல்லுங்கள் என்றார்.

அது ரொம்ப ஈசி பாஸ்டர். இப்போதே சொல்லிவிடுகிறேன் என்று உடனடியாகச் சாட்சி சொல்ல ஆரம்பித்துவிட்டார் அந்தச் சகோதரி.

வெளிநாட்டில், மாப்பிள்ளையும் பெண்ணும் திருமணம் நடைபெறும் ஆலயத்திற்கு அல்லது இடத்திற்கு ஒற்றைக் குதிரை பூட்டிய ரதத்தில் வருவது வழக்கம். அதுபோல இவர்களும் இரண்டு குதிரையில் தனித்தனியே ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள். திருமணம் முடிந்தபின் கணவனுடைய குதிரை பூட்டப்பட்ட ரதத்தில் வீட்டிற்குச் சென்றார்கள்.

அப்படிச் சென்றபோது கொஞ்ச தூரத்தில் மணமக்களை ஏற்றிச் சென்ற குதிரை கீழே படுத்துக்கொண்டது. கணவன், குதிரையைப் பார்த்து: **இது உனக்கு முதல் எச்சரிக்கை.** இப்போது எழுந்து நட என்றபோது அந்தக் குதிரை உடனே எழுந்து நடந்தது. கொஞ்ச தூரம் சென்றதும் மீண்டும் படுத்துக்கொண்டது. உடனே **இது உனக்கு இரண்டாவது எச்சரிக்கை.** எழுந்து நட என்றார் கணவர். அதுவும் உடனே எழுந்து நடந்தது. கடைசியாக பெண்ணும் மாப்பிள்ளையும் தங்கள் வீட்டை நெருங்கினபோது வீட்டு

வாசலில் வந்து மீண்டும் குதிரை படுத்துக்கொண்டது. மனைவி இன்னும் ரதத்தில் இருந்து இறங்கவில்லை. கணவர் மாத்திரம் படுத்துக்கொண்ட தன் குதிரையைவிட்டு இறங்கி நேராக தன்னுடைய வீட்டிற்குள் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துவந்து குதிரையின் மண்டையில் குறிவைத்துச் சுட்டுவிட்டான்.

மனைவி இதைப் பார்த்து அலறினாள். டார்லிங் என்ன இது!

உடனே அவன் அந்தத் துப்பாக்கியை அவளுக்கு நேராகத் திருப்பிச் சொன்னான். **இது உனக்கு முதலாவது எச்சரிக்கை!** (இன்னும் ஒரேயொரு எச்சரிக்கை மட்டுமே இருக்கிறது. அதற்கு அடுத்து இந்தத் துப்பாக்கியில் உள்ள தோட்டா வெடித்துவிடும்).

இந்தச் சம்பவத்திற்குப் பின் அந்த அம்மா 25 வருடங்களாய் வாயையே திறக்கவில்லையாம். அதனால்தான் 25 வருடங்களாய் சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்கிறார்களாம்.

சகரியா அவிசுவாசத்தினால் பேசி 10 மாதம் ஊமையாய் இருந்தார். இந்த அம்மா பயத்தினால் 25 வருடம் ஊமையாகிப்போனார்கள். ஏதாவது பேசினால் துப்பாக்கி அல்லவா பேசும்!

இன்றைக்கு அநேகக் குடும்பங்களின் நிலவரமும் இப்படித்தான் இருக்கிறது. அடக்குமுறையில் மனைவியின் வாயை அடக்கிவிடுகிறார்கள். அவளோ ஊமையாகிப் போகிறாள். வாயைத் திறந்து எதையும் பேச அவளுக்கு அனுமதி கிடையாது. வேண்டுமானால் அம்மா வீட்டை நினைத்து, அப்பாவை நினைத்து மணிக்கணக்காய் அழுதுகொள்ளலாம். நலம் பொலம் எதுவும் சொல்லவோ பேசவோ அனுமதியில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் மௌனமாக்கப்பட்ட மனைவிமார் ஏராளம்.

இப்படிப்பட்ட குடும்பத் தலைவிகள்அநேகர் தங்கள் வாழ்க்கையை வெறுத்துப் பேசுவதை அறிவேன். **என்னசெய்வது இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டேன், பிள்ளைகளுக்காக உயிர்**

வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்பார்கள்! மிரட்டும் கணவனைத் திருமணம் முடித்துக்கொண்டு இப்படி நடைப் பிணங்களாய் வாழ்வோர் ஏராளம்.

பலத்தினால் அல்ல... ஆவியினால் குடும்பத்தைக் கட்டுங்கள்!

அன்பு சகோதரரே, குடும்பத்தை அன்பினாலே கட்டுவீர்களானால் தேவன் அங்கே வாசம்பண்ணுவார். கண்ணீரைத் துடைப்பார், துக்கம் இருக்காது, அலறல், சாபம் இருக்காது. நம்முடைய குடும்பங்கள் அழகினாலோ பணத்தினாலோ அந்தஸ்தினாலோ, கடினமான வார்த்தைகளினாலோ கட்டப்படக்கூடாது. ஆவியினாலே கட்டப்படவேண்டும். அப்போதுதான் தேவன் தங்கும் வாசஸ்தலமாக அது இருக்கும். தேவன் அங்கே உலாவுவார்.

"அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் மனஉருக்கமாயும் தயவாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் மன்னியுங்கள்" (எபே. 4:30-32).

இன்றைக்குச் சில வீடுகளில் கணவனும் மனைவியும் பேசுகிற வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்கவே முடியாது. பிள்ளைகளுக்கு முன்பாக இப்படி வாக்குவாதம் செய்கிறவர்கள் தவறான விதைகளைத் தங்கள் இளம் பிள்ளைகளின் இதயங்களில் விதைத்துவிடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் சபைக்குள் வந்துவிட்டால் அந்நிய பாஷையில் முழங்குகிறார்கள். வீட்டிற்குள்ளே நுழைந்ததும் வாயில் பிறக்கலாகாத தூஷண பாஷையில் முழக்கமிடுகிறார்கள். என்ன இது? இப்படியெல்லாம்

பேசிவிட்டு இயேசுவே என்னையும் ஆசீர்வதியும் என்று ஜெபம் பண்ணுவது எந்தவிதத்தில் நியாயம்? தேவனே "எங்களோடு தங்கியிரும்" என்றால் அவர் எப்படி உங்களோடு **உங்கள் கலவர பூமியில்** தங்கியிருப்பார்?

அருமையானவர்களே நீங்கள் உங்களையே ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடுதான் நமக்குப் போராட்டம் உண்டு. தேவன் உங்களுக்குத் தந்துள்ள வாழ்க்கைத் துணையோடு அல்ல! தேவன் உங்களில் வாசம்பண்ணவேண்டுமானால் கசப்புகளை நீக்கிவிடுங்கள்.

விசனப்படுத்தும் வார்த்தைகள்

கணவன் மனைவிக்குள் கசப்பு, கோபம், தூஷணம் இருக்கலாகாது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாய் இருக்கவேண்டும். தேவன் வாசம்பண்ணுகிற இடத்தில் கண்ணீரைத் துடைப்பார். அன்னாள் அதிக நேரம் அழுதபடியால் கர்த்தர் அவளது கண்ணீரைத் துடைத்தார் என நான் ஆரம்ப நாட்களில் நிறையப் பிரசங்கங்கள் பண்ணியிருக்கிறேன். ஏன் துடைத்தார் என்று சற்றுத் தீர்க்கமாக வாசித்துப்பார்த்தபோது விஷயம் புரிந்தது.

எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்திக்குப் பிள்ளைகள் உண்டு. அன்னாளுக்கோ பிள்ளை இல்லை. பெனின்னாள் அன்னாளை விசனப்படுத்தினாள். இதே சூழ்நிலையில் ஒரு புருஷன் இருந்தால், அவன் யார் பக்கம் நிற்பான்? பெனின்னாளோடு சேர்ந்து கூடுதல் விசனத்தைக் கொடுக்கிறவனாயிருப்பான்.

குழந்தை இல்லை என்ற காரணத்தை வைத்துக்கொண்டு சில கணவன்மார் தங்கள் மனைவியைக் கசந்துகொள்கிறார்கள். இப்படிப்பட்ட விசனப்படுத்தும் வார்த்தைகள் மனைவியை வியாதிக்காரியாக மாற்றிவிடும்.

"ராகேல் யாக்கோபை நோக்கி; எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள்" (ஆதி. 30:1).

அதுபோல அன்னாள் எனக்குப் பிள்ளைகொடும் இல்லாவிட்டால் சாகிறேன் என்று சொல்லி எல்க்கானாவை மிரட்டவில்லை. மாறாக ஆலயத்திற்குப் போய் தன் இருதயத்தை ஊற்றி அழுதாள். எல்க்கானா சிறிதளவும் அவளைக் கசந்து கொள்ளவில்லை என்பதை அவர்களது உரையாடல் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

அன்னாள் அழுதுகொண்டே இருந்தாள். எல்க்கானா கேட்டான், ஏன் அழுகிறாய்? 10 பிள்ளைகளைக் காட்டிலும் நான் அதிகமல்லவா? உருக்கமும் தயவும் ஒன்றுசேர்ந்து இந்த அன்பில் வெளிப்பட்டது. எந்தச் சூழ்நிலையிலும் தன் மனைவியை நேசித்த அந்த எல்க்கானாவின் அன்பையும் எதிர்பார்ப்பையும் அன்னாளின் கண்ணீரையும் கண்ட தேவன் அந்தக் குடும்பத்தின் கண்ணீரைத் துடைத்தார். அன்னாள், தான் கேட்டதின்படியே சாமுவேலைப் பெற்றாள்.

நம்முடைய குடும்பம் எப்படிப்பட்டது? பொதுவாகச் சில வீடுகளில் இப்படிப் பேசுகிறவர்கள் உண்டு. "நீ அழுது அழுதே எங்கள் குடும்பத்தைத் தரித்திரமாக்கிவிட்டாய் (ஏதோ, இவள் வருவதற்கு முன் கோடீஸ்வரர்களாய் இருந்ததுபோல).

இதனால்தான், ஆண்டவரே உன் கண்ணீரைத் துடைக்க வில்லை, நீயும் நம் குடும்பமும் இப்படி இருப்பதற்குக் காரணம் நீயே" என்று பழிசுமத்துகிறவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட விசனப்படுத்தும் வார்த்தைகள் ஒரு மனைவியின் இருதயத்தைச் சுக்குநூறாய் உடைத்து, பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். வியாதிகளை உற்பத்தி செய்யும் இந்த **விஷ விதைகளைப்** போன்ற வார்த்தைகளைக் கணவன்மார் ஒழித்துவிடுவது நல்லது.

விதண்டாவாதம் பேசிப் பேசி அதனால் பற்பல வியாதிகளை உற்பத்தி செய்துவிட்டு அறுவடைக்காக ஆஸ்பத்திரி நோக்கி ஓடுவதால் என்ன லாபம்?

எரிச்சல் என்பது எரிமலை போன்றது

வேதம் சொல்லுகிறது: *"ஒருவருக்கொருவர் மன உருக்கமாயும் தயவாயும் இருந்து மன்னியுங்கள்."*

சகோதரனே, ஒருவேளை ஏதோ ஒரு காரணத்தினால் எரிச்சலோடு இருப்பீர்களானால் உடனடியாக உங்கள் மனைவியை மன்னித்து ஒப்புரவாகிவிடுங்கள். சகோதரியே ஒருவேளை உங்கள் கணவர் மீது காரணமில்லாமல் எரிச்சலோடு இருப்பீர்களானால் எரிச்சலை விட்டுவிட்டு உடனடியாக ஒப்புரவாகிவிடுங்கள்.

கிறிஸ்துவின் சிந்தை உங்களில் காணப்படட்டும். ஒருவரையொருவர் மன்னிக்கும் சுபாவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். யாரும் பூரணர் அல்ல. நாம் எல்லாரும் ஏதாவது ஒரு விஷயத்தில் குறைவுள்ளவர்கள்தான். பூரணத்தை நோக்கிச் செல்லுகிற நாம் தேவையற்ற பாரங்களைச் சுமந்துகொண்டு செல்லக்கூடாது.

சகோதரரே, ஒருவேளை உங்கள் மனைவி தன்னுடைய கவனக்குறைவினால் எவ்வளவோ நஷ்டப்படுத்தியிருக்கலாம். இருப்பினும் அவரை மன்னியுங்கள். தவறுகளைக் குத்திக்காட்டிக்கொண்டே இருக்காதீர்கள்.

தேவன் விரும்புகிற சுபாவங்கள் உங்களில் இருந்தால் தேவன் உங்கள் வீட்டில் வாசம்பண்ணுவார். உங்கள் கண்ணீரைத் துடைப்பார். ஆவியினாலே உங்கள் குடும்பத்தைக் கட்டுங்கள்.

வேதம் சொல்லுகிறது: *"புருஷர்களே, உங்கள் மனைவிகளிலே அன்புகூருங்கள். அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள்"* (கொலோ. 3:19).

கசப்பு எதை உண்டுபண்ணும் என்று கேட்பீர்களானால், நீதிமொழிகள் 6:34-ஐ வாசித்துப் பாருங்கள்.

"ஸ்திரீயைப் பற்றிய எரிச்சல் புருஷனுக்கு மூர்க்கத்தை உண்டுபண்ணும். அவன் பழிவாங்கும் நாளில் தப்பவிடான்".

எரிச்சல் கோபத்தை உண்டாக்கும். கோபம் பழிவாங்கும். வேத புத்தகத்தில் உள்ள பெரிய மனிதர்களைக் கூட இந்தச் சின்ன எரிச்சல் சின்னாபின்னமாக்கியுள்ளது.

காயீனுக்குள்ளே நுழைந்த எரிச்சல் அவனைக் கொலைகாரனாக்கி, வீதிகளிலே அலைந்து திரிகிறவனாக மாற்றிற்று.

சவுலுக்குள்ளே நுழைந்த எரிச்சல் அவனுடைய அபிஷேகத்தை இழக்கப்பண்ணி, ஒரு அநாதையைப் போல கில்போவா மலையில் செத்துக்கிடக்கப்பண்ணிற்று. அந்த எரிச்சல் அவனை மட்டுமல்ல அவனுடைய மூன்று குமாரரையும், அவனுடைய ஆயுததாரியையும், அவனுடைய எல்லா மனுஷரையும் ஒருமிக்க ஒரேநாளில் காலத்துக்கு முன்னே மாண்டுபோகப் பண்ணிற்று (1 சாமு. 31:6).

யோசேப்பின் சகோதரருக்குள்ளே நுழைந்த எரிச்சல் அவர்களைப் பொய்யராகவும் சூழ்ச்சிக்காரர்களாகவும் கொலை வெறி பிடித்தவர்களாகவும் மாற்றிவிட்டது.

தானியேலுடன் பணிசெய்த உயர்தர அதிகார வர்க்கங்களுக்குள்ளே நுழைந்த எரிச்சல் அவர்கள் குடும்பங்களையே நாசமாக்கிவிட்டது.

எரிச்சல் ஒரு மனிதனுக்குள்ளே நுழைந்துவிடுமானால் அது ஒருநாளில் வெடித்துச் சிதறும். பேரழிவை உண்டாக்கும்.

வேதம் சொல்லுகிறது:

"ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்.... எச்சரிக்கையாயிருங்கள்" (எபிரெயர் 12:15).

லட்சியம் வேண்டும். அலட்சியம் வேண்டாம்

கசப்பான வேர் முளைத்தெழும்பக் காரணமாயிருக்கிற கணவனோ அல்லது மனைவியோ இதைக் குறித்துச் சிந்தித்து ஆரம்பத்திலேயே நல்ல தீர்மானங்களை எடுப்பது நல்லது. கசப்பான வேர் முளைத்தெழும்புமானால் கிருபையை இழக்கச்செய்துவிடும். அதோடு மட்டுமல்ல. அது அநேகரை தீட்டுப்படுத்திவிடும், குடும்பத்தில் கலகத்தையும் கலக்கத்தையும் உண்டாக்கிவிடும்.

ஏசாவின் உள்ளத்தில் முளைத்தெழும்பிய கசப்பான வேர் குடும்பத்தையே கலக்கிவிட்டது. உடன் பிறந்தவன் 20 ஆண்டுகள் பிரிந்து வாழ நேரிட்டது. ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மனநோவை உண்டுபண்ணியது.

அணைக்கட்டின் அடித்தளத்தில் விரிசல் ஏற்பட்டுவிட்டால் அதை உடனே சிமெண்ட் வைத்துப் பூசி தண்ணீர் கசியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அஜாக்கிரதையாய் இருந்தால் அணை உடைந்துவிடும், உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதோடுகூட சேமித்துவைக்கப்பட்ட அவ்வளவு நீரும் வெளியேறி வீணாய்ப்போய்விடும். பிறகு என்னதான் அழுதாலும், கமிட்டி அமைத்து விவாதித்தாலும் அணைகடந்த வெள்ளம் திரும்பி வராது.

அதுபோல ஒரு குடும்பத்திற்குள் பிளவுகள் அல்லது விரிசல்கள் முளைத்தெழும்புமானால் உடனடியாக தேவ சமூகத்தில் தங்களைத் தாழ்த்தி, கிருபைக்காக ஜெபிக்க வேண்டும். இல்லையென்றால் உடைந்தபின் இங்குமங்கும் ஓடி, பெரிய ஊழியக்காரர்களிடம் ஜெபிக்கச்சொல்லி, காசு கொடுத்து ஆலோசனை கேட்டாலும் எளிதில் சமாதானம் கிடைக்காது. நித்தமும் போராட வேண்டியிருக்கும். ஏசா நமக்கு ஓர் நல்ல உதாரணம். லட்சியம் வேண்டும். அலட்சியம் வேண்டாம்.

சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுகிற இடத்தில் ஆசீர்வாதமும் ஜீவனும் உண்டு என்று சங்கீதம் 133-ல் வாசிக்கிறோம்.

‘கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்று வேதம் அழைக்கிறது. அவன் தன் கைகளின் பிரயாசத்தைச் சாப்பிடுவான். அவனுக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். அவனது மனைவி அவன் வீட்டோரங்களில் கனி தரும் திராட்சக்கொடியைப் போல் இருப்பாள்; அவன் பிள்ளைகள் அவனது பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் அல்லது கணவன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து அவனை ஆசீர்வதிப்பார். அவன் ஜீவனுள்ள நாளெல்லாம் செழிப்பான வாழ்வைக் காண்பான். அவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் சமாதானத்தையும் காண்பான். ”

ஒன்று சேர்ந்து வாழும் குடும்பங்களைக் கர்த்தர் இவ்விதமாக ஆசீர்வதித்து ஏதேன் தோட்டமாக மாற்ற வல்லவர்.

“செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.”

(சகரியா 4:6).

ஆசிரியரைப் பற்றி...

போதகர் தாமஸ்ராஜ் அவர்கள் 1945-ம் வருடம் ஜூன் 28-ம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாலுமாவடி என்னும் கிராமத்தில் பிறந்தார். தன்னுடைய 21-வது வயதில், வாழ்க்கையில் நம்பிக்கையையும் நிம்மதியையும் இழந்த வாலிபனாக, ரயில் முன் விழுந்து தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தார். அன்றைய தினமே இரவு, இயேசுவின் அன்பின் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்ட அவர், தன்னுடைய பாவ வாழ்க்கையிலிருந்தும், தற்கொலை செய்யும் எண்ணத்திலிருந்தும் பூரண விடுதலை பெற்றார்.

முழு நேர ஊழியத்திற்காக தேவ அழைப்பைப் பெற்றபோது அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் ஸ்தாபகர், போதகர் சுந்தரம் ஐயா அவர்களால் 7 ஆண்டுகள் ஊழியத்திற்காகப் பயிற்றுவிக்கப்பட்டார். போதகர் சுந்தரம் ஐயா அவர்கள் எளிமையாக, உண்மையாக, பாடுகளின் நடுவே அர்ப்பணிப்போடு தேவனுக்கு ஊழியம் செய்ய ஊக்குவித்து வழிகாட்டினார். தாம் கற்றுக்கொண்ட அனுபவங்களை இன்றளவும் மறவாமல், எடுத்துக் கொண்ட பிரதிஷ்டையிலிருந்து விலகாமல் தேவனிடத்திலிருந்து பெற்ற ஊழியத்தை நிறைவேற்றிவருகிறார்.

முன்பு கூலியாளாக வேலை செய்த அதே ஆவடியில் 1973-ம் ஆண்டு சபை ஊழியத்தைப் பொறுப்பேற்க பணிக்கப்பட்டார். அன்று முதல் ஆண்டவர் அவரை உயர்த்தி, அநேக ஆயிரம் மக்களுக்கும், நூற்றுக்கணக்கான போதகர்களுக்கும் தலைவராக வைத்திருக்கிறார். அவருடைய வாழ்க்கை அநேகரை ஊக்குவித்துக் கிறிஸ்துவண்டை நடத்துகிறதாயிருக்கிறது. போதகர்கள் மாநாடுகளிலும், விசுவாசிகளின் மத்தியிலும், பரிசுத்த வாழ்க்கை, சுவிசேஷத்தை அறிவித்தலின் அவசியம், சபை வளர்ச்சி, உத்தமமாக ஊழியம் செய்து, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கென்று ஆயத்தப்படுத்துவது போன்ற சத்தியங்களை வேத வசன ஆதாரங்களுடன் போதித்துவருகிறார்.

இதுவரை இவரது செய்திகள் அடங்கிய புத்தகங்களும், ஆடியோ மற்றும் வீடியோ சி.டி.க்களும் உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழ் கிறிஸ்தவர்களையும், ஊழியர்களையும் கிறிஸ்துவுக்குள் பலப்படுத்திவருகிறது.

50/-
PG/5

ஆசிரியரின் முந்தய வெளியீடுகள்...

பசும்புல் மேய்ச்சல் (பாகம் 1)

பசும்புல் மேய்ச்சல் (பாகம் 2)



அன்புள்ள போதகருக்கு

For copies or bulk orders
contact mobile: +91 93822 17774
Or write to: acaavadi@gmail.com

ஆவியினாலேயே ஆகும்

இந்நூலைப்பற்றி...

தனது 47 ஆண்டு கால ஊழியப்பாதையில் போதகர் தாமஸ்ராஜ் அவர்கள் தேவனுடைய பாதத்தில் அமர்ந்து கற்றுக்கொண்ட, கிருபையாய்ப் பெற்றுக்கொண்ட அருமையும், மேன்மையுமான சத்தியங்களில் சில மட்டும் ஆவியினாலேயே ஆகும் என்ற தலைப்பிலான இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

அப்போஸ்தலர் முதல் போதகர் வரையிலான ஐந்து வகை ஊழியர்களுக்கும், விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளவும், காத்துக்கொள்ளவும் விரும்பும் விசுவாசிகளுக்கும் இந்தப் புத்தகம் ஓர் அரிய பொக்கிஷமாகும்.

மனித பலத்திற்கும், பராக்கிரமத்திற்கும் தேவன் ஒரு எல்லையை நியமித்திருக்கிறார். அந்த எல்லையைத் தாண்டி அவர்களால் ஒன்றையும் சாதிக்க முடியாது என்பதை வேதத்தின் ஆதாரத்தில் விளக்கிக் காண்பித்திருக்கிற விதம் அருமையானது.

ஆவியினாலேயே ஆகும் என்ற வார்த்தையை அடிக்கடி சொல்லியிருக்கிறோம், பாடலாகவும் பாடியிருக்கிறோம். ஆனால் ஆவியினாலே என்னவெல்லாம் ஆகும் என்பதை இந்தப் புத்தகத்தை வாசிக்கும்போது அறியமுடியும். யாருடைய வாழ்க்கையில் தேவன் உலாவுகிறாரோ அவர்கள்தான் தேவனுடைய ஜனங்கள் என்கிற வரிகள் கிறிஸ்தவர்களுக்குத் தரப்படும் புதிய முகவரிகள் என்றே சொல்லவேண்டும்.

போதகர் தாமஸ்ராஜ் அவர்கள் அப்போஸ்தல கிறிஸ்தவ சபை ஆவடி ஊழியத்தின் தலைமை போதகராக 1973-ம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். ஆண்டவர் அவரை உயர்த்தி, அநேக ஆயிரம் மக்களுக்கும், நூற்றுக்கணக்கான போதகர்களுக்கும் தலைவராக வைத்திருக்கிறார்.

போதகர்கள் மாநாடுகளிலும், விசுவாசிகளின் மத்தியிலும், பரிசுத்த வாழ்க்கை, உத்தமமாக ஊழியம் செய்து, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கென்று ஆயத்தப்படுத்துவது போன்ற சத்தியங்களை, வேதவசன ஆதாரங்களுடன் போதித்து வருகிறார்.

Published by:
Apostolic Christian Assembly Avadi Ministry,
#8 Prakasam Street, Bakthavachala Puram,
Avadi, Chennai - 600054. India.
Tel: +91 44 3297 5774 **Mobile:** +91 93822 17774
email: acaavadi@gmail.com **Website:** www.acachurch.org

Watch LIVE! webcast of our services
For more details and resources, log on to:
www.acachurch.org
m.acachurch.org
(for mobile users)
YouTube channel: **ACA Church Avadi**